# ஆண்டறிக்கை

# 2012

## தெங்கு பயிர்ச்செய்கை ச

"கப்துறு பியஸ"

**428/9,**டென்சில் கொப்பகடுவை மாவத்தை,

பத்தரமுல்லை

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அ





# தொலைநோக்கு

இலங்கையை உலகில்
அதிசிறந்த வினைத்திறன்மிக்க
தெங்கு உற்பத்தியாளராக்குதல

# பணிக்கூற்று

இலங்கையின் தேசிய நுகர்வுக்கான
கேள்வி மற்றும் ஏற்றுமதித்
தேவையினை பூரணப்படுத்தி,
தன்னிறைவு நிலைமையினை
அடையும் பொருட்டு செயல்திறன்
மிக்க ஆலோசனை மற்றும்
விரிவாக்கல் சேவையினூடாக தெங்கு
உற்பத்தியை மேலுயர்த்துவதும்,
தென்னங் காணிகளின் செயல்திறனை
மேலுயர்த்துவதன் வாயிலாக தெங்கு
பயிர்ச்செய்கையாளர்கள் உயர்வான
வாழ்க்கைத் தரத்தை அடைவதற்கு
வழி செய்வதே எமது பணிக்கூற்றாகும்.



தெங்கு பயிர்ச்செய்கை சபை

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | 89 |
| தெங்கு பயிர்ச்செய்கை சபையின் அலுவலர் குழாத்தின் கட்டமைப்பு | 91 |
| தெங்கு பயிர்ச்செயகை சபையின் விரிவாக்கல் மற்றும் சேவை வலையமைப்பு | 92 |
| பணிப்பாளர் சபை – 2012 | 93 |
| தவிசாளரின் செய்தி | 94 – 97 |
| தென்னை பயிர்ச்செய்கை சபை தொடர்பில் சுருக்கமாக | 98 – 102 |
| தென்னை பயிர்ச்செய்கை சபையின் சிறப்பான பணிக | 103 – 105 |
| தெங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2012 | 106 – 127 |
| தெங்கு பயிர்ச்செய்கை சபையின் விரிவாக்கல் நடவடிக்கைகள். | 128 – 135 |
| மாதிரி தென்னஞ் சோலை | 136 – 141 |
| மனிதவள முகாமைத்துவம் | 142 – 144 |
| கணக்குவைத்தல் | 145 - 149 |
| உள்ளகக் கணக்காய்வு | 150 - 153 |
| கணக்காய்வாளர் அறிக்கை | 154 – 165 |
| கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பிலான தெளிவுபடுத்தல் | 166 – 171 |

**ஆண்டறிக்கை -2012**

2012 ஜனவரி மாதம் 01ம் திகதி தொடக்கம் 2012 திசம்பர் 31ம் திகதி வரையிலான காலப்பகுதியினுள் தெங்கு பயிரச்செய்கை சபையின் செயற்பாடுகள் இவ்வறிக்கையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## அறிமுகம

1971ம் ஆண்டின் 46ம் இலக்கம் கொண்ட தெங்கு அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 2ம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப 1972ம் ஆண்டின் மார்ச் 03ம் திகதி விநியோகிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப தெங்கு பயிர்ச்செய்கை சபை நிறுவப்பட்டுள்ளது. நாட்டில் தெங்கு பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்காக சபையின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்றினை மிகவும் கிரமமான முறையில் வினைத்திறனுடன் வெற்றிக் கொள்வதற்காக 18 பிராந்திய அலுவலகங்கள், 02 தெங்கு அபிவிருத்திப் பயிற்சி மத்திய நிலையங்கள், 38 நாற்றுமேடைகள், 12 மாதிரி தென்னஞ் சோலைகள் மற்றும் விதையுற்பத்தி அலகு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

தெங்கு அபிவிருத்திச் சபை, 1971ம் ஆண்டின் 46ம் இலக்கம் கொண்ட தெங்கு அபிவிருத்திச் சட்டம் 1ன் கீழ் நாட்டின் தெங்கு பயிர்ச்செய்கை அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் மார்ச் மாதம் 30ம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைக்கு அமைய நிறுவப்பட்டது.

தெங்கு அபிவிருத்திச் சபையின் கடமைகளும் பொறுப்புக்களும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கருத்திற் கொள்ளப்படுகின்றன.

- தெங்கு பயிரிடப்பட்டுள்ள நிலங்களில் உற்பத்தியினை அதிகரித்தல் மற்றும் அதிகரிப்பதற்கு உதவுதல்.

- நிலங்களில் தெங்கு பயிரச்செய்கையை மேற்கொள்ளுதல், அவற்றில் பயிர்ச்செய்கையை விருத்திசெய்தல் மற்றும் முறைமைப் படுத்துவதற்கு உதவிசெய்தல்.

- (புற்கள் உற்பட) ஏனைய பயிர் செய்கைகளில் ஊடு பயிர் செய்கையின் பொருட்டு பொருத்தமான தெங்கு பயிர்ச்செய்கை இடங்களை தெரிவுசெய்தல் மற்றும் அவ்விடங்களில் ஊடு பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டங்களை விருத்திசெய்தல், மேற்பார்வைசெய்தல், நடாத்திச் செல்லுதல் மற்றும் நடாத்திச் செல்வதற்கு உதவிசெய்தல்.

- தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்களில் விலங்கு வேளாண்மையை விருத்திசெய்தல் மற்றும் முறைமைப் படுத்துதல், அவற்றுக்கு உதவிசெய்தலும் ஈடுபடுதலும்.

- தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்களில் தெங்கு மற்றும் வெவ்வேறு வகையான பயிர்களைப் பயிரிடுவது தொடர்பாக பொருத்தமான பயிர்ச்செய்கை முறைமையினை விபரித்தல், பிரபல்யப்படுத்துதல், விருத்திசெய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

- தெங்கு கைத்தொழிலுக்கு உதவிசெய்தல், ஆலோசனை மற்றும் விரிவாக்கல் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல்.

# இலக்கு

- தெங்கு நுகர்வாளர்கள், தயாரிப்பாளர்களின் தேவையினைப் பூரணப்படுத்துவதற்கு போதுமான காய்களின் உற்பத்தி எண்ணிக்கையின் நிலைபேற்றினை உறுதிப்படுத்துவதற்காக தென்னை மரங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- விலங்கு வேளாண்மை / ஊடுபயிர்ச் செய்கையினை பல்வகைப்படுத்துவதனூடாக தென்னை இடங்களின் செயற்றிறன் மற்றும் விவசாய வருமானங்களை அதிகரித்தல்.
- தெங்கு பயிர்ச்செய்கை மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தெங்கு சார் கைத்தொழிலில் ஈடுபடுத்துவதற்காக, சிறு காணி உடமையாளர்களில், மக்கள் அமைப்பினை ஏற்படுத்தி அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி கொடுத்து வறுமையினை நீக்குதல்.
- நாட்டின் உணவு ரீதியிலான கைத்தொழிலுக்கான கேள்வியைப் பூரணப்படுத்துவதற்காக 2016ம் ஆண்டளவில் வருடாந்த தெங்கு உற்பத்திகளை 3,650 மில்லியன் காய்களாக உயர்த்துதல்.
- தெங்கு பயிர்ச்செய்கை சபையின் சகல தென்னந்தோட்டங்களையும், மாதிரி தென்னஞ் சோலைகளாக மாற்றுதலும் 2016ம் ஆண்டில் இலாபத்தை 20% ஆக அதிகரித்தலும்.

# நோக்கம்

- இலங்கையினுள் நிலையான தெங்கு பயிர்ச்செய்கையினை நிறுவுதல்.
- தென்னங் காணிகளில் பொருத்தமான ஊடுபயிர்ச்செய்கையினை மேற்கொண்டு தென்னங் காணிகளின் பயன்பாட்டினை மேலுயர்த்துதல்.
- கப்றுக புறவற நிகழ்ச்சித் திட்டத்தினை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துதல்.
- சேதன மற்றும் அசேதனப் பசளையின் பாவனையை மேம்படுத்துதல்.
- தென்னங் காணிகளில் மண்ணீர் பாதுகாப்பினை மேம்படுத்துதல்.
- பூச்சி மற்றும் நோய்களினால் தெங்கு பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் பாதிப்பினைக் குறைத்தல்.
- தெங்கு பயிர்ச்செய்கையாளர்களின் திறனை அபிவிருத்தி செய்யும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- தெங்கு பயிர்ச்செய்கை சபையின் மாதிரி தென்னஞ் சோலை பயிர்ச்செய்கையாளர்களை, அறிவுறுத்தல் வழங்குவதற்காக இணைத்துக் கொள்ளுதல்.
- கேள்வியினை அடிப்படையாகக் கொண்ட விரிவாக்கல் சேவையினை நடாத்திச் செல்லுதலும் உயர்தரத்திலான உள்ளீடுகளைப் பெற்றுக் கொடுத்தலும்.
- வீட்டுப்பாவனைக்கு, தெங்கு சார் உற்பத்தியாளர்களுக்கு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்குத் தேவையான தேங்காய்களின் எண்ணிக்கையினை நாட்டினுள் உற்பத்திச் செய்தல்.

# தெங்கு பயிர்ச்செய்கை சபையின் அலுவலர் குழாத்தின் கட்டமைப்பு



# தெங்கு பயிர்ச்செயகை சபையின் விரிவாக்கல் மற்றும் சேவை வலையமைப்பு



# பணிப்பாளர் சபை 2012

2012 ம் ஆண்டில் இச்சபையின் தலைவராக திரு.சரத் கீர்த்திரத்ன அவர்கள் கடமையாற்றியதோடு, கீழ் பெயர்க்குறிப்பிடப்படுபவர்கள் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களாக கடமையாற்றினார்கள்.

1. திரு.சரத் கீர்த்திரத்ன - தலைவர், தெங்கு பயிர்ச்செய்கை சபை
2. திரு.டீ.எம்.எல்.பண்டாரநாயக்க - தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு பிரதிநிதி
3. திருமதி.முதிதா அந்ராஹுன்னதி - நிதி அமைச்சு பிரதிநிதி
4. திரு.எச்.ஏ.விமலசூரிய - பணிப்பாளர் சபை அங்கத்தவர்
5. திரு.மொண்டேகு சரத்சந்திர - பணிப்பாளர் சபை அங்கத்தவர்
6. பேராசிரியர்.எச்.பீ.எம்.குனசேன - பணிப்பாளர் சபை அங்கத்தவர்
7. திரு.ரமல் அசோக்க சூரகே - பணிப்பாளர் சபை அங்கத்தவர்
8. வண. லங்காதிலக்க அரியதம்மி சுவாமி- பணிப்பாளர் சபை அங்கத்தவர்
9. திரு.கே.டீ.ஜீ.பிரேமரத்ன - பணிப்பாளர் சபை அங்கத்தவர்
10. திரு. யூ.மஹிந்த சில்வா - பணிப்பாளர் சபை அங்கத்தவர்

# தலைவரின் செய்தி



சரத் கீர்த்திரத்ன,
தலைவர்,
தெங்கு பயிர்ச்செய்கை சபை

இலங்கை அரசினால் நிறுவப்பட்ட அமைச்சரவை அமைச்சுக்களுள், குறிப்பிடக் கூடியதும் மிகவும் சிறப்பானதும் மற்றும் பொதுமக்களால் அடிக்கடி கூறக்கூடியதுமான கடமைகளை நிறைவேற்றிய தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் “கப்றுக நவோதாவ” ஒருங்கிணைப்புத் திட்டமிடலின் உள்ளடக்கத்துக்கு அமைய, தெங்கு பயிர்ச் செய்கை சபை 2012 ம் ஆண்டில் மிகப் பெருமையுடன் காலடி வைத்தது.

2016ம் ஆண்டில் 3,650 மில்லியன் இலக்கு தேங்காய்களின் உற்பத்தி எண்ணிக்கையுடன், தென்னங் காணிகளின் செயற்றிறனை மேலுயர்த்தி தென்னங் காணிகளில் உச்சளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, இவ்வாண்டில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன.

கப்றுக திட்டத்திற்கு மகிந்த சிந்தனையின் மூலம் உயிரூட்டுவதற்காக, கப்றுக சங்கத்தின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் அலரி மாளிகையில் நிறைந்தோடும் வகையில் வரவழைக்கப்பட்டு, தெங்கு பயிர்ச்செய்கை அபிவிருத்திக்கு அரசின் பங்களிப்பினை, நாட்டுத் தலைவரின் மூலமே வெளிப்படுத்துவதற்கு இயன்றமை, தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சிற்கும், தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கும் இவ்வருடத்தில் கிடைத்த பாரிய வெற்றியாகும்.

2016ம் ஆண்டில் இலங்கை முழுவதும் 320 இலட்ச தென்னங் கன்றுகளை நடுகின்ற பாரிய இலக்கினை, குறித்த காலவரையறைக்கு முன்பதாகவே வெற்றிக் கொள்வதற்காக இவ்வருடத்தினுள் 9 மில்லியன் தென்னங் கன்றுகளை

உற்பத்திச் செய்வதற்கு முடிந்தமை பெருமைக்குரிய விடயமாகும். இதன் பொருட்டு எமது அமைச்சின் கௌரவ அமைச்சரின் வழிகாட்டலைப் போன்று ஏனைய சகோதர நிறுவனங்கள் பெற்றுத்தந்த பேருதவிக்கு எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

தேரந்தெடுக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவில், தெங்கு பயிர்ச்செய்கையின் சகல அம்சங்களையும் அபிவிருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு " கப்றுக புறவற" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012ம் ஆண்டில் நாடு முழுவதும் 36 பிரதேசச் செயலகப் பிரிவில் 1,768 கப்றுக சங்கங்களை நிறுவி, 594 மக்கள் நாற்றுமேடையினூடாக 2,700,000 தென்னங் கன்றுகளை உற்பத்திச் செய்து, வலயச் சங்கத்தின் சுற்றோட்ட நிதிக்காக 7 மில்லியன் ரூபாவை பெற்றுக் கொடுத்து, 15 பிராந்திய அலுவலகங்களில் தகவல் மத்திய நிலையங்களை உருவாக்கி, சங்க உறுப்பினர்களின் வியாபாரத்திற்கு உதவும் வகையில் 62 டிமோ பட்டா வாகனங்களை பெற்றுக் கொடுத்து கப்றுக புறவறையை மேலுயர்த்துவதற்கு இவ்வருடத்தினுள் எம்மால் இயன்றுள்ளது.

2011ம் ஆண்டைப் போன்றே " இசுறுமத் நிவஹனக், அசிரிமத் மவ்பிமக்" உருவாக்குவதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு கைகொடுத்த எம்மால் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கிழ் 2.7 மில்லியன் தென்னங் கன்றுகளை நாடு முழுவதும் நடுவதற்கு இவவருடத்தினுள் இயன்றுளள்து.

ஆசிய பசுபிக் தெங்கு சமூகத்தில் எந்தவொரு நாட்டிலும் இடம்பெறாத, பாடசாலை மாணவர்களினூடாக தென்னங் கன்றுகளை நடுகின்ற நிகழ்ச்சித்திட்டமான "கப்றுகள் சிப்ணெனய்" நிகழ்ச்சித்திட்டத்தில் 3 இலட்ச தென்னங்கன்றுகளை விஞ்சி 344,000 தென்னங்கன்றுகள் 6ம் தர பாடசாலை மாணவர்களிடையே தெங்கு பயிர்ச்செய்கை சபை பங்கிட்டது.

இலங்கையில் தென்னங் காணிகளின் அளவினை அதிகரித்துக் கொள்ளுதல் மற்றும் இருக்கின்ற தென்னங் காணிகளின் அளவினை பாதுகாத்துக் கொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் முக்கிய நிகழ்ச்சித்திட்டமான புதிய மீள்/ கீழ் தெங்கு பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் வருடாந்த இலக்காகிய 18,000 ஏக்கரை விஞ்சி 20,000 ம் ஏக்கர் முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இயன்றமை இவ்வருடத்தினுள் பெற்றுக் கொண்ட மற்றுமொரு விசேட வெற்றியாகும்.

விவசாயத் துறையில் 3.5% ம் 4% ற்கு இடையில் குறைந்த வட்டி வீதத்துடன் மற்றும் செலுத்திய வட்டியை திருப்பிப் பெறுகின்ற " கப்றுக முதலீடு" கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 112.6 மில்லியன் ரூபா கடன்கள் தெங்கு பயிர்ச்செய்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுத்து 2,169 ஏக்கரை தெங்கு சார்ந்த விவசாய இடங்காளக மாற்றும் செயற்பாடு இவ்வருடத்தினுள் இடம்பெற்றுள்ளது.

இதற்கு மேலதிகமாக புண்ணிய பூமியில் தென்னங் கன்றுகளை நடுகின்ற நிகழ்ச்சித்திட்டம், தென்னந்தோட்ட புனர்நிர்மாண தென்னங் கன்றுகளை

நடுகின்ற நிகழ்ச்சித்திட்டம், சேதனப் பசளை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம், நீர் விநியோக கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தெங்கு பயிர்ச்செய்கை சபையின் மற்றுமொரு முக்கிய விடயமான தொழில்நுட்ப அறிவு, ஆலோசனை மற்றும் திறனைப் பெற்றுக் கொடுக்கும் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டமும் இவ்வருடத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, அவற்றின் மூலம் நாடு முழுவதும் 7,663 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி தனிநபர் ரீதியில் பயிர்ச்செய்கையாளர்களை சந்திப்பதன் மூலம் 346,804 தெங்கு பயிர்ச்செய்கையாளர்களுக்கு விரிவாக்கல் சேவைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

மேலும் லுனுவில மற்றும் மெதமுலனையில் அமைந்துள்ள எமது பயிற்சி நிலையத்தினூடாக 111 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருப்பதோடு, அவற்றின் மூலம் தெங்கு பயிர்ச்செய்கை அறிவினை 6,621 நபர்கள் பெற்றுக் கொண்டதோடு, வதிவிடப் பயிற்சிக்கு மேலதிகமாக இந்நிலையங்களில் நடாத்தப்பட்ட " தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், அரச அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், பாடசாலை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஆகியவை மக்கள் மனதினை வென்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களாகும்.

தெங்குப் பயிரில் சிவப்பு வண்டினை அழிக்கும் பரமோன் பாவனையை மேற்கொண்டு தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரின் கருத்திற்கு ஏற்ப விசாலமான பிரதேசத்தில் பரமோன் பொறியினை நிறுவும் நிகழ்ச்சித்திட்டம் செவனகலை, ராஜாங்கனை, பொலனறுவை, தம்புத்தேகமை மற்றும் தெய்கத்ஹண்டிய ஆகிய பிர தேசங்களில் வெற்றிகரமாக இடம்பெற்றன.

இலங்கையின் தெங்கு அறுவடையில் 10% - 15% அளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தி இலங்கை முழுவதும் பரவிக் காணப்படுகின்ற " மயிட்டா கிருமிநாசினி" யை ஒழிப்பதற்காக மயிட்டா 04 ஊனுன்னி நிலையங்களை அம்பாறை, முல்லைத்தீவு, வாரியப்பொலை மற்றும் பளை ஆகிய இடங்களில் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு அம்பாறை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தென் பிரதேசத்தில் வெலிகம பிரதேசத்தில் பரவிச்சென்ற வெலி-கமை இலை வாடல் மற்றும் அழுகும் நோய் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் புதிய முறைமையின் கீழ் மேலும் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, அவற்றினூடாக 2012ம் ஆண்டில் நோயினால் நீக்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 80,504 ஆகும். இதற்காக 141 மில்லியன் ரூபா நிதி நட்ட ஈடாக பாதிக்கப்பட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பு நகரை அண்மித்த தெங்கு பயிர்ச்செய்கையாளர்களின் சேவையின் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள தகவல் நிலையத்தினூடாக நகரத்தில் நடுவதற்காக 14,430 தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளதோடு, நகர மக்களின் அன்றாட

தேவைக்கான தேங்காய்களை வழங்குவதற்கு எதிர்காலத்தில் இது சிறந்த வழியாக காணப்படும்.

தேசத்தின் மகுடம் 2012 தேசிய கண்காட்சியை ஒத்த அழகிய சூழலில் அபயகிரி தூபியை நோக்கியவாறு நிறுவப்பட்டுள்ள கட்டுக்கெலியாவை அலுவலரின் சுற்றுலா விடுதியை தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கு வழங்கியமை எமது மற்றுமொரு கனவினை நனவுக்கு கொண்டு வந்தமையாகும்.

தெங்கு சார் உற்பத்தியை மக்களுக்கிடையில் பிரபல்யப்படுத்தும் எண்ணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பத்தரமுல்லை கப்துருபாய 2012 ல் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தியின் கௌரவ அமைச்சரின் கைகளினால் திறந்து வைக்கப்பட்டது.

2011ம் வருடத்தைப் போன்றே 2012ம் ஆண்டில் எங்களுக்கு கிடைத்த பல சவால்களை குறைந்த எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களைக் கொண்டு மிகவும் கஸ்ட்டத்தின் மத்தியில் வெற்றிக் கொண்டோம். இந்நிலையினை முறியடிப்பதற்குத் தேவையான புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கான ஆட்சேர்ப்புத் திட்ட முறைமையினை இவ்வருடத்தினுள் அனுமதித்துக் கொள்ள இயன்றமை விசேட வெற்றியாகும்.

தெங்கு பயிர்ச்செய்கை தொழில்நுட்பத்தினை பிரயோகப்படுத்தி, உயர் தரத்திலான விதைத்தேங்காய்களின் உற்பத்திக்காக மாதிரி அடிப்படையில் நடாத்தப்படுகின்ற மாதிரி தென்னஞ் சோலை, தெங்கு பயிர்ச்செய்கை சபையின் மறைந்துள்ள சக்தியாக இருப்பதோடு. குறிப்பாக வடக்கு, கிழக்கு உற்பட ஏனைய பிரதேசங்களில் மாதிரி தென்னஞ் சோலைகளின் அபிவிருத்தி துரிதமாக மேற்கொள்ளப்பட்டது. வருடத்தினுள் 121 மில்லியன் ரூபா இலாபத்தினை சாதனையாக பெற்றுக் கொள்ள முடிந்தது.

பல்வேறு வகையான சவால்களில் சிறப்பான வெற்றிகளைப் பெற்ற இவ்வருடத்தில் நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றி பெறச் செய்வதற்காக தெங்கு பயிர்ச்செய்கை சபையின் பொது முகாமையார் உள்ளடங்கலாக அனைத்து அலுவலர் குழாத்தினரும் எனக்கு பெற்றுத்தந்த ஒத்துழைப்பும், அமைச்சின் சகோதர நிறுவன தலைவர்கள் உள்ளடங்கலாக அலுவலர் குழாத்தினர் வழங்கிய ஒத்துழைப்பும், தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஏ.பீ. ஜகத் புஸ்ப்பகுமார அமைச்சர் மற்றும் அதன் செயலாளர் உள்ளடங்கிய அலுவலர் குழாத்தினர் பெற்றுத்தந்த ஒத்துழைப்பும் மிகவும் என்னால் மிகவும் உயர்வாக கருதப்படுகிறது.

சரத் கீர்த்திரத்ன
தலைவர்,
தெங்கு பயிர்ச்செய்கை சபை

# தென்னை பயிர்ச்செய்கை சபை தொடர்பில் சுருக்கமாக

| | |
|---|---|
| தலைமையகம் | தென்னை பயிர்ச்செய்கை சபை,<br>'கப்றுக்க பியச'<br>டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,<br>பத்தரமுல்ல,<br>தொலைபேசி :0115 639833, 0115 548998, 0115 549504<br>தொலை நகல் :0115 549507<br>இணைய தளம் :ccb@sltnet.lk—-www.coconut.gov.lk |
| தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிரதேச அலுவலகங்கள் | கம்பஹா பிரதேச அலுவலகம்<br>பென்டியமுல்ல<br>கம்பஹா<br>033-3333037<br><br>களுத்துறை பி.அ<br>நாகொட,<br>களுத்துறை<br>034-2222732<br><br>இரத்தினபுரி பி.அ<br>புதிய நகரம்<br>பிரதான வீதி,இரத்தினபுரி.<br>045-2228561<br><br>மாரவில பி.அ<br>முதுகட்டுவ<br>மாரவில.<br>032-2254237<br><br>மொனராகல பி.அ<br>குலந்தாவ தெற்கு<br>மொணராகல<br>055-2276058<br><br>அம்பாறை பி.அ<br>தர்மபால மாவத்த<br>கச்சேரி முன்பாக, அம்பாறை.<br>063 – 22223477<br><br>மாத்தளை பி.அ<br>கச்சேரி தொகுதி,<br>மாத்தளை.<br>066-2222047<br><br>மாத்தறை பி.அ<br>331/9, அநாகரிக்க தர்மபால மாவத்த<br>கூபே,மாத்தளை.<br>041-2222060<br><br>பொலநறுவை பி.அ<br>புதிய நகரம்<br>பொலநறுவை.<br>027-2222377<br><br>திருகோணமலை பி.அ<br>புல்மோட்டை வீதி<br>கும்புறுப்பிட்டி,<br>திருகோணமலை<br>026-3207044<br><br>யாழ்ப்பாண பிரதேச அலுவலகம்<br>இல – 595 / 10,<br>நாவலர் வீதி<br>நல்லூர் -<br>யாழ்ப்பாணம்.<br>021-2226014<br><br>குளியாபிட்டி பி.அ<br>இல - 20<br>பன்னல வீதி,<br>குளியாப்பிட்டி.<br>037-2281169<br><br>கேகாலை பி.அ<br>கண்டி வீதி<br>கரட்டுபத்த,<br>கேகாலை.<br>035-2222120<br><br>காலி பி.அ<br>லபுதுவ,<br>அக்மீமன் - காலி.<br>091-2234501<br><br>குருணாகல் பி.அ<br>வெகர<br>குருணாகல<br>037-2222534<br><br>அனுராதபுரம் பி.அ<br>கட்டம் III<br>தகய்யாகம சந்தி,<br>அனுராதபுரம்.<br>025-2222543<br><br>அம்பாந்தோட்டை பி.அ<br>இல – 27<br>தங்காலை வீதி,<br>அம்பாந்தோட்டை.<br>047-2220144<br><br>மட்டக்களப்பு பி.அ<br>மயிலம்பாவெளி,<br>தன்னாமுனை<br>மட்டக்களப்பு.<br>065-2240103 |

| | | |
|---|---|---|
| தென்னை அபிவிருத்தி அலுவலர் | தென்னை அபிவிருத்தி அலுவலர்கள் 325 | |
| தென்னை அபிவிருத்தி அலுவலர் பிரிவுகள் | தென்னை அபிவிருத்தி அலுவலர்கள் 325 | |
| தென்னை நாற்று பண்ணைகள் - 38 | கிரிந்திவெல தெ.நா.ப<br>கிரிந்திவெல<br>033-2267704 | கிரிமெட்டியான தெ.நா.ப<br>கிரிமெட்டியான, லுணுவில.<br>031-2257504 |
| | எரம்மிணிகொல்ல தெ.நா.ப<br>கிரிவட்டுன்ன.<br>035-2265806 | விய்பொத்த தெ.நா.ப<br>வில்பொத்த, பத்துளு ஓயா<br>032-5671077 |
| | மத்தமகொட தெ.நா.ப<br>மத்தமகொட, கனன்தொட்ட<br>035-2289105 | விய்பொத்த தெ.நா.ப<br>வில்பொத்த, பத்துளு ஓயா<br>032-5671077 |
| | கொரப்திரவ்வ தெ.நா.ப<br>கொரப்திரவ்வ, வாத்துவ<br>038-2295126 | அட்டவில்லுவதெ.நா.ப<br>அட்டவில்லுவ, புத்தளம்.<br>032-5670793 |
| | இப்பாகமுவ தெ.நா.ப<br>தோரயாய, இப்பாகமுவ<br>037-2235776 | மெதமுலன தெ.நா.ப<br>மெதமுலன,வீரக்கெட்டிய<br>047-2246359 |
| | தொடம்கஸ்யந்த தெ.நா.ப<br>பிலவத்தல வத்த, தொடம்கஸ்லந்த<br>037-2252625 | அம்பிலிப்பிட்டிய தெ.நா.ப<br>பாத்தேகம, வெலிகம<br>047-2230569 |
| | வாரியபொல தெ.நா.ப<br>வாரியபொல<br>037-2267691 | வேலிகம தெ.நா.ப<br>பாத்தேகம, வெலிகம.<br>041-2252336 |
| | நிக்கவரெட்டிய தெ.நா.ப<br>நிக்கவரட்டிய<br>037-3988035 | பத்தேகமட தெ.நா.ப<br>பெவிருவத்த<br>கல்பகொட, பத்தேகம.<br>091-2292745 |
| | வெண்னோருவ தெ.நா.ப<br>முத்துகல வத்த, வென்தோருவ<br>037-2249836 | பல்லேகலைதெ.நா.ப<br>பல்லேகலை, கெங்கல்ல<br>081 – 5740595 |
| | பொல்கவலை தெ.நா.ப<br>பகல தியதொற, பொல்கவலை<br>037-2244367 | ஊகன தெ.நா.ப<br>பாலம் முகாம், உகன.<br>063-2632167 |
| | பிங்கிரிய தெ.நா.ப<br>பிரசன்னகம, பிங்கிரிய<br>032-2246425 | பராக்கிரம சமுத்திர தெ.நா.ப<br>ரிச்சட் அலுவிகார பூங்கா,<br>போலந்றுவை.<br>027-2224304 |
| | கெட்டிம்பொல தெ.நா.ப<br>மலகனே, கெட்டிப்பொல<br>037-2291332 | உல்கிட்டிய தெ.நா.ப<br>உல்கிட்டிய, கிராந்துருக்கோட்டை<br>027-2179230 |
| | கந்தெட்டிய தெ.நா.ப<br>கந்தெட்டிய<br>மாக்கந்துறை, கோணவில்.<br>031-2299938 | |

குலாவெவ தெ.நா.ப
கலாவெது
விஜிதபுர
025- 2264194

கந்தப்பானாகல் தெ.நா.ப
எத்திலிவெவ
கந்தபானாகல.
055-2274665

வெலிபிட்டிய் தெ.நா.ப
வெலிப்பிட்டிய வத்த
கன்னபுராவ
055-2265720

மயிலம்பாவெளி தெ.நா.ப
மயிலம்பாவெளி
செங்கலடி
தன்னாமுனை.
065-2240924

கும்புறுப்பிட்டி தெ.நா.ப
பிரதான வீதி,
கும்புறுப்பிட்டி,
திருகோணமலை.
026-3207042

அச்சுவேலி தெ.நா.ப
வசாவிளான் வீதி,
அச்சுவேலி,
யாழ்ப்பாணம்.

வள்ளிபுனம் தெ.நா.ப
வள்ளிபுனம்
புதுக்குடியிருப்பு.

அளம்பில் தெ.நா.ப
அளம்பில்,
முல்லைத்தீவு.

முகயாய தெ.நா.ப
மாகந்துர,
கோணவில்.

மயுரபுர தெ.நா.ப

கிளிநொச்சி தெ.நா.ப
பன்னங்கண்டி
கிளிநொச்சி.

## மாதிரி விதை தென்னந் தோட்டங்கள் 12

மகயாய மாதிரி தென்னந்தோட்டம்
மகாந்துர
கோணவில்.
081-2299781

கா்ட்லன்ட் மாதிரி தென்னந்தோட்டம்
நாமிரித்தன் கடவற
வெலிபென்ககமுல்ல
027 – 4330928

டெசிவெலி மா.தெ.தோ
மாவத்தகம.
037 – 3379418

கொகொம்பான மா.தெ.தோ
கொனாகொல்ல
063 – 3622186

ரன்தெணிய மா.தெ.தோ
வாரியபொல
037 – 4923041

கோரை மா.தெ.தோ
திருக்கோவில்.
068 – 3694530

லேனவ மா.தெ.தோ
கிரியால
லேவை.
037 – 4934189

முந்தலம மாதிரி தென்னந்தோட்டம்
முந்தல்
032 – 2224301

போபிட்டிய மா.தெ.தோ
கு / போபிட்டிய
037 – 2288611

பாசிக்குடா மா.தெ.தோ
கல்குடா
065 – 3659028

நாகன்சோலை மா.தெ.தோ
வன்னி,
ரத்நாயக்கபுர
037 – 3975050

பளை மா.தெ.தோ
பளை
021 – 3201380

| | |
|---|---|
| பயிற்சி நிலையங்கள் 02 | தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையம்<br>பண்டரிப்புவ வத்த,<br>லுணுவில.<br>031 – 2255048<br><br>தக்சண லங்கா தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையம<br>மெதமுலன<br>வீரக்கெட்டிய<br>047 - 2257634 |
| நிரந்தர ஆளணி 925 | பொது முகாமையாளர் - 01<br>பிரதி பொது முகாமையாளர் - 04<br>உதவி பொது முகாமையாளர் - 08<br>பிரதேச முகாமையாளர்கள் மற்றும் விடய முகாமையாளர்கள - 36<br>உதவி முகாமையாளர்கள் - 82<br>மொழி பெயர்ப்பாளர்கள் - 02<br>முகாமைத்துவ உதவியாளர்கள (தொழிநுட்பம்) - 365<br>முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழிநுட்பம் சாராத) - 276<br>ஆரம்ப தர பணியாளர்கள் - 151 |
| விதை உற்பத்தி அலகு | விதை உற்பத்தி அலகு<br>இல – 19<br>கம்மிட்ட வீதி<br>நீர்கொழும்பு<br>031 – 2236119 |
| தென்னை கலாச்சார பூங்கா | தென்னை கலாச்சார பூங்கா,<br>பாசிக்குடா மாதிரி தென்னந்தோட்டம்,<br>கல்குடா<br>065 – 2059224 |
| அலுவலர் விடுதி | அனுராதபுரம் அலுவலர் விடுதி,<br>அனுராதபுரம் பிரதேச அலுவலகம்,<br>தென்னை பயிர்ச்செய்கை சபை,<br>திட்டம் III, தகய்யாகம சந்தி<br>அனுராதபுரம்<br>025 – 3243554<br><br>போபிட்டிய அலுவலர் விடுதி, |

போபிட்டிய மாதிரி தென்னந்தோட்டம்

கு / போபிட்டிய

037 – 2288601

பளை அலுவலர் விடுதி

பளை மாதிரி தென்னந்தோட்டம்,

பளை.

021- 2059013

கந்தபானாகல அலுவலர் விடுதி

கந்தபானாகல தென்னை நாற்று பண்ணை

வெகெரயாய

055 – 2274665

பாசிக்குடா அலுவலர் விடுதி

பாசிக்குடா மாதிரி தென்னந்தோட்டம்,

கல்குடா.

065 – 2050224

கதிர்காமம், நிலாவெளி ஆகிய இடங்களில் உத்தியோகபூர்வ விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

**அலுவலர் விடுதி**

மகாயாய மாதிரி தென்னந்தோட்டம்
மாகந்தூர
கோணவில
031 – 2299781

தென்னை பயிர்ச்செய்கை சபை
கப்றுக்க பியச,
டென்சில் கொப்பேகடுவ மாவத்த,
பத்தரமுல்ல.
0115 – 639833

அம்பாறை, போபிட்டிய, டெசிவெலி ஆகிய இடங்களில் புதிய விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

# தென்னை பயிர்ச்செய்கை சபையின் சிறப்பான பணிகள்

**சா்வதேச தெங்கு நாள்**

2012 ஆண்டில் சா்வதேச தெங்கு நாள் நினைவுகூரப்பட்டு தென்னை அபிவிருத்தி, மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சின் அமுல்படுத்தலில் அலரிமாளிகை யில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் சிறப்பாக பொறுப்புகளை நிறைவேற்றிஅ ண்ணளவாக 6000 தெங்கு செய்கையாளா்கள் கப்றுக்க சங்கங்கள் ஊடாக தலைநகருக்கு அழைத்துவருவதற்க்கும், அவா்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கி, ஏற்பாடு செய்து எமது பலத்தை வெளிக்காட்ட எம்மால் முடிந்தது.

**‘ தேசத்திற்கு மகுடம்’ கண்காட்சியில் 4ம் இடம்**

2012 ஆண்டில் அனுராதபுரம் ஒயாமடுவவில் நடைபெற்ற தெயட்ட கிருல கண்காட்சியில் அமைச்சை வெற்றியடைய செய்யவைத்து, கண்காட்சியில் 4ம் இடத்தை பெறத் தேவையான முன்னோடி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. 2012 ஆண்டில் அனுராதபுரம் ஒயாமடுவவில் நடைபெற்ற தெயட்ட கிருல கண்காட்சியில் அமைச்சை வெற்றியடைய செய்யவைத்து, கண்காட்சியில் 4ம் இடத்தை பெறத் தேவையான முன்னோடி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

**123 மில்லியன் ரூபா தேறிய இலாபம் அரச நிதி ஓட்டத்திற்க்கு**

உயா்ந்த முகாமைத்துவ தரத்தில் தென்னை பயிா்ச்செய்கை சபைக்குரிய மாதிரி தென்னந்தோட்டங்களிலிருந்து 123 மில்லியன் ரூபா தேறிய இலாபம் இந்த ஆண்டின் பெறப்பட்டு, அதனை அரச நிதியோட்டத்தில் சோ்க்க முடிந்தது.

**புதிய ஆட்சேர்ப்பு விதிமுறை அங்கீகரிப்பு**

பல ஆண்டுகளாக அங்கீகரிக்கப்படாதிருந்த நிறுவனத்தின் புதிய ஆட்சோ்ப்பு விதிமுறை அங்கீகரிக்க செய்யப்பட்டதன் மூலம் அண்ணளவாக 50% வெற்றிடங்களை நிரப்புதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**9 மில்லியன் தென்னம்பிள்ளைகள் உற்பத்தி**

2016 இல் 32 மில்லியன் தென்னைகள் எனும் இலக்கை அடையும் நோக்குடன் வரலாற்றில் முதல்தடவையாக அதனை இலக்காக 9 மில்லியன் தென்னம்பிள்ளைகள் உற்பத்தி மற்றும் பயிா்ந்தளித்தல்.

**வெலிகம தென்னோலை அழுகல் நோய் முகாமைத்துவம்**

வெலிகம தென்னோலை அழுகல் நோய் முகாமைத்துவ செயற்திட்டத்தின்கீழ் 2008 ஆண்டிலிருந்து இதுவரையும் அகற்றப்பட்ட தென்னைகள் தொடா்பில் ஆகக் கூடியளவாக 80,000 தென்னைகள் இந்த ஆண்டில் முழுமையாக அகற்றப்பட்டது.

**கப்றுக்க புரவர செயற்திட்டம்**

தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி கௌரவ அமைச்சரின் எண்ணக்கருவுக்கமைய ஆரம்பிக்கப்பட்ட கப்றுக்க புரவர செயற்திட்டத்தின் கீழ் 36 கப்றுக்க புரவரவாக மாற்றப்பட்டதுடன் அதன்மூலம் அனைத்து தென்னை செய்கையாளர்கள் மற்றும் கைத்தொழில் துறையினரின் ஒருமைப்பாட்டுடன் 1768 கப்றுக்க சமூக சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

**325 தென்னை அபிவிருத்தி அலுவலர் பதவிகள**

தென்னை அபிவிருத்தி, மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி கௌரவ அமைச்சரின் முயற்சியின் பெறுபேறாக 160 ஆகவிருந்த அலுவலர் பதவிகள் 325 அதிகரித்தமை மற்றும் அதற்கமைய தென்னை அபிவிருத்தி அலுவலர்களை ஆட்சேர்க்க தொடங்கியமை.
அலுவலர்களின் நேரம் உழைப்பு, செலவு ஆகியவற்றை குறைத்து சபைக்குரிய மாதிரி தென்னந்தோட்டங்களின் விபரமான தரவுகளை நாளாந்தம் இணையத்தளம் ஊடாக நாடுபூராகவும் சேகரித்து, பின்னூட்டலுடனான கட்டமைக்கப்பட்ட செயற்பாட்டு கட்டமைப்பை நிறுவுவதற்க்கு பங்களித்தல்.

**வலைப்பின்னல் ஆக்கப்பட்ட செயற்பாட்டு கட்டமைப்பு**

அலுவலர்களின் நேரம் உழைப்பு, செலவு ஆகியவற்றை குறைத்து சபைக்குரிய மாதிரி தென்னந்தோட்டங்களின் விபரமான தரவுகளை நாளாந்தம் இணையத்தளம் ஊடாக நாடுபூராகவும் சேகரித்து, பின்னூட்டலுடனான கட்டமைக்கப்பட்ட செயற்பாட்டு கட்டமைப்பை நிறுவுவதற்க்கு பங்களித்தல்.

**இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்**

சபையின் அனைத்து பிரதேச அலுவலகங்கள் மாதிரி தென்னந்தோட்டங்கள் மற்றும் நாற்றுப்பண்ணைகளில் பற்றாக்குறையாக உள்ள இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை பகிந்தளித்து, அதனூடாக சபையின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை அதிகரிக்கும் நோக்குடன் 12 உழவியந்திரங்கள், 19 உழவியந்திர பெட்டிகள், 4 இருசக்கர உழவியந்திரங்கள், 4 உந்துருளிகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களாக 20 கணணிகள், 12 தொலைநகல் கருவிகள், 10 நிழற்பிரதி கருவிகள், 07 பல்லூடக கருவிகள், கொண்டு செல்லக்கூடிய கருவிகள், கொண்டுசெல்லக்கூடிய கணணி தரவு சேமிப்பு தட்டுக்கள் -10 (External Storage) 15 கெட்போன்கள், 15 புரொஜக்டர் ஸ்கிரீன், 15 வெப் கேம், 11 யு.பி.எஸ், 09 பல்நோக்கு கணணி அச்சியந்திரங்கள், 10 ஒளிப்பட கருவிகள் வழங்கப்பட்டன.

**கிழக்கு மாகாண திருகோணமலை மாவட்டத்துடன் இணைந்ததாக புதிய பிரதேச அலுவலகம்**

வடக்கு மாகாணத்தில் ஒரு பிரதேச அலுவலகமாக அதுவரையும் இருந்த யாழ்ப்பாண பிரதேச அலுவலகத்துக்குரிய முல்லைத்தீவு மாவட்டம் போர் முடிவடைந்து சமாதானம் ஏற்பட்ட பின்னர் கிழக்கு மாகாண திருகோணமலை மாவட்டத்துடன் ஒருங்கிணைந்து புதிய பிரதேச அலுவலகத்தை அமைத்து முன்னோடி செயற்பாட்டை ஆரம்பித்தமை. அதன் படி திருகோணமலை மாவட்டத்தின் கும்புறுப்பிட்டி பிரதேசத்தில் புதிய பிரதேச அலுவலகம் திறக்கப்பட்டது.

**புத்தாண்டுக்காக மலிவு விலை கறித்தேங்காய் விற்பனை**

சிங்கள, இந்து புத்தாண்டு பண்டிகைக்காக பொதுமக்களின் தேங்காய் தேவைகளை பூர்த்தி செய்வதற்க்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து நாடுபூராவும் நடாத்தப்பட்ட புத்தாண்டு சந்தைகளுடாக மலிவு விலையில் கறித்தேங்காய் விற்பனை செய்தல்.

| | |
|---|---|
| **மைட்டா விலோபித்த இனப்பெருக்கம் ஆய்வுகூடம் அம்பாறைக்கும்** | நாடு பூராவும் பரவியுள்ள மைட்டா பீடை நோயை ஒழிப்பதற்க்காக மைட்டா விலோப்பித்த இனப்பெருக்க ஆய்வுகூடம் நிறுவும் கருத்திட்டதில் அம்பாறை மாவட்டத்தில் இனப்பெருக்க ஆய்வுகூடம் அம்பாறை பிரதேச அலுவலகத்துடன் இணைந்ததாக ஆரம்பிக்கப்பட்டது. |
| **சிவப்பு பூச்சி பீடை முறை புதுப்பாதையில்** | பெரமோன் பயன்பாட்டின் மூலம் சிவப்பு பூச்சி பீடை முறை புதுபாதையில் பயன்படுத்தி பெரும் பரப்பு உள்ளடங்கக்கூடியவாறு சிவப்பு பூச்சி ஒழிப்பு கருத்திட்டம் பொலநறுவை மகாவலி வலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. |
| **சிவப்பு பூச்சி பீடை முறை புதுப்பாதையில 2006 தொடக்கம் 2011 வரையான வருடாந்த அறிக்கை2012ம் ஆண்டில்** | பல்வேறு காரணங்களால் வெளியிட முடியாதிருந்த 2006 தொடக்கம் 2011 ஆண்டு வரையான வருடாந்த அறிக்கை 2012 ஆண்டில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. |
| **விசேடமான தென்னந்தோட்டங்கள** | தென்னை பயிர்ச்செய்கை சபைக்குரிய மாதிரி விதை தென்னந்தோட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட விசேடமான தென்னந்தோட்டங்களாக லேனவ, டெசிவெலி, ரந்தெணிய, நாகன்சோலை ஆகிய தோட்டங்கள் பௌதீக ரீதியான பயனுள்ள அலகுகளாக மேம்படுத்தப்பட்டது. |
| **தகவல் நிலையம** | நாடுபூராவுமுள்ள தென்னை செய்கையாளர்களும், தெங்குசார் உற்பத்தியாளர்களும் தெங்கு துறை தொடர்பான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்க்கு பிரதேச அலுவலக மட்டத்தில் தகவல் நிலையங்களை நிறுவுதல் ஆரம்பிக்கப்பட்டது. |
| **அலுவலர்களின் மனப்பாங்கு, அறிவு, திறன் அபிவிருத்தி** | அலுவலக மட்டத்திலான அனைத்து அலுவலர்கள், வெளிக்கள அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, அவர்களது மனப்பாங்கு, அறிவு, திறனை அபிவிருத்தி செய்து, அதனூடாக வினைத்திறன் விளைதிறனை தரமுயர்த்துவதற்க்கான பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டது. அதன்படி முகாமைத்துவ உதவியாளர் தர அலுவலர்கள் 120 பேருக்கும், தொழிநுட்பமட்ட அலுவலர்கள் 388 பேருக்கும் தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையத்தினூடாக பயிற்றுவிக்கப்பட்டனர். |
| **2600 சம்புத்தத்வ ஜயந்தி நிகழ்ச்சித்திட்டம்** | 2600 சம்புத்தத்வ ஜயந்தி நிகழ்ச்சித்திட்டத்தோடு இணைந்ததாக விகாரை நிலங்களில் தென்னம்பிள்ளைகள் நடுகை செய்யும் செயற்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு ஏனைய மத நிறுவனங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. |

# 1. தெங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2012

தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கு, கிடைத்த திறைசேரி ஒதுக்கீட்டு பெறுவனவிற்கு ஏற்ப தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட "கப்றுக நவோதாவ" தேசிய தெங்கு அபிவிருத்தி திட்டமிடலின் பிரகாரம் 2012ம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்பபடுத்தப்பட்டன.

1. தென்னங் கன்று உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்
2. கப்றுக புறவற நிகழ்ச்சித்திட்டம்
3. திவிநெகும வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம்
4. கப்றுகய் சிப்ணெனய் நிகழ்ச்சித்திட்டம்
5. 5 ஏக்கருக்கு குறைவான காணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
6. புண்ணிய பூமி நிகழ்ச்சித்திட்டம்
7. தெங்கு நில புனர்நிர்மாண நிகழ்ச்சித்திட்டம்
8. சேதனப் பசளை மேம்பாட்டிற்காக தென்னை நிலங்களில் மாட்டுத் தொழுவம் அமைப்பதற்கான மாணிய நிகழ்ச்சித்திட்டம்
9. தென்னங் காணிகளில் குழாய் மூலம் நீரை விநியோகிப்பதற்கான கட்டமைப்பை நிறுவுதல்.
10. கப்றுக கடன் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்
11. விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் புதிய தொலைநோக்கு மற்றும் பதிய கருத்து திட்டமிடலுக்கு ஏற்ப 2016ம் ஆண்டில் 320 இலட்சம் தென்னங் கன்றுகளை நடுகின்ற பாரிய இலக்கினை அடைவதற்காக தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் 2012ம் ஆண்டில் தென்னங் கன்றுகள் உற்பத்தியின் இலக்காகிய 9 இலட்சம் தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்ய இயன்றமை மிகவும் பாரிய வெற்றியாகும். ஆறு வருடங்களினுள் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்கு 04 வருடங்களினுள் அதாவது 2014 ல்



அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு விநியோகிப்பதற்காக தயார்படுத்தப்பட்டுள்ள தென்னங் கன்றுகளின் தொகுதியொன்று



ஜப்பான் பிரதிப் பிரதம அமைச்சர் அச்சுவேலி தென்னங்கன்று நாற்று மேடையை பரீட்சித்தல்

நிறைவேற்றும் சவாலை வெற்றிக் கொள்வதன் ஆரம்பப் படிமுறை இதுவாகும்.

இந் நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான விதைத் தேங்காய்கள், தெங்கு பயிர்ச்செய்கை சபை, தெங்கு ஆராய்ச்சி நிறுவகம், புத்தளம் பெருந்தோட்டக் கம்பனி, தேசிய கால்நடை வளங்கள் சபை உயர்தரமான தணியார் தென்னங் காணிகளில் விதைத் தேங்காய்களை தேர்வு செய்யும் முறைமைக்கு இணங்க, தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தரத்திலான தாய் மரங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன.

தெங்கு பயிர்ச்செய்கை சபையின் 38 தென்னங்கன்று நாற்றுமேடைகள், மாதிரி தென்னஞ் சோலையினால் நிர்வகிக்கப்படும் 12 தென்னங்கன்று நாற்று மேடைகள், தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களின் தென்னங் கன்று நாற்று மேடைகள் மற்றும் “கப்றுக புறவற” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மக்கள் தென்னங்கன்று நாற்று மேடைகள் விதை நாற்று மேடைகளிலிருந்து மிகச்சிறந்த தென்னங்கன்றுகள் தெரிவு செய்யப்பட்டு பயிர்ச் செய்கையாளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

நீர்க்கொழும்பில் அமைந்துள்ள விதைத் தேங்காய் உற்பத்தி அலகினால், இந்த வருடாந்த மொத்த தென்னங் கன்றுகளின் உற்பத்திக்குத் தேவையான 12.8 மில்லியன் விதைத் தேங்காய்கள், நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள நாற்று மேடைகளுக்கு குறித்த நேரத்தில் விநி-யோகிக்கப்பட்டு இந் நிகழ்ச்சித்திட்டம் முகாமை செய்யப்பட்டது. இந்த விதைத் தேங்காய்களை பெற்றுக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தின் போது, உயர்தர விதைத் தேங்காய்களை தெரிவு செய்வதற்கு விதைத்தேங்காய் அலகினால் விசேட கடமைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு உற்பத்திச் செய்யப்பட்ட தென்னங்கன்றுகள், சிறந்த திட்டமிடலின் மூலம் தெங்கு பயிர்ச்செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பயிர்ச்செய்கையாளர்களுக்கு விநி-யோகிக்கப்படுவதோடு ஏனைய கன்றுகள் நிவாரண விலையான நிலக்கன்று ரூபா: 75.00 ற்கும், உறையிடப்பட்ட கன்று ரூபா:150.00 ற்கும் விற்பனை செய்யப்பட்டன. இக்கன்றுகளை பயிர்ச்செய்கையாளர்களுக்கு விநி-யோகிக்கப்பட்டிருக்கும் முறை அபிவிருத்தி

## 1.1.2 தெங்கு பயிர்ச்செய்கை சபையின் தென்னங்கன்று நாற்றுமேடைகள்

நாடு முழுவதும் சபையினால் 38 தென்னங் கன்று நாற்றுமேடைகள் நடாத்தப்படுகின்றன. இந் நாற்று மேடைகளில் உற்பத்திச் செய்யப்படுகின்ற தென்னங்கன்றுகளை தரத்தில் உயர்ந்த சிறந்த கன்றுகளாக பயிர்ச்செய்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதே நோக்காகும். இச்செயற்பாடுகளின் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றன.

- உயர்தரத்தில் விதைத் தேங்காய்களை தேர்ந்தெடுத்தல்.
- நாற்றுமேடை முகாமைத்துவம்.
- உயர்தர கன்றினை உற்பத்திச் செய்தல்.



தெங்கு பயிர்ச்செய்கை சபையின் அச்சுவேலி தென்னங்கன்று நாற்று மேடையின் காட்சியொன்று

தெங்குப் பயிர்ச்செய்கையின் வருடாந்த கன்றுகளின் தேவைக்கேற்ப குறித்த வருடத்திற்கு தேவையான விதைத் தேங்காய்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றன. பின்னர், அவ்விதைத் தேங்காய்கள் நாடு முழுவதிலுமுள்ள நாற்று மேடைகளுக்கு, அவற்றுள் நிலவுகின்ற நாற்றுமேடை போக்கு, தொழிலாளர்களின் கிடைப்பனவு, கிடைக்கும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கருத்திற் கொண்டு பிறகு அவ்வவ் நாற்றுமேமைகளுக்குரிய விதைத் தேங்காய்களின் எண்ணிக்கை விநியோகிக்கப்படுகின்றன. 2012 சிறு போகத்தில் நாற்றுமேடை மற்றும் மாதிரி தென்னஞ்சோலைகளில் இருக்கின்ற நாற்று மேடைகளுக்கு 2,725,849 விதைத் தேங்காய்களும், பெரும் போகத்தில் 5,787,624 விதைத்தேங்காய்களும் மொத்தமாக வருடத்திற்கு 5,713,473 விதைத் தேங்காய்கள் அனுப்பப்பட்டுள்ளன.

நாடு முழுவதிலும் எமது சபைக்குரிய 18 பிராந்திய அலுவலகங்கள் இயங்குவதோடு, அப்பிராந்திய அலுவலகங்களின் எல்லையிலுள்ள நாற்று மேடைகளின் கன்று உற்பத்திகள் பின்வருமாறு

# தென்னங்கன்று நாற்று மேடைகளின் கன்று உற்பத்தியும் விநியோகமும் (2012.12.31 ம் திகதி வரை)

| மாவட்டம் / பிராந்திய அலுவலகம் | நாற்றுமேடையின் பெயர் | கன்று உற்பத்தி | | கன்று விநியோகம் | |
|---|---|---|---|---|---|
| | | **நிலக்கன்று** | **பொதியிடப் பட்ட கன்று** | **நிலக்கன்று** | **பொதியிடப்ப ட்ட கன்று** |
| இரத்தினபுரி மா/ இரத்தினபுரி பிரா.அ | எம்பிலிப்பிட்டிய | 62,600 | 57,671 | 45,845 | 45,419 |
| குருநாகல் மா / குருநாகல் பிரா.அ | நிக்கவரட்டி | 55,615 | 67,060 | 71,817 | 50,341 |
| | வென்னருவை | 37,696 | 42,133 | 39,564 | 26,274 |
| | வாரியபொல | 50,666 | 28,523 | 52,279 | 26,140 |
| | பொல்காவலை | 47,160 | 53,695 | 38,035 | 19,707 |
| | தொடம்கஸ்லந்தை | 23,142 | 94,168 | 19,074 | 29,861 |
| | இப்பாகமுவை | 140,715 | 104,578 | 147,305 | 81,096 |
| குருநாகல் மா / குளியாபிட்டிய பிரா.அ | கந்தெடிய | 64,909 | 47,953 | 63,543 | 28,017 |
| | தியதொர | 60,247 | 30,005 | 62,403 | 26,044 |
| | மஹயாய | 87,912 | 48,714 | 73,799 | 20,759 |
| | ஹெட்டிப்பொலை | 64,890 | 46,240 | 41,502 | 18,199 |
| | பிங்கிரிய | 58,487 | 91,205 | 62,773 | 52,972 |
| மாத்தளை, கண்டி, நுவரலியா மா/மாத்தளை பிரா.அ | பல்லேகலை | 51,246 | 51,017 | 47,648 | 38,249 |
| காலி மா/ காலி பிரா.அ | பத்தேகமை | 75,960 | 44,545 | 70,499 | 34,176 |
| | லபுதுவ | | 16,017 | | 11,164 |
| கேகாலை மா/ கேகாலை பிரா.அ | எரமினிகொல்லை | 60,273 | 25,443 | 58,043 | 20,567 |
| | மத்தமகொடை | 63,669 | 20,060 | 60,263 | 13,157 |
| கம்பஹா மா/ கம்பஹா பிரா.அ | கிரிந்திவெலை | 118,888 | 24,096 | 80,658 | 11,615 |
| | வல்பிட்ட | 60,159 | 46,889 | 58,952 | 26,099 |
| அம்பாந்தோட்டை மா/ அம்பாந்தோட்டை பிரா.அ | மெதமுலன | 134,298 | 40,250 | 105,564 | 24,524 |
| | மயூரபுர | 4,760 | | 4,760 | |
| களுத்துறை மா/ களுத்துறை பிரா.அ | கொரோஸ்துவ | 94,559 | 56,439 | 89,964 | 38,970 |
| யாழ்ப்பாண மா ./ யாழ்ப்பாண பிரா.அ | அச்சுவேலி | 167,371 | - | 158,715 | - |
| | கிளிநொச்சி | 96,532 | | 54,968 | |
| | அலம்பில் | 120,828 | 4,800 | 50,978 | 1,052 |
| | வல்லிபுர | 96,118 | | 5,170 | |
| அநுராதபுரம் மா/ அநுராதபுரம் பிரா.அ | கலாவெவை | 68,177 | 49,185 | 55,157 | 29,762 |
| பொலனறுவை மா/ பொலனறுவை பிரா.அ | உள்ஹிட்டிய | 92,878 | 27,255 | 78,503 | 7,956 |
| | பராக்கிரம சமுத்திரம். | 99,908 | 48,091 | 82,448 | 17,800 |
| மட்டக்களப்பு மா / மட்டக்களப்பு பிரா.அ | மயிலம்வேலி | 111,597 | 19,632 | 95,483 | 18,066 |
| திருகோணமலை, முல்லைத்தீவு மா./ திருகோணமலை பிரா.அ | கும்புறுப்பிட்டி | 124,392 | 5,530 | 124,392 | 5,530 |
| மொனராகலை மா/ மொனராகலை பிரா.அ | ஹந்தபானகலை | 195,073 | 22,678 | 74,012 | 14,561 |
| | வெலிபிட்டிய | 44,640 | 20,639 | 42,605 | 4,612 |
| புத்தளம் மா/ மாரவில பிரா.அ | கிரிமெட்டியான | 63,444 | 74,654 | 63,018 | 48,929 |
| | அட்டவில்லுவ | 38,454 | 35,674 | 34,966 | 25,976 |
| | வில்பொத்தை | 63,129 | 73,144 | 47,973 | 54,838 |
| அம்பாறை மா/ அம்பாறை பிரா.அ | உஹன | 105,498 | 25,025 | 105,498 | 28,000 |
| மாத்தறை மா./ மாத்தறை பிரா.அ | வெலிகமை | - | 23,302 | - | 4,860 |
| **மொத்தம்** | | 2,905,890 | 1,466,310 | 2,368,176 | 905,292 |

## 1.1.3 மாதிரி தென்னஞ் சோலைகளின் தென்னங் கன்று உற்பத்தி

தென்னங்கன்றுகளின் உற்பத்தியை மேலுயர்த்துவதன் மூலமாக தேசிய தெங்கு இலக்கினை 2016ல் 3650 மில்லியன் காய்கள் வரை அதிகரிப்பதனை நோக்காகக் கொண்டு சபையின் சகல மாதிரி தென்னஞ் சோலைகளில் தென்னங் கன்றுகள் இவ்வருடத்தில் உற்பத்திச் செய்யப்பட்டன

| மாதிரி தென்னஞ் சோலை | நாற்று மேடையின் பெயர் | கன்று உற்பத்தி | | கன்று விநியோகம் | |
|---|---|---|---|---|---|
| | | நிலக் கன்று | பொதியிடப்பட்ட கன்று | நிலக் கன்று | பொதியிடப்பட்ட கன்று |
| போபிட்டிய | போபிட்டிய | 46,536 | 55,350 | 46,536 | 50,958 |
| டெசிவிலி | டெசிவிலி | 123,959 | 56,494 | 79,211 | 24,227 |
| கர்ட்லண்ட் | கர்ட்லண்ட் | 114,746 | 47,386 | 101,986 | 34,683 |
| கொஹொம்பான | கொஹொம்பான | - | 138,373 | 18,062 | 12,880 |
| கொரேய் | கொரேய் | 69,138 | 30,498 | 62,468 | 18,910 |
| லேன்வ | லேன்வ | 104,041 | 96,592 | 82,864 | 77,000 |
| மஹயாய | மஹயாய | 218,045 | 35,548 | 156,208 | 29,154 |
| முந்தல் | முந்தல் | 13,350 | 14,000 | - | 10,026 |
| நாகன்சோலை | நாகன்சோலை | 40,110 | 18,985 | 52,121 | 13,269 |
| ரன்தெனிய | ரன்தெனிய | 114,598 | 88,895 | 88,050 | 27,501 |
| பாசிக்குடா | பாசிக்குடா | 87,566 | 30,453 | 34,819 | 7,535 |
| பளை | புளை | 211,360 | 2,148 | 9,330 | 1,271 |
| மொத்தம் | | **1,143,449** | **614,722** | **731,655** | **307,414** |

## 1.1.4 மக்கள் தெங்கு நாற்றுமேடை அமைத்தல்

கப்றுக புறவற மக்கள் தெங்கு நாற்று மேடையின் மூலம் அப்பிரதேசத்திலேயே தெரிவு செய்யப்பட்ட உயர்தரத்திலான விதைத் தேங்காய்களிலிருந்தே தென்னங் கன்றுகள் உற்பத்திச் செய்யப்படுகின்றன. 2012ம் ஆண்டில் சிறிய மற்றும் பெரும் போகம் இரண்டிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட விதைத் தேங்காய்களின் எண்ணிக்கை 4,195,315 ஆகும். இக்கருத்திட்டத்தின் மூலம் கப்றுகபுறவறையின் கீழ் அமைகப்பட்டுள்ள, நிலையான தென்னந்தோட்டங்களை நடாத்திச் சென்ற காணி உரிமையாளர்கள் தமது அறுவடைத்



தேங்காய்களை விதைத் தேங்காய்களாக விற்பனை செய்வதன் மூலம் உயர் வருமானத்தைப் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் மக்கள் தென்னை நாற்று மேடைகளிலிருந்தும் 2012ம் ஆண்டில் உற்பத்திச் செய்யப்பட்ட 2,803,221 தென்னங் கன்றுகளுக்கான விதை நாற்று மேடை மற்றும் நடாத்திச் செல்வதற்காக கன்றொன்றுக்கு ரூபா: 20 செலவளிக்கப்பட்டு தெங்கு பயிர்ச்செய்கை சபையின் மானிய பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டது.

விதைத் தெங்கு நாற்று மேடை அமைத்தல் மற்றும் பராமரித்தலுக்காக 56.064 மில்லியன் ரூபா நிதி மக்கள் விதைத்தெங்கு நாற்று மேடையாளர்களுக்கு வழங்கப்பட்டன. இதன் மூலம் தங்களது தென்னங் காணிகளை சிறந்த முறையில் பராமரித்துச் செல்லும் காணி உரிமை யாளர்களுக்கு மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. இதற்கிணங்க தெங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட மக்களுக்கு 56.064 மில்லியன் ரூபாய்க்களை வருமானமாக பெற்றுக் கொள்ள முடிந்தது.

**கப்றுக புறவற மக்கள் தெங்கு நாற்றுமேடையின் ஊடாக தென்னங் கன்று உற்பத்தி**

| மாவட்டம் | நாற்று செய்யப்பட்ட விதைகளின் எண்ணிக்கை | 2012 திசம்பர் 31ம் திகதி வரை விநியோகிக்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை | 2013 ஜனவரி மற்றும் பெப்ரவரியில் விநியோகிக்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை | விநியோக சதவீதம் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 142,720 | 91,965 | 8,055 | 70% |
| களுத்துறை | 53,875 | 34,753 | 3,850 | 72% |
| மாத்தளை | 114,025 | 50,278 | 29,540 | 70% |
| அநுராதபுரம். | 129,430 | 50,021 | 34,108 | 65% |
| கம்பஹா | 471,777 | 309,892 | 25,327 | 71% |
| கேகாலை | 122,022 | 40,910 | 44,505 | 70% |
| குளியாப்பிட்டிய | 493,198 | 282,744 | 58,770 | 69% |
| கண்டி | 55,509 | 34,202 | 4,655 | 70% |
| பதுளை | 159,320 | 15,777 | 64,078 | 50% |
| புத்தளம் | 343,965 | 198,809 | 32,085 | 67% |
| மட்டக்களப்பு | 148,957 | 44,985 | 23,446 | 46% |
| இரத்தினபுரி | 131,450 | 65,101 | 26,914 | 70% |
| அம்பாந்தோட்டை | 228,693 | 117,970 | 42,115 | 70% |
| மோனராகலை | 369,758 | 124,524 | 101,302 | 61% |
| மாத்தறை | 54,309 | 34,201 | 4,640 | 72% |
| காலி | 140,570 | 98,367 | 1,142 | 71% |
| அம்பாறை | 212,834 | 105,730 | 43,254 | 70% |
| பொலனறுவை | 119,906 | 55,665 | 28,270 | 70% |
| திருகோணமலை | 37,906 | 27,725 | 0 | 73% |
| யாழ்ப்பாணம். | 53,100 | 27,965 | 564 | 54% |
| குருநாகலை | 482,009 | 287,050 | 50,356 | 70% |
| வவுனியா | 20,000 | 0 | 14,000 | 70% |
| கிளிநொச்சி | 20,000 | 0 | 7,000 | 35% |
| முல்லைத்தீவு | 90,000 | 0 | 45,000 | 50% |
| மொத்தம். | 4,195,315 | 2,098,634 | 692,976 | 66.5% |

கப்றுக புறநெையின் ஊடாக தெங்கு பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012ம் ஆண்டில் பயிர்ச்செய்கைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள இலக்கு கன்றுகளின் எண்ணிக்கை 3 இலட்சமாவதோடு அதன் கீழ் 1,599,679 கன்றுகள் பயிர்ச்செய்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

## 1.1.5. மொத்த தென்னங் கன்றுகளின் உற்பத்தி




*தெங்குப் பயிர்செய்கை சபையின் ஒதுக்கீட்டின் அடிப்படையில் தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் புத்தளம் பெருந்தோட்டக் கம்பனி மற்றும் குருநாகலை பெருந்தோட்டக் கம்பனிக்குரிய மேற்படி எண்ணிக்கையிலான தென்னங் கன்றுகள் உற்பத்திச் செய்யப்பட்டன.

| தென்னங் கன்று நாற்றுமேடை | நிலக்கன்று | பொதியிடப்பட்டக் கன்று | மொத்தம் |
|---|---|---|---|
| தென்னங் கன்று நாற்றுமேடை | 2,905,890 | 1,466,310 | 4,372,200 |
| மாதிரி தென்னஞ் சோலை | 1,143,449 | 614,722 | 1,758,171 |
| மக்கள் தென்னங்கன்று | 2,803,221 | - | 2,803,221 |
| *புத்தள பெருந்தோட்டக் கம்பனியில் பெற்றுக் கொண்ட கன்றுகள் | 491,080 | - | 491,080 |
| *குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியில் பெற்றுக் கொண்ட கன்றுகள் | 312,136 | - | 312,136 |
| மொத்தம் | 7,655,776 | 2,081,032 | 9,736,808 |

## 1.1.6 தென்னங் கன்றுகளின் விநியோகம் . (2012.01.01– 2012.12.31வரை)






## 1.2 கப்றுக புறவற நிகழ்ச்சித்திட்டம்



2012ம் ஆண்டில் கப்றுக புறவற நிகழ்ச்சித்திட்டம் 36 பிரதேச செயலகப் பிரிவினுள் நடைமுறைப் படுத்தப்பட்டது. இதனது முக்கியமானதும் முதலாவதுமான நிகழ்ச்சித்திட்டமாக நாடு முழுவதிலுமுள்ள கிராம சேவகர் பிரிவு-களை அடிப்படையாகக் கொண்டு 1768 அடிப்படைச் சங்கங்கள் நிறுவப்பட்டன. இவ் வடிப்படை சங்கங்களை ஒருங்கிணைத்து 129 வலய சங்கங்கள் அமைக்கப்பட்டன. இவ்வாறு அமைக்கப்பட்ட அடிப்படைச் சங்கங்களுக்கு வலுச்சேர்ப்பதற்காக 36 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதோடு, அதனூடாக பிரதேசத்தில் நிலவுகின்ற தெங்கு கைத்தொழிலுடன் தொடர்புடைய பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டன. இப்பிரச்சினைகளளைத் தீர்ப்பதற்காக 36 கப்றுக புறவறையினுள் கீழ்க்குறிப்பிடப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

தென்னங் கன்றுகளின் தேவையினை நிறைவேற்றுவதற்காக கப்றுக புறவறையினுள் 594 மக்கள் தென்னங்கன்று நாற்றுமேடைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, இதன் பொருட்டு 4,195,315 விதைத் தேங்காய்கள் இலவசமாக நாற்றுமேடையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டன. இம் மக்கள் தென்னங் கன்று நாற்றுமேடைகளில் 2,710,078 தென்னங் கன்றுகள் உற்பத்திச் செய்யப்பட்டன. இத் தென்னங் கன்றுகள் தெங்கு பயிர்ச்செய்கை சபையின் மூலம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டதோடு கப்றுக புறவற வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக 1,599,679 பங்கிடப்பட்டன. கப்றுக புறவற சங்கத்தின் அங்கத்தவர்களது தென்னந் தோட்டங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு வலய மட்டத்தில் நாடு முழுவதிலும் 98 மாதிரி தென்னஞ் சோலைகள் அமைக்கப்பட்டன.

நாடு முழுவதும் அமைந்துள்ள 15 பிரதேச அலுவலகங்களில் தகவல் மத்திய நிலையம் நிறுவப்பட்டதோடு அம்மத்திய நிலையங்களுக்கு 08 மில்லியன் பெறுமதியான விஞ்ஞான உபகரணங்கள் பெற்றுக கொடுக்கப்பட்டன. 2013ம் ஆண்டில் இந் நிலையங்கள் நெணசல நிலையங்களினூடாக இணையத்தளத்துடன் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனூடாக கப்றுக புறவற சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு தெங்கு சார்ந்த கைத் தொழில் தொடர்பான தகவல்களை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும். சுற்றோட்ட நிதியினை ஆரம்பிப்தற்காக 37 வலய சங்கங்களுக்கும் ரூபா:7,035,000.00 பெற்றுக கொடுக்கப்பட்டதோடு, இந்நிதியினூடாக அடிப்படை சங்கத்திற்கான நுண் கடன் நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

கப்றுக சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டன. இங்கு தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் மூலம் கப்றுக சங்கத்தின் பொருளாளர்கள் 2249எண்ணிக்கையினருக்கு 53 நிகழ்ச்சித்திட்டங்களினூடாக கடன் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அதேபோல், தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தினால் விவசாய பாடசாலை முறைமை தொடர்பாக கப்றுக சங்க அங்கத்தவர்கள் 543 நபருக்கு 12 பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களின் ஊடாக பிரயோக பயிற்சியொன்றும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக தெங்கு சார்ந்த கைத்தொழில்களை



தெங்கு சார்ந்த கைத்தொழில் களை ஆரம்பிப்பதற் காக இலங் கை வங்கியினூ டாக குறைந்த வட்டியின் கீழ் 62 டிமோ பட்டா வாகனங்கள்.

*கப்றுக புறவை-றயின் கீழ் தெங்கு சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களு க்கு தங்களது உற்பத்தி தொடர்பான விளம்பரமும் சந்தையும்*



ஆரம்பிப்பதற்கு இலங்கை வங்கியினூடாக குறைந்த வட்டி வீதத்தின் கீழ் 62 டிமோ பட்டா வாகனங்கள் பெற்றுக கொடுக்கப்பட்டன. அத்துடன் விலங்குளின் பாதிப்பை தவிர்த்துக் கொள்வதற்காக குறைந்த விலையின் கீழ் 600 காற்று துப்பாக்கிகள் வழங்கப்பட்டன.

கப்றுக சங்க அங்கத்தவர்களின் அறிவு, பண்பு, திறன் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்வதற்காக பயிர் சிகிச்சை உள்ளடங்கலாக தெங்கு சார்ந்த கைத்தொழில் கண்காட்சிகள் நாடு முழுவதும் கப்றுக புறவற 09 ல் நடாத்தப்பட்டன. இதன் மூலம் கப்றுக புறவறையினுள்ள தெங்கு சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது உற்பத்தி தொடர்பான பிரச்சாரமும் சந்தையும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

தெங்கு சார்ந்த சுற்றுலா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கப்துருபாய விற்பனை மத்திய நிலையமொன்று தலைமை அலுவலகத்தில் திறந்து வைக்கப்பட்டதோடு டெசிவெலித் தோட்டத்தில் நிறுவப்படும் கப்துருபாயயின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# பிரதேச செயலக மட்டத்தில் கப்றுக புறவறையின் முன்னேற்றம்-1

| பிரதேச அலுவலகம் | | ஆரம்ப சங்கம் அமைத்தல் | வலய சங்கம் அமைத்தல் | சுற்றோட்ட நிதிக்காக பணத்தினை பெற்றுக் கொடுத்தல் | |
|---|---|---|---|---|---|
| | | முன்னேற்றம் (சங்கங்களின் எண்ணிக்கை) | முன்னேற்றம் (சங்கங்களின் எண்ணிக்கை) | வலய சங்கம் எண்ணிக்கை | பெற்றுக் கொடுத்த நிதி தொகை (ரூபா) |
| 1 | குருநாகல் | 130 | 10 | 5 | 1,050,000.00 |
| 2 | குளியாப்பிட்டிய | 144 | 12 | 4 | 780,000.00 |
| 3 | கம்பஹா | 361 | 25 | - | - |
| 4 | முாரவில | 80 | 7 | - | - |
| -5 | கோகாலை | 78 | 6 | - | - |
| 6 | இரத்தினபுரி | 89 | 8 | - | - |
| 7 | களுத்துறை | 125 | 9 | 8 | 1,665,000.00 |
| 8 | குாலி | 55 | 4 | - | - |
| 9 | மாத்தறை | 83 | 3 | 4 | 720,000.00 |
| 10 | அம்பாந்தோட்டை | 105 | 7 | 5 | 900,000.00 |
| 11 | மோனராகலை | 136 | 11 | 3 | 555,000.00 |
| 12 | மாத்தளை | 114 | 8 | 3 | 405,000.00 |
| 13 | அநுராதபுரம். | 38 | 3 | - | - |
| 14 | பொலனறுவை | 28 | 2 | - | - |
| 15 | மட்டக்களப்பு | 39 | 3 | 3 | 585,000.00 |
| 16 | அம்பாறை | 33 | 3 | 2 | 375,000.00 |
| 17 | யாழ்ப்பாணம் | 92 | 6 | - | - |
| 18 | திரு கோணமலை | 38 | 2 | - | - |
| மொத்தம் | | **1,768** | **129** | **37** | **7,035,000.00** |

# பிராந்திய அலுவலக மட்டத்தில் கப்றுக புறவைறயின் முன்னேற்றம் 2

| பிராந்திய அலுவலகம் | களத்தில் மாதிரி நிறுவதல் | தெங்கு நாற்று மேடையின் எண்ணிக்கை | நாற்று செய்யப்பட்ட மொத்த விதைகளின் எண்ணிக்கை | தென்னங் கன்று விநியோகம் | குறைந்த வட்டியின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்ட லொறிகளின் எண்ணிக்கை | பெற்றுக் கொடுக்கப் பட்ட காற்று துப்பாக்கிகளின் எண்ணிக்கை | பயிர் சிகிச்சை மற்றும் கைத்தொழில் கண்காட்சியை நடாத்துதல் |
|---|---|---|---|---|---|---|---|
| குருநாகல் | 5 | 65 | 482,009 | 193,476 | 2 | 52 | 1 |
| குளியாப்பிட்டிய | 13 | 54 | 493,198 | 248,999 | 10 | 22 | 1 |
| கம்பஹா | 0 | 28 | 471,777 | 134,925 | 2 | 51 | |
| முாரவில | 8 | 39 | 343,965 | 91,167 | | 10 | |
| கோகாலை | 4 | 28 | 122,022 | 46,960 | 3 | 27 | |
| இரத்தினபுரி | 10 | 14 | 131,450 | 51,306 | | 21 | |
| களுத்துறை | 16 | 31 | 196,577 | 72,479 | 4 | 156 | 1 |
| காலி | 5 | 11 | 140,570 | 68,200 | 1 | 20 | |
| மாத்தறை | 2 | 14 | 54,309 | 63,454 | 9 | 30 | 1 |
| அம்பாந்தோட்டை | 5 | 33 | 228,693 | 44,731 | 9 | 20 | 1 |
| மோனராகலை | 11 | 117 | 529,078 | 177,670 | 12 | 46 | 1 |
| மாத்தளை | 4 | 38 | 169,534 | 85,435 | 8 | 25 | 1 |
| அநுராதபுரம். | 5 | 28 | 129,430 | 45,334 | | 20 | |
| பொலனறுவை | 2 | 24 | 119,906 | 40,649 | 2 | 60 | |
| மட்டக்களப்பு | 2 | 10 | 148,957 | 76,557 | | 20 | 1 |
| அம்பாறை | 5 | 33 | 212,834 | 45,129 | | 20 | 1 |
| யாழ்ப்பாணம் | 1 | 13 | 93,100 | 46,441 | | | |
| திரு கோணமலை | 0 | 14 | 127,906 | 69,246 | | | |
| **மொத்தம்** | **98** | **594** | **4,195,315** | **1,602,158** | **62** | **600** | **9** |

## 1.3 திவிநெகும வீட்டுத்தோட்டப் பயிர்செய்கை நிகழ்ச்சித்திட்டம்



இலங்கையில் வீட்டுப் பொருளாதார அலகினை பத்து இலட்சமாக அதிகரித்து அவ் வீட்டு அலகுகளை தண்ணிறைவாக்கி நாட்டினை அபிவிருத்தி செய்வதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கன்று பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்திற்கு தெங்கு பயிர்ச்செய்கை சபை உயர் ஒத்துழைப்பினை பெற்றுக் கொடுத்தது. இது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் விசேட மதிப்பீட்டுக்கு உள்ளாகியதோடு 2012ம் ஆண்டினுள் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்திற்காக விநியோகிக்கப்பட்ட தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை 2,821,407 ஆகும். அது திவிநெகுமையின் கீழ், தென்னங்கன்று விநியோக இலக்காகிய 4 மில்லியனுடன் ஒப்பிடும்போது 71% ஆகும்.

திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட தென்னங் கன்றுகளின் பெறுமதி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நிதியீட்டம் செய்யப்படுவதோடு இலக்குக் கொள்ளப்பட்ட நிதி 300 மில்லியன் ரூபாவகும். இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் பிரதேச செயலகம் வரை தென்னங் கன்றினை போக்குவரத்துச் செய்வத்றகாக மற்றும் தென்னங்கன்றுகளை விஞ்ஞான ரீதியில் நடுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக கன்றினைப் பெற்றுக கொண்ட பயிர்ச்செய்கையாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். இதன் பொருட்டு 2012ம் ஆண்டில் கன்று போக்குவரத்துச் செலவாக தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் 13.74 ரூபா மில்லியன் செலவழிக்கப்பட்டுள்ளன.

திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் உயர் முன்னேற்றம் குருநாகல் பிராந்திய அலுவலகத்தினால் காட்டப்பட்டதோடு, மொத்த வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது அது 15.98 % ஆகும். முறையே புத்தளம், மொனராகலை, மாத்தளை பிராந்திய அலுவலகங்கள், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களிலான வளர்ச்சியினைக் காட்டியுள்ளன.

**திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தில் பிராந்திய அலுவலக மட்டத்தில் கன்று விநியோகம்**



## 1.4 கப்றுகய் - சிப்ணெனய் நிகழ்ச்சித்திட்டம்



தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தியின் கௌரவ அமைச்சர் ஏ.பீ. ஜகத் புஸ்ப்பகுமார அவர்களின் எண்ணத்திற்கு அமைய 2012ம் ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாட்டின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் வீட்டுத்தோட்டத்தில் தென்னங் கன்றுகள் 1-2 வரை பயிர்ச்செய்வதற்கு போதுமான காணியுடன் 06ம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக உறையிடப்பட்ட தென்னங்கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

தென்னங் கன்றினை விநியோகிக்கும் அதேவேளை கன்றின் வளர்ச்சியை பதிவதற்கான அறிக்கை புத்தகமொன்றும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கம் பாடசலை மாணவர்களுக்கு தெங்கு பயிர்ச்செய்கை தொடர்பான அக்கறைறைய ஏற்படுத்துவதும், பாடசாலைக் குழந்தைகளை நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் தேசிய உற்பத்தியின் தரப்பினராக்குவதும், வீட்டுத்தோட்டத்தில் தென்னங் கன்றொன்றினை நடுதல் மற்றும் அதனை சிறந்த முறையில் பராமரித்தலின் ஊடாக குழந்தைகள் உற்பட பெற்றோர்களிடம் தெங்கு பயிர்ச்செய்கை தொடர்பாக அக்கறையினை ஏற்படுத்துவதும், வீட்டுக்குத் தேவையான தேங்காய்களை வீட்டுத்தோட்டத்திலேயே பெற்றுக கொள்வதும் ஆகும்.

6ம் தரத்தில் கல்வி பயிலும் மாணவனொருவன் தென்னங் கன்றினை பெற்றுக் கொள்வதால் 5 வருடங்களின் பின்னர் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் அதேவேளை, இத் தென்னங்கன்றானது காய்க்கும் வயதினை எட்டிவிடும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்



5 வருடங்களுக்குப் பிறகு மிகவும் வெற்றிகரமான முறையில் தென்னங் கன்றினை பராமரித்த மாணவர்கள் மாவட்ட ரீதியில் தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் உயர்தரக் கல்விக்காக புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது.

தெங்கு பயிர்ச்செய்கைக்கு பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடன், தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இந்நிகழ்ச்சித்திட்டம் ஆசிய பசுபிக் தெங்கு மக்களின் சர்வதேச மாநாட்டில் விசேட மதிப்பீட்டுக்கு உள்ளாகியுள்ளது.

2012ம் ஆண்டினுள் இந் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பிராந்திய அலுவலகங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட மொத்த இலக்கு தென்னங்கன்றுகள் 300,000 ஆகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 4141 பாடசாலைகளிலுள்ள 174,818 மாணவர்களுக்கு 343,881 தென்னங் கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. இலக்குடன் ஒப்பிடும்போது மொத்த வளர்ச்சி 114.6%ஆகும். கப்றுகய் சிப்ணெனய் நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதி மதிப்பீடு 59.00 மில்லியன் ரூபாவாவதோடு 2012ம் வருடத்தில் 59.90 மில்லியன் ரூபாக்கள் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளன.

## 01.05 ஏக்கருக்கு குறைவான தெங்கு பயிர்ச்செய்கையாளருக்கான மானிய நிகழ்ச்சித்திட்டம்.

1/4 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரையிலான காணிகளில் தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு இந்த மானியமுறை நடைமுறைப்படுத்தப்படுவதோடு, அதன் கீழ் பயிர்ச்செய்கையாளருக்கு தேவையான இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்கப்படுகின்றன. கன்றினை விநியோகிப்பதற்கு முன்னராக கன்றினை நடுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுப்பதோடு, அனைத்து பயிர்ச்செய்கையாளர்களும் விஞ்ஞான ரீதியில் தெங்கு பயிர்ச்செய்கை தொடர்பாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

2012ம் ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கு 18,000 ஆனதோடு, 20,076 ஏக்கர் வளர்ச்சி கிடைத்துள்ளன. அதன் பொருட்டு 1,284,886 தென்னங் கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. பௌதிக இலக்குடன் ஒப்பிடும்போது 111.5% முன்னேற்றம் கிடைத்துள்ளன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 97.96 மில்லியன் ரூபாவாகும்.





புதிய தெங்கு பயிர்ச்செய்கையொன்று

## தெங்கின் புதிய/மீள்/கீழ் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்



## 1.6 புண்ணிய பூமிகளில் தெங்கு பயிர்ச்செய்கை மானிய நிகழ்ச்சித்திட்டம்



2011ம் ஆண்டில் 2600 வது ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு விசேட நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அதன் மூலம் பாஞ்சாலைகளுக்குரிய இடங்களில் தெங்கு பயிரச்செய்கை மேற்கொள்வதற்கு பங்களிப்பு வழங்கப்பட்டது. 2012ல் பன்சலை உள்ளடங்கலளவாக ஏனைய புண்ணியஸ்தலங்களுக்குரிய (கத்தோலிக்க திருச்சபை, இந்து கோவில், முஸ்லிம் பள்ளிவாசல்) காணிகளில் தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு இந்நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. புண்ணிய பூமி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலக்காக 25,000 தென்னங் கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு, இலக்கினை விட அதிகரித்து 25,887 தென்னங் கன்றுகள் வருடத்தினுள் விநி-யோகிக்கப்பட்டுள்ளன. பேளதிக இலக்குடன் ஒப்பிடும்போது பெற்றுக் கொண்ட முன்னேற்றம் 103.54 % ஆகும். இதன் பொருட்டு 2.125 மில்லியன் ரூபா நிதி மதிப்பிடப்பட்டதோடு நிதிச் செலவு 2.031 மில்லியன் ரூபாவாகும்.

வரைபினூடாக புண்ணிய பூமி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளன.





## 1.7 தென்னங்காணி புனர்நிர்மாண மானிய நிகழ்ச்சித்திட்டம்.

2012ம் ஆண்டில் எடுக்கப்பட்ட கொள்கைரீதியான தீர்மாணத்திற்கு ஏற்ப புனர்நிர்மாண மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தெங்கு பயிர்ச்செய்கையில், வெற்றிடமான இடங்களில் தென்னங் கன்றுகளை நடுவதற்காக இலவசமாக தென்னங் கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அதற்கிணங்க 2012ம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டுள்ள கன்றுகளின் எண்ணிக்கை, வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலக்கு கொள்ளப்பட்ட கன்றுகள் 400,000 ஆகும். வருடத்தினுள் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கைப்பற்றிக்கொண்ட முன்னேற்றம் 236,631 கன்றுகளாகும். இதன்பொருட்டு தெங்கு பயிர்ச்செய்கை சபை 17.71 மில்லியன் ரூபாக்களை செலவிட்டுள்ளது.

வரைபில், தென்னங்காணி புனர்நிர்மாண மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளன.




## 1.8 சேதனப் பசளைப் பாவணையை பிரபல்யப்படுத்துவதற்காக தென்னங் காணிகளில் மாட்டுத் தொழுவம் அமைக்கும் மானிய நிகழ்ச்சித்திட்டம்.

தெங்குப் பயிர்ச்செய்கைக்கு சேதனப் பசளையை பயன்படுத்துவதனை பிரபல்யம் படுத்துதல், மண்ணின் பண்பினை விருத்திச் செய்து தெங்கு அறுவடையினை அதிகரித்தல், நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தென்னங்காணிகளினுள் பசு அல்லது எருமையினை வளர்ப்பதற்கு பொருத்தமான மாட்டுத் தொழுவத்தினை அமைப்பதற்கு இதன் கீழ் ரூபா: 25,000/- மானியமாக பெற்றுக் கொடுக்கப்பட்டது. ½ ஏக்கருக்கும் கூடிய



சரியான முறையில் அமைக்கப்பட்டுள்ள மாட்டுத் தொழுவம்

தென்னங் காணியுடைய, இரண்டு மாடுகளாயினும் இருக்கின்ற விவிசாயி இம்மானியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியாவார். சாணி மற்றும் சிறுநீரகத்தை ஒன்று சேர்க்கும் வசதியுடன் தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற திட்டத்திற்கு அமைய தொழுவத்தினை முழுமைழுவதமயாக அமைத்து தொழுவத்தில் இருக்கின்ற சாணி மற்றும் பசு் சிறு நீரை தென்னம் பயிருக்கு பயன்படுத்துவதனை ஒழுங்கான முறையில் மேற்கொண்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு மாத்திரம் நிதி ரீதியிலான மானியம் பெற்றுக் கொடுக்கப்படும்.



சரியான முறையில் அமைக்கப்பட்ட சாணி மற்றும் சிறுநீர் சேகரிக்கும் குழி

2012ம் ஆண்டில் நாடு முழுவதும் 141 மாட்டுத் தொழுவங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, இதற்காக தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் 2.875 மில்லியன் மானியமாக பயிர்ச்செய்கையாளருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.



சேதனப் பசளையை பயன்படுத்துதல்

## 1.9 தென்னந் தோட்டத்தில் குழாய் மூலம் நீரைப்பாய்ச்சும் கட்டமைப்பினை அமைப்பதற்கான மானியம்.

தென்னம் பயிரின் வளர்ச்சி மற்றும் சாகுபடியில் நீரானது நேரடியாக தாக்கம் செலுத்துகிறது.தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தினால் குறைந்த செலவிலான நீர் விநியோக முறைமையாக பரிந்துரைக்கப்பட்ட குழாய் மூலம் நீரை வழங்கும் மேம்பாடு, குழாய்நீர் மானிய நிகழ்ச்சித்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.

உலர் காலநிலை நிலைமை நிலவுகின்ற மாரவில, குருநாகலை, குளியாப்பிட்டிய, அம்பாந்தோட்டை, மொனராகலை, அம்பாறை, திருகோணமலை, பொலனறுவை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் மாத்தளை பிராந்திய அலுவலக எல்லைக்கு உற்பட்ட பிரதேசங்களில் இந்நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் பரிந்துரைக்கப்ப முறையில் குழாய்நீர்க் கட்டமைப்பினை அமைப்பதற்காக ஏக்கருக்கு ரூபா: 8,000/- ம் அடிப்படையில் அதிகூடுதலாக 5 ஏக்கர் வரையுள்ள காணிகளுக்கு குழாய் நீர்க் கட்டமைப்பினை அமைப்பதற்கு மானிய நிதி இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்படும்.

2012ம் ஆண்டில் தென்னந் தோட்டங்களில் குழாய் மூலம் நீர் வழங்கும் கட்டமைப்பு 750 ஏக்கர் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளதோடு பெற்றுக்

## 1.10 கப்றுக கடன் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்

இந்நிகழச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கம், தெங்கு பயிர்ச்செய்கையாளர்கள் மானிய உதவுதொகையில் தங்கியிருப்பதனை ஒழுங்கு முறைமையாக நீக்கி, அவர்களின் தென்னங் காணி போதுமான செயற்றிறனுடன் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகள் மற்றும் ஒதுக்கீட்டினை பெற்றுக் கொடுப்பதாகும். தெங்கு பயிர்ச்செய்கை சபை தனியார் மற்றும் அரச வங்கிகளுடன் ஒருங்கிணைந்து இந்நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகிறது. குடனினைப் பெற்றுக் கொண்ட பயிர்செய்கையாளர்கள் அக்கடனை செயற்றிறன் மற்றும் ගිවිසගත් கருத்திட்டத்திற்காக பயன்படுத்துகிறார்களா என்பதனை தெங்கு பயிர்ச்செய்கை சபையின் அலுவலர்களினால் அடிக்கடி பரீட்சிக்கப்படும்.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறையும் வட்டிவீத முறைமையின் கீழ் கடன் வழங்கப்படுவதோடு, பயிர்ச்செய்கையாளர்களுக்கு வருடாந்தம் வட்டி நிவாரனமும் பெற்றுக் கொடுக்கப்படுகிறது. அதற்கிணங்க, பயிர்ச்செய்கையாளர்கள், வங்கிக்கு செலுத்திய வட்டியில் முதல் வருடத்தில் 100 % ம் இரண்டாம் வருடத்தில் 50% அடிப்படையில் வட்டியிலிருந்து அதன் பகுதியை பயிர்ச்செய்கையாளர்கள், தெங்கு பயிர்ச்செய்கை சபையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். இதன் பிரதிபலனாக வருடாந்த සඵල வட்டி வீதம் கருத்திட்டத்தின் அடிப்படையில் 3.5 % - 4% ஆகிய மிகக் குறைந்த தொகையாகும். குப்றுக முதலீட்டு கடன் நிகழ்ச்சித்திட்டம் பெருந்தோட்டத் துறைப் போன்றே அனைத்து விவசாயத் துறைகளிலும் இதே வகையில் நடைமுறைப்படுத்தப்படும் ஒரேயொரு நிவாரண கடன் நிகழ்ச்சித்திட்டமாகும். தெங்கு பயிர்ச்செய்கை, ஊடுபயிர்ச்செய்கை, விலங்கு வேளாண்மை, நீர் விநி-யோகம், இயந்திர உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகிய 11 கருத்திட்டங்களுக்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன் ஒதுக்கீடு பெற்றுக் கொடுக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012ம் வருடத்தினுள் 378 தெங்கு பயிர்ச்செய்கையாளரின் 2169 ஏக்கர் அபிவிருத்திக்கு 112.16 மில்லியன் ரூபா வங்கியினால் வழங்கப்பட்டுள்ளன. இவ்வருடத்தில் 2750ஏக்கர் இலக்குடன் ஒப்பிடும்போது அடைந்துள்ள முன்னேற்றம் 78.87% ஆகும். அத்துடன் பயிர்ச்செய்கையாளர்களுக்கு 7.30 மில்லியன் ரூபா வட்டி நிவாரணம்

### *பிராந்திய அலுவலக ரீதியாக கப்றுக—முதலீட்டு கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்*



## 1.11 விசேட நிகழ்ச்சித்திட்டம்

### 1.11.1 சர்வதேச தெங்கு தினத்தைக் கொண்டாடுதல்

சர்வதேச தெங்கு தினத்தை முன்னிட்டு அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்களின் தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற சர்வதேச தேங்காய் தினக் கொண்டாட்டத்தில், தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் 06ம் தர பாடசாலை மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் “ கப்றுகய் சிப்ணெனய் ” கல்வி சார் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட 5 பாடசாலை மாணவர்களுக்கு ஜனாதிபதி அவர்களால் தென்னங் கன்று மற்றும் அறிக்கை புத்தகம் என்பன வழங்கப்பட்டது.




அதிமேதகு ஜனாதிபதியின் கைகளால் மாணவியொருவருக்கு தென்னங்கன்றும் , அறிக்கை புத்தகமும் வழங்கப்பட்ட சந்தர்ப்பமம்

கப்றுக கடன் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை සංකේතවත් කරමින් கப்றுக முதலீட்டு கடன் வட்டி நிவாரண உடமையாளர்கள் மூவருக்கு காசோலை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியின் கைகளால் இடம்பெற்றது.

அத்துடன் கப்றுக புறவற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாட்டில் சிறந்த மக்கள் தென்னங் கன்று நாற்றுமேடையாளர்கள் மூவர் தெரிவு-செய்யப்பட்டு அவர்களுக்கு காசோலை வழங்கும் நிகழ்வும் சர்வதேச தேங்காய் தினக் கொண்டாட்டத்தின் போது இடம்பெற்றது,



சிறந்த மக்கள் தென்னங் கன்று நாற்றுமேடையாளருக்கு கின்னமும் காசோலையும் வழங்குதல்

### 1.11.2 தேசத்தின் மகுடம் 2012 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு கடுகெளியாவை அலுவலர் விடுதியை அமைத்தல்

தேங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு மற்றும் தெங்கு பயிர்ச்செய்கை சபையின் அலுவலர்களின் உத்தியோக பூர்வ சுற்றுலா வசதிக்காக அநுராதபுரம் கடுகெலியாவில் நிர்மாணிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் உத்தியோக இல்லம் 2012 அநுராதபுரம் தேசத்தின் மகுட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்போது திறந்து வைக்கப்பட்டது.



### 1.11.3 கப்துறுபாய விற்பனை நிலையம்

தெங்கு சார் உற்பத்தியினை பொதுமக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துதல் மற்றும் தெங்கு கைத்தொழிலாளர்களை அபிவிருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டத் தொகுதியின் முதலாவது தெங்கு சார் உற்பத்தி விற்பனை நிலையம் பத்தரமுல்லை டென்சஜல் கொப்பேகடுவை வீதியில் அமைந்துள்ள தெங்கு பயிர்ச் செய்கை சபையின் தலைமைக் காரியாலய சூழலில் 2012 அக்டோபர் 25ம் திகதி தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி கௌரவ அமைச்சர் ஜகத் புஸ்பகுமார அவர்களின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.



தேங்கு சார்ந்து மேற்கொள்ளப்படும் சிறந்த உற்பத்திகளை இலகுவான விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதும், தெங்கு பயிர்ச்செய்கையாளர்கள் மற்றும் தெங்கு சார் உற்பத்தியாளர்களின் அபிவிருத்தியும் கப்துறுபாய விற்பனை நிலையத்தை ஆரம்பித்ததன் முக்கிய நோக்கமாகும்.

இந்த கப்துறுபாய விற்பனை நிலையம், தெங்கு பயிர்ச்செய்கை சபையின் நலன்புரிச் சங்கத்தினால் நெயற்படுத்தப்படுகின்றது.

### 1.11.4. தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி செயற்திட்டத்தில் நான்காவது இடத்தை பெற்றமை

2012 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி செயற்திட்டம் அனுராதபுரம், ஒயாமடுவ பிரதேசத்தில் நடத்தப்பட்டது. இந்த செயற்திட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிறுவனம், தென்னை அபிவிருத்தி அதிகாரசபை, குருணாகல் பெருந்தோட்ட கம்பனி, சிலாபம் பெருந்தோட்ட கம்பனி போன்ற தென்னை அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள சகோதர நிறுவனங்களுடனிணைந்து 2 ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை செய்கை தொடர்பாக கல்வி செய்முறையுடனை தென்னை செய்கையின் கவரத்தக்க கண்காட்சி நிலப்பபரப்பு தயாரிக்கப்பட்டது. இந்த கண்காட்சியின் தலைமை தென்னை பயிர்ச்செய்கை சபையால் வகிக்கப்பட்டது. முழு கண்காட்சிகளிலும் நான்காவது இடத்தை தென்னை அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சுக்கு எம்மாள் பெற்றுக்கொடுக்க முடிந்தது. இந்த தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக அப்பிரதேசத்தில் கப்றுக்க புரவர செயற்திட்டம், சமூக நாற்று பண்ணை செயற்திட்டம், மானிய தென்னம்பிள்ளை செய்கை செயற்திட்டம், கப்றுக்க சிப்நெண புலமைப்பரிசில் செயற்திட்டம், வாழ்வெழுச்சி செயற்திட்டம், சம்புத்தத்வ ஜயந்தி செயற்திட்டம் போன்ற அபிவிருத்தி செயற்திட்டங்கள் 37.256 மில்லியன் ரூபா பெறுமதியில் முடிவுறுத்தப்பட்டது.

# 2.தெங்கு பயிர்ச்செய்கை சபையின் விரிவாக்கல் நடவடிக்கைகள்.




தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் பெற்றுக் கொடுக்கப்படும் பல்வேறு மானியங்கள், கடன் திட்ட முறைமைகள், சேவைகள், வளங்களைப் பெற்றுக் கொடுத்தல், தொழில்நுட்பங்களைப் பெற்றுக் கொடுத்தல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை இணைத்துக் கொண்டு தெங்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு மற்றும் தொழில்நுட்ப தகவல்களை பரிமாற்றிக் கொள்ளுதல் விரிவாக்கல் சேவையினுள் உள்ளடங்குகின்றன.

இதன் பொருட்டு தலைமை அலுவலகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி) ஊடாக கிராம மட்டத்தில் தெங்கு அபிவிருத்தி அலுவலர் வரை நடைமுறைப்படுத்தபப்டும் ஆலோசனை ரீதியிலான விரிவாக்கல் சேவைகள் இடம்பெறுகின்றன.

அவை பின்வரும் முறையில் மொத்த ஒருங்கிணைப்புத் திட்டமிடலுக்கு ஏற்ப, வருடாந்த நடைமுறைத்திட்டம் மற்றும் குறித்த அபிவிருத்தி திட்டமிடல் போன்று அதற்கு தேவையான நிதியினை பங்கீடு செய்யும் திட்டமும் திட்டமிடல் பிரிவினால் தயாரிக்கப்படுவதோடு,அவை விரிவாக்கல் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளரின் இணக்கம் மற்றும் மேற்பார்வையின் கீழ் இடம்பெறுகின்றன. அதற்கேற்ற வகையில் சகல தகவல்களும்

எழுத்து மூல சுற்றறிக்கையினால் பிராந்திய அலுவலகங்களுக்கு அனுப்பப்படுவதோடு, பிராந்திய முகாமையாளர்களினால் தமது வலுவுக்கு உற்பட்ட பிரதேச எல்லையினுள் அபிவிருத்தி மற்றும் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதன் பொருட்டு தொழில்நுட்ப அலுவலர்களாக உதவிப் பிராந்திய முகாமையாளர் அல்லது பண்ணைத் திட்டமிடல் அலுவலர் பிராந்திய முகாமையாளருக்கு உதவுவார். ஆவர்களின் முழுமையான மேற்பார்வையின் கீழ் வருடாந்தம் மற்றும் மாதாந்தம் தெங்கு அபிவிருத்தி அலுவலர்களின் மற்றும் கள அலுவலர்களின் விரிவாக்கல் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்படுவதோடு, இதற்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பு, வளங்களைப் பெற்றுக் கொடுத்தலும் வழிகாட்டுதலும் தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் விடயப்பொறுப்பு அலுவலர்களினாலும் ஊடகப் பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

2012விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைபடுத்தும்போது, விரிவாகக்ல் வலையில் விவசாயத்துறை மட்ட அலுவலரான தெங்கு அபிவிருத்தி அலுவலர் அலுவலகம் 160 இயங்கியதோடு, இதன்பொருட்டு 130 அலுவலர்களின் சேவை பெற்றுக் கொடுக்கப்பட்டது.அத்துடன் இதற்காக கிராம மட்டத்தில் தெங்கு பயிர்ச் செய்கை சபையின் பிரதிநிதிகளான 39 கள உத்தியோகத்தர்களின் உதவிகள் தெங்கு அபிவிருத்தி அலுவலர்களுக்கு கிடைத்ததோடு,பிராந்திய அலுவலகங்களில் சகல நிகழ்ச்சித்திட்டங்களும் இவ் அலுவலர்களின் ஊடாக களத்தில் செயற்பாட்டுக்கு உள்ளாகியது.



களத்தில் இடம்பெறும் மாதிரி செயலமர்வொன்று

இதன் அடிப்படையில் 2012ம் ஆண்டில் 18 பிராந்திய ஆலுவலகத்தினூடாக தெங்கு பயிர்ச்செய்கையாளர்களின் 50,815 தனிப்பட்ட சந்திப்பு இடம்பெற்றிருப்பதோடு, குழு கலந்துரையாடல், செய்முறை விளக்கங்கள், வெளிக்கள நாள், விவசாய பயிற்சி வகுப்பு ஆகிய7,663 குழு விரிவாக்கல் முறைமையின் மூலம் 295,898 பயிர்ச்செய்கையாளர்களுக்கு விரிவாக்கல் சேவை வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தனிநபர் மற்றும் குழு ஆகிய இரண்டினூடாகவும்

346,804 தெங்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கு விரிவாக்கல் சேவைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

விவசாய அபிவிருத்தி நிறுவனமொன்னறின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒன்றுக்கொன்று இணைந்தவாறும் ஒன்றுக்கொன்று உடன்பட்டவாறும் செயற்படுகின்றன. குறிப்பாக தொழில்நுட்ப அலுவலர் குழுவினர் தொடர்ச்சியாக பயிற்சியளிக்கப்பட்டு தொழில்நுட்ப அறிவில் சக்தியூட்டப்பட்டதுடன், பயிற்சியாளர்களை பயிற்றுவித்தல் தெங்கு பயிர்ச்செய்கை சபையின் முக்கிய பொறுப்பாகும். மேலும் தெங்கு பயிர்ச் செய்கையாளர்கள், நேரடியாகவே தெங்கு பயிர்ச்செய்கை சபையின் பயிற்சி நிலையத்தினுள் அல்லது வெளிக்களத்தில் பயிற்சியளிக்கப்பட்டனர். இதற்கு முக்கிய நிலையமாக லுனுவிலை தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையமும் தெற்கு தெங்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கு தென்னிலங்கை தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையமும் இயங்கியது.

## 2.1 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

### 2.1.1 தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையம்.— லுனுவில



தெங்கு பயிர்ச்செய்கை சபையின் முக்கிய பயிற்சி நிலையம் லுனுவில தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையமாவதோடு, வருடாந்தம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப படுத்துவது இதன் முக்கிய செயற்பாடாகும். உள்ளக தொழில்நுட்ப அலவலர், வெளி நிறுவன அலுவலர் மற்றும் பயிர்செய்கையாளர்கள் முதலான பெரும் எண்ணிக்கையினருக்கு பிரயோகப் பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு, 2012ம் ஆண்டில் இவ்வாறான 97 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி 5550 பேருக்கு அறிவு மற்றும் திறனைப் பெற்றுக் கொடுத்து தென்னம் பயிரில் தொழில்நுட்ப உள்ளீடுகளைப் பயன்படுத்துவது தொடர்பான எண்ணத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பிராந்திய அலுவலக மட்டத்தில் மேற்கூறப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திடடங்களை அடிப்படையாகக் கொண்ட விரிவாகக்ல் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக லுனுவில பயிற்சி நிலையத்தினூடாகவும் பிராந்திய அலுவலகங்களுக்கு வள பங்களிப்பினை பெற்றுக் கொடுத்து பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், பாடசாலை நிகழ்ச்சித்திடடம், கிராம அலுவலர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் இவற்றில் உள்ளடங்குகின்றன.

### 2.1.2 தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

லுனுவில தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் அலுவலர்கள், களத்தில் பயிர்ச்செய்கையாளர்களின் செயன்முறைத் தேவைகளை அடையாளங் கண்டு, அதற்கு சமமான பயிற்சி நிகழ்சிசித்திட்டங்களை நடாத்ததல் தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சீத்திட்டங்களாக கருதப்படுகின்றன. இவ்வருடத்தில் இது போன்ற 37 நிகழ்ச்சித்திட்டங்களை நாடு முழுவதிலும் நடாத்தி அதில் பங்குபற்றிய 1868 பயிர்ச்செய்கையாளர்களுக்கு அறிவு மற்றும் திறன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.1.3அரச உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்



அரச துறையின் சகோதர நிறுவனங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு தெங்கு பயிர்ச்செய்கை தொடர்பான அடிப்படை அறிவினைப் பெற்றுக் கொடுக்கும் 49 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தப்பட்டிருப்பதோடு அதில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 3422 ஆகும்.

## 2.1.4 பாடசாலை மாணவர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்



தேசியப் பாடசாலைக் கட்டமைப்பில் உயர்தரத்தில் விவசாயப் பாடத்தினை கற்கின்ற பாடசாலை மாணவர்களுக்கு தென்னம் பயிர் தொடர்பான அறிவினை இற்றைப்படுத்தும் நோக்கில் நடாத்தப்பட்ட 63 நிகழ்ச்சித்திட்டங்களுள் 4280 பாடசாலை மாணவர்களுக்கு தொழில்நுட்ப அறிவு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

## 2.1.5 அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்



கிராம மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் அரசு மற்றும் அரச சார்பற்ற் நிறுவனங்களுடன் இணைந்த கிராம அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு அறிவுறுததல் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் பயிற்சி நிலையத்தில் நடைமுறைப்படுத்தப்டடிருப்பதோடு, இ தன் பொருட்டு நடாத்தப்பட்டிருக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் 54 ஆகும். இதில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை 2296 ஆகும்.

## 2.2 மெதமுலனை தெண்ணிலங்கை தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையம்.



இலங்கையின் தென்பிராந்நதிய தெங்கு பயிர்ச்செய்கையாளர்களின் அறிவு மற்றும் திறனை விருத்தி செய்யும் நோக்கில் மெதமுலன பிரதேசத்தில் தென்னிலங்கை தெங்கு ஆராய்ச்சி பயிற்சி நிலையம் நிறுவப்பட்டிருபப்தோடு, இதனுடாக 2012ம் ஆண்டில் 14 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தபப்ட்டுள்ளன. அத்துடன் பயிற்சியளிக்கப்பட்ட பயிர்ச்செய்கையாளர்களின் எண்ணிக்கை1071 ஆகும்.

# 2.3 நோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்

## 2.3.1 வெலிகம இலை வாடல் மற்றும் அழுகும் நோயினை ஒழிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையின் தென் பிராந்தியத்தில் மாத்தறை மாவட்டத்திற்குரிய வெலிகம பிரதேச செயலகப் பிரிவினுள் முதன்முதலாக அறிக்கையிடப்பட்ட வெலிகம இலை வாடல் மற்றும் அழுகும் நோய் பிற்பட்ட காலத்தில் காலி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்கிளிலும் அறிக்கையிடப்பட்டன. பெரும்பாலும் வைரசுக்கு சமமான பயிடொப்லாஸ்மா நோய்க்காவியினால் இந்நோய் உருவாக்கப்படுவதோடு, தற்போது உலகில் எந்தவொரு நாட்டிலும் பயிடொப்லாஸ்மாவிற்கான சிகிச்சைகள் கண்டு பிடிக்கப்படவில்லை.

இந்நோயினை அடையாளம் கண்டு கொண்டதன் பின்னர், தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், மரப்பாதுகாப்பு சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் சட்டரீதியான அலுவலரான விவசாயப் பணிப்பாளர் நாயகத்துடன் ஒருங்கிணைந்து மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் 408 கிராம சேவகர் பிரிவுகள் நோய் வலயங்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன.

அத்துடன் நோயானது வெளியில் பரவுவதனை தடுபதற்காக காலியிலிருந்து ஹக்மனை ஊடாக தங்கல்லை வரை யிலான பாதையில் 86 கி.மீற்றர் நீளமும் 3 கி.மீற்றர் அகலமும் நோய் தடுக்கும் வலயமாக பெயிரிடப்பட்டுள்ளன. இவ்வலயத்தினுள் உள்ள அனைத்து நோய் மரங்களும் கழற்றி அகற்றப்படுவதோடு, இவ்வலயத்தின் எல்லையிலிருந்து வெளியே தென்னை மரத்திலிருந்து எந்தவொரு உயிர்ப்பொருட்களையும் கொண்டு வருதல் மரப்பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தடை-செய்யப்பட்டுளது. அத்துடன் விவசாயத் திணைக்களத்தினால் இக்குலத்திற்குரிய ஏனைய பயிர்களை போக்குவரத்துச் செய்வதற்காகக இந்த தடை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன இந்நோயை ஆரம்பத்திலேயே ஒழிப்பதற்காக காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களினுள் காணி காணியாகச் சென்று மீளாய்வினை மேற்கொண்டதோடு அங்கு 344,000 நோயுள்ள மரங்கள் அடையாளம் காணப்பட்டன. தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தினால் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிபுணர்கள் உள்ளடங்கிள பல்வேறு வகையான நிகழ்ச்சித்திட்ங்க்ள் மற்றும் ஆலோசனை சேகைளினூடாக பெற்றுக் கொண்ட தகவல்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு ஏற்ப நோய் வலயத்திலுள்ள சகல நோயுள்ள மரங்களையும் அகற்ற ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக தெங்கு பயிர்ச்செய்கையாளர்களுக்கு மரம் அகற்றுவதற்கு பதிலாக நட்ட ஈடு வழங்கப்பட்டதோடு ஊடு பயிர்ச்செய்கைக்காக பல்வேறு அரச நிறுவனங்களுடன் ஒன்றித்து மானியங்கள் பெற்றுக் கொடுக்கப்ட்டன.

2011ம் வருடத்தினுள் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் முழுமையான வழிகாட்டலில், இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நோய் மரங்களை நீக்கும் பாரிய நிகழ்ச்சித்திட்டம் மாத்தறை மாவட்ட செயலகத்தினை இணைத்துக்கொண்டு மேற்கொள்ளப்பட்டதோடு 2012ம் ஆண்டிலும் இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுததப்பட்ன. இதன் பரதிபலனாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அடையாளங் காணப்பட்ட அனைத்து நோய் மரங்களையும் நீக்குவதற்கு முடிந்தது.



2012ம் ஆண்டினுள் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அகற்றப்பட்ட மொத்த நோய் மரங்களின் எண்ணிக்கை 80,504 ஆகும். அத்துடன் 2012ம் ஆண்டில் எடுக்கப்பட்ட கொள்கை தீர்மானங்கிளன் படி நோய் மரங்களை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாத தோட்ட உரிமையாளர்களின் தோட்டங்களிலுள்ள சகல மரங்களுக்கும் இரசாயண ஊசியை ஏற்றி மரத்தினை அழிப்பதற்குகான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. 2012ல் அகற்றப்பட்ட நோய் மரங்களின் எண்ணிக்கை 03 மாவட்டங்களில் பின்வருமாறு அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| மாவட்டம் | அகற்றப்பட்ட நோய் மரங்களின் எண்ணிக்கை | கொடுப்பனவு செய்யப்பட்ட மரங்கிளன் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|
| மாத்தறை | 77,611 | 69,574 | 139,158,000.00 |
| காலி | 1,531 | 1,279 | 2,558,000.00 |
| அம்பாந்தோட்டை | 14 | 14 | 28,000.00 |
| **மொத்தம்** | **80,504** | **70,867** | **141,744,000** |

### 2.3.2 சிவப்பு வண்டு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

தெங்கு பயிருக்கு பாதிப்பினை எற்படுத்தும் பூச்சுக்களுள் மரத்தை இறக்கும் அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் பூச்சு சிவப்பு வண்டாவதோடு காய் காய்ப்பதற்கு ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இருக்கின்ற தென்னை மரங்கள் எவ்விதமான அறிகுறிகளையும் காட்டாமல் மரம் உடைந்து வீழும் செயற்பாடு இவ்வண்டினால் ஏற்படுகிறது. தற்போது இந்நிலமை நாட்டின் எல்லா பிரதேசங்களிலும் இடம்பெறுகின்றன. ஒருங்கிணைந்த சிவப்பு வண்டு கட்டுப்பாட்டுத் திடடத்தின் கிழ் 2012ம் ஆண்டில் 6625 பரமோன் வயல்ஸ் விநியோகிக்கப்பட்டுள்ளதோடு லுணுவில தெங்கு அபிவிருத்தி நிலையத்தினுஸடாக மேற்கொள்ளப்படுகின்ற சிவப்பு வண்டொழிப்பு நிகழ்சிசத்திட்டங்கள் 05 ஆகும். சிவப்பு வண்டின் பாதிப்பு உச்சளவில் காணப்படுகின்ற செவணகலை, பொலனறுவை B வலயம், ராஜாங்கனை, தம்புத்தேகமை மற்றும் தெய்அத்தண்டிய ஆகிய பிரதேசங்களில் தேசிய அளிவில் இந் நிகழ்ச் சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. பரமோன் வயலஸ் விநியோகம் உள்ளடங்கலாக ஒருங்கிணைந்த பூச்சொழிப்புத் திட்டத்திற்காக செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா மில்லியன் 1.399 ஆகும். 2012ம் ஆண்டில் மொனோகுரோட்டோபஸ் இரசாயணம் இந்நாட்டுக்கு கொண்டுவருதல் தடையென்பதால் 33.3 லீட்டர் மொனோகுரோட்டோபஸ் பயிர்ச்செய்கையாளருக்கு விநியோகிக்கப்பட்டன.

### 2.3.3 கரு வண்டு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

கரு வண்டு தெங்கு பயிருக்கு வலிமையான பாதிபபை ஏற்படுத்துவதோடு, சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் மரண நிலையை உருவாக்கும். அத்துடன் இலங்கை முழுவதும் தென்னம் பயிரைப்போன்று வளர்ச்சியடைந்த மரங்களையும் பல்வேறுவகையான முறைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் பூச்சியாகும். இவ்வண்டின் ஒழிப்புக்காக பல்வேறு பரிந்துரைக்கு மேலதிகமாக உயிரியல் விஞ்ஞான ஒழிப்பு முறைமையின் கீழ் பங்கசு மற்றும் வைரசுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ள்தோடு லுணுவிலை தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையத்தினூடாக இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக மெடரய்சியம் பங்கசு பைக்கற்றுக்கள் பயிர்ச்செய்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. 2012ம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட மொத்த பூங்கசு பைகக்ற்றுக்களின் எண்ணிக்கை 600 ஆகும. அது இலக்கு கொள்ளப்பட்ட 1800 உடன. ஒப்பிடும்போது 33.3% முன்னேற்றமாகும்.

## 2.3.4 தென்னை அரிப்பு பூச்சு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

தென்னை அரிப்பு பூச்சினை ஒழிப்பதற்காக உயிரியல் விஞ்ஞான ஒழிப்பு முறையாக 2012ம் ஆண்டில ஊணுண்னி வயல்ஸ் விநியோகிக்கபப்ட்டன. அதற்கிணங்க 2012ம் ஆண்டில் விநியோகிக்கப்ட்ட ஊணுண்ணி வயல்ஸின் எண்ணிக்கை 850 ஆகும். ஆத்துடன் இலக்குக் கொள்ளப்பட்ட 900 ஊணுண்ணின வயல்சுடன் ஒப்பிடும்போது 94.44 % முன்னேற்றமாகும் அதன் கீழ் பயிர்ச்செய்கையாளர்கள் அறிவுறுத்தபப்ட்டு ஊணுண்ணின வயல்சுகளை விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தி நோயினைக் கட்டுப்படுத்திய ஏக்கரின் அளவு 421 ஆகும்.

## 2.3.5 மயிட்டா பாதிப்பை முகாமைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

நாடு முழுவதும் தென்னை மரங்களின் தேங்காய் உற்பத்திக்கு கருத்திற் கொள்ளப்ட வேண்டிய பாதிப்பை ஏற்படுத்தி தேங்காய்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் இந்த பூச்சினை ஒழிப்பதற்காக தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் மயிட்டா ஒட்டுண்ணியை உற்பத்திச் செய்யும் நிலையங்கள் உருவாக்கப்பட்டதோடு, அந்நிலையங்களினூடாக ஊணுண்ணி மயிட்டா பைக்கற்றுக்கள் விநியோகிக்கப்ட்டன. அதன் கீழ் 2012ம் ஆண்டில் அம்பாறை மாவட்டத்தில் மயிட்டா ஒட்டுண்ணி நிலையமொன்று ஆரம்பிக்கப்ட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மயிட்டா ஒட்டுண்ணி உற்ப்தி நிலையம் நிறுவப்பட்டாலும் அதனை 2012 ல் திறந்து வைக்க முடியால் போய்விட்து. மேலும், 2012ல் குருநாகலை வாரியபொலை மற்றும பளை ஆகிய இடங்களில் ஒவ்வொரு ஒட்டுண்ணி உற்பத்தி நிலையங்களாக மேலும் 2 நிலையங்களை 2012ல் நிர்மானிக்க ஆரம்பிக்கப்பட்டு தற்போதும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

**மயிட்டா ஒட்டுண்ணி நிலையத்தினூடாக 01.01.2012 - 31.12.2012 வரை விநியோகிக்கப்ட்ட ஊணுண்ணி மயிட்டா பைக்கற்றுக்களின் எண்ணிக்கை**

| நிலையம் | உற்பத்திச் செய்யப்பட்ட ஊணுண்ணி மயிட்டா பைக்கற்றுக்கள் | விநியோகிக்கப்பட்ட ஊணுண்ணி மயிட்டா பைக்கற்றுக்கள் |
|---|---|---|
| மட்டக்களப்பு | 6,788 | 3,743 |
| அம்பாறை | 5,557 | 1,999 |
| அம்பாந்தோட்டை | 3,091 | 1,801 |
| ஹந்தபானகலை-மொனராகலை | 6,706 | 6,384 |
| டெஸிவெலி—குருநாகலை | 8,454 | 1,650 |
| **மொத்தம்** | **30,596** | **15,577** |

## 2.4 வெளியீடு

தெங்கு பயிர்ச்செய்கை தொடர்பாக மக்களை அறிவுறுத்தும் நோக்கில் கப்றுக எனும் பெயரில், கடந்த வருடத்தைப் போன்று இவ்வருடத்திலும் இரு மொழியிலான (சிங்களம் , தமிழ்) 03 பருவ இதழ்கள் வெளியிடப்பட்டன. அவ்விதழை மேலும் விரிவுப்படுத்தி லேக்ஹவுஸ் நிறுவனத்தினூடாக மேலதிக பத்திரிளையொன்றை மாதந்தோறும் மூன்று மொழியிலும் மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.






கையேடுகள், பயிற்சி அடிப்படை, பதாதைகள், சுவரொட்டிகள் ஆகியவற்றை தயாரித்து விநியோகிப்பதோடு, விநியோகிக்கப்பட்டுள்ள 474,975 எண்ணிக்கையிலான தொழில்நுட்ப கையேடு மற்றும் ஏனைய வெளியீடுகள் கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மக்களை அறிவுறுத்துவதற்காக விநியோகிக்கப்பட்டுள்ளன.

## 2012ம் ஆண்டில் வெளியிடப்பட்ட கையேடுகள்

| | |
|---|---|
| தென்னங்கன்றினை நாட்டுதலும் பராமரித்தலும் | 100,000 |
| சிவப்புவணடு ஒழிப்பு | 47,000 |
| கருவண்டு ஒழிப்பு | 50,000 |
| ப்ளேஸிஸ்பா ஒழிப்பு | 50,000 |
| தென்னை அரிப்புபூச்சு ஒழிப்பு | 30,000 |
| மயிட்டா பாதிப்பு | 50,000 |
| உரப்பாவணை | 42,000 |
| ஏனையவை (கறுப்பு வெள்ளைக் கையேடு, விரிவாக்கல் அட்டவணை ஆகியவை) | 105,975 |



## 2.4.1 தலைமைக் காரியாலயத்தின் விரிவாக்கல் சேவை மற்றும் தகவல் மையம்

கொழும்பு நகருக்கு அண்மையில் மற்றும் பிற இடங்களில் காணியுடைய, நகரில் வதிந்துள்ள தெங்கு பயிர்ச்செய்கையாளர்களின் அறிவு மற்றும் தொழில்நுட்ப சேவையினை நடாத்திச் செல்வதன் தேவைப்பாடு தலைமைக் காரியாலயத்தின் தகவல் மையத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகவல் மையம் தலைமைக் காரியாலயத்தின் தரைத் தட்டில் அமைக்கப்பட்டுள்ளன. 2012 ல் தலைமைக் காரியாலயத்தின் தகவல் மையத்தின் முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளன.

அலுவலகத்திற்கு வருகைதந்து மற்றும் தொலைபேசி விசாரனைகள் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை ...........................6,804

பங்கிடப்பட்ட உயர்தரத்திலான தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை.............14,430

காற்றுத் துப்பாக்கிக்காக வழங்கிய சிபாரிசுக் கடிதம் ....................................565

விற்பனை செய்யப்பட்ட காற்றுத் துப்பாக்கிகளின் எண்ணிக்கை .......................271

விற்பனை செய்யப்பட்ட மொனோகுரோட்டோபோஸ்(சிவப்பு வண்டின் ஆபத்துக்கு)மி.லீ.3,100

வெளிவாரி விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் களப் பரிசீலனை......................06

# 3 .மாதிரி தென்னஞ் சோலை

நாடு முழுவதும் தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் 12 மாதிரி தென்னஞ் சோலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த மாரிரி தென்னஞ் சோலைகளில் 08 தென்னை முக்கோணத்திலும், 03 கிழக்குப் பிரதேசத்திலும் 01 வடக்கிலும் அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் நிலவிய பாதுகாப்பு சூழ்நிலையால், கிழக்குப் பிரதேசத்தின் கொரை ,பாசிக்குடா மற்றும் யாழ்ப்பாணத்தில் பளை மாதிரி தென்னஞ் சோலைகள் பலவருடங்கள் தொட்டு எவ்விதமான முகாமைத்துவ நடவடிக்கைகளும் இடம்பெறாத போதும் 2011ம் ஆண்டில், இச்சகல மாதிரி தென்னஞ் சோலைகளும் அபிவருத்தி நடவடிக்கைகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

சகல மாதிரி தென்னஞ் சோலைகளும், பயிர்ச்செய்கையாளரின் தேவையினை பூரணப்படுத்தும் கேந்திர நிலையமாக செயறபட்டது.அதற்கிணங்க தெங்கு பயிர்ச்செய்கை, பல்வேறு வகையான ஊடுபயிரச் செய்கை, விலங்கு வேளாண்மை முதலான பல விவசாயச் செயற்பாடுகளில் ஈடுபட்டு தெங்கு பயிர்ச்செய்கையாளர்களுக்கு பயிர் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் பிரயோக அறிவினைப் பெற்றுக் கொடுத்து தென்னங்காணியொன்றில் உச்சளவு உற்பத்தியினை பெற்றுக் கொள்ளக்கூடிய மாதிரி அலகாக நடாத்தப்படுகின்றது.

அத்துடன் தெங்கு பயிர்ச்செய்கை சபையினால்வருடாந்த தென்னங் கன்றுகளின் தேவையினை அறிந்து கொண்டு அத் தென்னங் கன்றுகளை தேவைக்கேற்றவாறு மொத்தக் தென்னங் கன்றினை உற்பத்திச்செய்வதற்காக நாடு முழுவதும் 38 நாற்றுமேடைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

விதை உற்பத்தி அலகினால் இவ் அபிவிருத்தி செய்றாட்டுக்கு உரிய சகல உள்ளீடுகள் மற்றும் வளர்க்கும் பொருட்கள் தேவைக்கேற்றவாறு விநியோகித்தல் மற்றும் பங்கிடப்டுகின்றன.

## 3.1 மாதிரிச் தென்னஞ் சோலையின் நிர்வாக நடவடிக்கை

தற்போது சபையினால் நிர்வகிக்கப்படும் மாதிரி தென்னஞ்சோலை மாற்றும் மாதிரி நிலையம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு,

| மாதிரி தென்னஞ் சோலையின் பெயர் | அமைந்துள்ள இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1. நாகன்சோலை மா.தெ.சோ. | ரஸ்நாயக்கபுர, நிகவெரட்டிய | குருநாகலை |
| 2. ரந்தெனிய மா.தெ.சோ | வாரியப்பொலை | குருநாகலை |
| 3. லேன்வ மா.தெ.சோ | லேன்வ, மல்சிரிபுர | குருநாகலை |
| 4. போபிடிய மா.தெ.சோ | மாஹொளவ, போபிடிய | குருநாகலை |
| 5. கர்ட்லண்ட் மா.தெ.சோ | நாம்பிரித்தன்கடவற ,வெலிபன்னகாமுல்ல | குருநாகலை |
| 6. மஹயாய மா.தெ.சோ | மாக்கந்துர,கோனவில(வயம்ப) | குருநாகலை |
| 7. டெஸிவெலி மா.தெ.சோ | இளுக்கெல, வேவுட | குருநாகலை |
| 8. கொரை மா.தெ.சோ | திருக்கோவில் | மட்டக்களப்பு |
| 9. பாசிக்குடா மா.தெ.சோ | கல்குடா, பாசிக்குடா | மட்டக்களப்பு |
| 10.கொஹொம்பான மா.தெ.சோ | கொனாகால்ல, அம்பாறை | அம்பாறை |
| 11.பளை மா.தெ.சோ | பளை | யாழ்ப்பாணம் |
| 12.முந்தல் | முந்தல் | புத்தளம் |

## 3.1.1 மாதிரி தென்னஞ் சோலைகளின் இடப்பயன்பாடு

| மாதிரி தென்னஞ்சோலை | மாவட்டம் | ஏக்கரின் அளவு | தெங்கு ஏக்.அளவு | காய்க்கும் தெங்கு ஏக்கரின் அளவு | ஏனைய பயிர்கள் .ஏக்கர் | வீதி, கட்டடம் | காட்டுப் பயிர். ஏக்கர் |
|---|---|---|---|---|---|---|---|
| நாகன்சோலை | குருநாகலை | 406 | 347.2 | 316 | 33 | 21 | 04 |
| ரந்தெனிய | குருநாகலை | 360 | 311 | 202 | 22 | 08 | 19 |
| லேன்வ | குருநாகலை | 483 | 361 | 271 | 39 | 43.5 | 35 |
| போபிடிய | குருநாகலை | 142 | 104 | 74 | 33 | 07 | 08 |
| கர்ட்லண்ட் | குருநாகலை | 405 | 388 | 194 | 15 | 01 | 01 |
| மஹயாய | குருநாகலை | 331 | 290 | 207 | 16 | 23 | 01 |
| டெஸிவெலி | குருநாகலை | 306 | 295 | 221 | 101.7 | 05 | 06 |
| கொரை | அம்பாறை | 469 | 150 | 80 | 85 | 06 | 05 |
| பாசிக்குடா | மட்டக்களப்பு | 238 | 64 | 47 | 34 | 10 | 10 |
| கொஹொம்பான | அம்பாறை | 154 | 102 | 82 | 40.2 | 07 | 4.75 |
| பளை | கிளிநொச்சி | 634 | 86 | 86 | 06 | 21 . 03 | 56 |
| முந்தல் | புத்தலம் | 14.25 | 14.25 | 11 | - | - | - |

## 3.1.2 – மாதிரி தென்னஞ் சோலைகளில் வருடாந்த தெங்கு அறுவடை 2008-2012 வரை (தேங்காய்கள்)

| மாதிரி தென்னஞ் சோலை | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | அதிகரிப்பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| நாகன்சோலை | 1104585 | 1232281 | 957441 | 978476 | 806573 | -17.57% |
| ரந்தெனிய | 810776 | 961879 | 699215 | 880477 | 769928 | -12.56% |
| லேன்வ | 832615 | 888590 | 801933 | 978130 | 959772 | -1.88% |
| போபிடிய | 357212 | 388817 | 357679 | 327924 | 380707 | 16.10% |
| கர்ட்லண்ட் | 805005 | 885204 | 866933 | 656812 | 979484 | 49.13% |
| மஹயாய | 708709 | 1138455 | 982891 | 910520 | 1064918 | 16.96% |
| டெஸிவெலி | 833898 | 847441 | 815829 | 889008 | 1155594 | 29.99% |
| முந்தல் | 80168 | 90993 | 81414 | 61884 | 70136 | 13.33% |
| கொஹொம்பான | 224694 | 349698 | 96531 | 185903 | 400821 | 115.61% |
| கொரை | 217174 | 252910 | 185200 | 192505 | 300970 | 56.34% |
| பாசிக்குடா | 92255 | 111208 | 86464 | 160409 | 277322 | 72.88% |
| பளை | 0 | 0 | 0 | 110611 | 150589 | 36.14% |
| **மொத்தம்** | **6067091** | **7147476** | **5931530** | **6332659** | **7316814** | 15.54% |




### 3.1.6 கீழ்ப் பயிர்ச்செய்கை/ புதிய பயிர்ச்செய்கை மற்றும் வெற்றிடக் கன்று நடுதல். வருடம்- 2012

| மாதிரி தென்னஞ்சோலை | கீழ்ப்பயிர் கன்றுகளின் எண்ணிக்கை | புதிய பயிர் கன்றுகளின் எண்ணிக்கை | வெற்றிடங்களை நிரப்புதல் |
|---|---|---|---|
| நாகன்சோலை | 420 | * | 300 |
| ரந்தெனிய | 690 | * | 186 |
| லேன்வ | 640 | * | 1104 |
| போபிடிய | 898 | * | * |
| கர்ட்லண்ட் | 817 | * | 210 |
| மஹயாய | * | * | 590 |
| டெஸிவெலி | * | * | 210 |
| முந்தல் | * | * | * |
| கொஹொம்பான | 512 | 206 | * |
| கொரை | * | * | 3775 |
| பாசிக்குடா | * | * | 1648 |
| பளை | 1120 | 3335 | * |
| *இவ்வருடத்தில் குறித்த பயிருக்கான தேவைப்பாடுக்ள இல்லை | | | |

## 3.1.7 உரப் பாவணை வருடம் -2 012

| மாதிரி தென்னஞ்சோலை | உரம் பயன்படுத்தப்பட்ட காய்க்கும் தொன்னை மரங்களின் எண்ணிக்கை | உரம் பயன்படுத்தப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| நாகன்சோலை | 14133 | 2191 |
| ரந்தெனிய | 14096 | 1064 |
| லேன்வ | 14259 | 4337 |
| போபிடிய | 5065 | 3171 |
| கர்ட்லண்ட் | 9384 | 5652 |
| மஹாயாய | 11599 | 2012 |
| டெஸிவெலி | 13032 | 1347 |
| முந்தல் | 750 | 53 |
| கொஹொம்பான | 3951 | 1101 |
| கொரை | 8451 | 667 |
| பாசிக்குடா | 4062 | 1525 |
| பளை | 4165 | 6448 |

## 3.1.9 மாதிரி தென்னஞ் சோலைகளில் விலங்கு வேளாண்மை கருத்திட்டம் - *2012.12.31 ம் திகதிக்கு*

| மாதிரி தென்னஞ் சோலை | வகை | பட்டி மாடு | நாம்பன் | பசு | நாகு | கரத்தை மாடு |
|---|---|---|---|---|---|---|
| லேன்வ | மாடு | 02 | 34 | 55 | 26 | - |
| கர்ட்லண்ட் | மாடு | 02 | 23 | 45 | 44 | - |
| | செம்மறி | 02 | 32 | 31 | 45 | - |
| | எருமை | 01 | 03 | 03 | 01 | - |
| டெஸிவெலி | மாடு | 01 | 02 | 06 | 02 | - |
| நாகன்சோலை | மாடு | - | - | - | - | 02 |
| | எருமை | 01 | 22 | 20 | 27 | 02 |
| | ஆடு | 02 | 42 | 31 | 41 | - |
| ரந்தெனிய | மாடு | - | 31 | 40 | 26 | 02 |
| | எருமை | 01 | 01 | 02 | 12 | 02 |
| கொஹொம்பான | மாடு | 09 | - | 06 | 05 | - |
| கொரை | மாடு | 05 | 14 | 14 | 12 | 02 |
| மஹயாய | எருமை | 01 | 27 | 51 | 53 | 02 |
| | காளை | - | - | - | - | 04 |
| பாசிக்குடா | மாடு | 01 | 06 | 04 | 03 | - |
| | எருமை | 01 | - | 09 | | - |

### ii. கோழி வளர்ப்பு

| மாதிரி தென்னஞ் சோலை | முட்டையிடும் கோழிகள் | தாரா | கிரிராஜ் கோழிகள் |
|---|---|---|---|
| கரட்லண்ட | 600 | - | - |
| மஹுயாய | 713 | 43 | 32 |

## 3.1.11 இறப்பர் பயிர்ச்செய்கை

குருநாகலை போபிடியவில் அமைந்துள்ள மாதிரி தென்னஞ் சோலையில் 22 ஏக்கர் 03 ரூட் பரப்பில் பரவியுள்ள உறுதியான அரைவாசிக் காணியில் இறப்பர் பயிர்ச்செய்கை காணப்படுகிறது. அவற்றுள் பால் வெட்டும் ஏக்கரின் அளவு 05 ஆகும். 2012ம் ஆண்டில் இந்த இறப்பர் பயிர்ச்செய்கையில் 6418 புகையடிக்கப்பட்ட தார் இறப்பர் சீட்டுகள் (RSS) உற்பத்திச் செய்யப்பட்டுள்ளன. இதன் பெறுமதி 2847 கிலோ கிராம் ஆகும். இதற்கிணங்க இவ்வருடத்தின் இறப்பர் வருமானம் ரூபா: 1,308,253.67 ஆகும்.

## 3.1.12 கப்துறுபாய தொழில்நுட்ப பூங்கா

மாக்கந்துர கோனவிலையில் அமைந்துள்ள மஹுயாய மாதிரி தென்னஞ் சோலையில் “கப்துறுபாய” தொழில்நுட்ப நிலையமொன்று நிறுவப்பட்டுள்ளதோடு, அத் தொழில்நுட்ப நிறுவனம் தெங்கு பயிர்ச்செய்கையாளர்களின் சகல தேவைகளையும் நிறைவேற்றும் கேந்திர நிலையமாக செயற்படுகின்றது. அதற்கிணங்க, மாதிரி தென்னஞ் சோலையின் மூலம் உற்பத்திச் செய்யப்படுகின்ற பண்ணை உற்பத்தி மற்றும் தெங்கு சார்ந்த பொருட்களின் விற்பனையும் கண்காட்சியும், பயிர்ச்செய்கையாளர்களுக்குத் தேவையான விதையும் பயிர்செய்கைக்கு தேவையான பொருட்களும், விவசாய இரசாயணப் பொருட்கள் அதேபோல் தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொடுக்கும் தெங்கு அபிவிருத்தி அலுவரின் அலுவலகம், மாதிரி பண்ணை, சிறுவர் பூங்கா மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பன இந்த கப்துறுபாய தொழில்நுட்ப நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளன. இந்த கேந்திர நிலயத்துக்கு வருகைதரும் எந்தவொரு தெங்கு பயிர்ச்செய்கையாளருக்கும் தெங்கு பயிர் செய்கைக்குத் தேவையான சகல தேவைகளையும் நிறைவேற்றக்கூடிய சேவை இதனால் வழங்கப்படுகின்றன.







2012ம் ஆண்டில் கப்துறுபாய நிலையத்தின் வரவு மற்றும் செலவுகள் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி (விற்பனை) | | 11,833,567.16 |
| விலைக்கு வாங்குதல் (கொள்வனவு) | 12.890,917.38 | |
| விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் செலவு | | 10,661,426.22 |
| அண்ணளவான இலாபம் | 1,172,140.94 | |
| விடுதியின் வாடகை வருமானம் | 360,000.00 | |
| நிறுவனம் மற்றும் நிர்வாகச் செலவு | 908,210.94 | |
| விற்பனை மற்றும் பங்கிடல் செலவு | 34,783.80 | |
| தேறிய இலாபம் | | 589,146.20 |

## 3.1.13 சூழலியல் சுற்றுலாக் கைத்தொழில்

கிழக்குப் பிரதேசத்தில் பாசிக்குடா கடற்கரையோரத்துக்கு அண்மையில் அமைந்துள்ள பாசிக்குடா மாதிரி தென்னஞ் சோலையில் சூழலியல் சுற்றுலாக் கைத்தொழிலினை மேலும் விருத்திச் செய்யும் (Eco—Tourism) நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க 2012ம் ஆண்டாகும்போது 03 சுற்றுலா விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளதோடு, பாசிக்குடா மாதிரி தென்னஞ் சோலையின் சுற்றுலா விடுதி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதற்கு பாரியளவான கேள்விகள் காணப்படுகின்றன. இவ்வருடத்தினுள் அதிகளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பெற்றுக் கொண்ட வருமானம் ரூபா:1,407,585 ஆகும்.

வருமானத்தின் வருடாந்த விரிவாக்கம்




போபிடிய மாதிரி தென்னஞ் சோலையில் சுற்றுலா விடுதியொன்று நடாத்தப்பட்டு வருவதோடு, அதற்கு பிரதேசத்தில் பாரிய கேள்விகள் காணப்படுகின்றன. 202ம் ஆண்டில் ரூபா:185,752.50 வருமானம் பெற்றுக் கொள்ளப்ட்டுள்ளன.

# 4 . மனிதவள முகாமைத்துவம்

2012ம் ஆண்டில் தெங்கு பயிர்ச்செய்கை சபையின் தலைவராக சரத் கீர்த்திரத்ன அவர்கள் கடமையாற்றினார். இவ்வருடத்தினுள் 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இச்சபையில் பதில் கடமையாற்றும் பொது முகாமையாளராக 06.07.2011 முதல் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) டி.எம்.எல். பண்டாரநாயக்க அவர்கள் கடமையாற்றியதோடு, 2012.01.18 முதல் பொது முகாமையாளராக திருமதி. டீ.வீ.டி.டி.எஸ். கருணாரத்ன அவர்கள் கடமையாற்றினார்

## 4.1 அலுவலர் குழாத்தின் கட்டமைப்பு

2012ம் ஆண்டில் சபையின் இலக்கினை நிறைவேற்றுவதற்காக கீழ்க் குறிப்பிடப்டும் அலுவலர் குழாத்தினர் பங்களிப்பு நல்கியுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| சிரேஷ்ட முகாமையாளர் | - | 03 |
| முகாமையாளர் | - | 16 |
| கனிஷ்ட முகாமையாளர் | - | 40 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) | - | 222 |
| முகாமைத்துவ உதவியாளர்(தொழில்நுட்பம் அற்ற) | - | 155 |
| ஆரம்ப தரம் (விஞ்ஞானம்) | - | 27 |
| ஆரம்ப தரம் (விஞ்ஞானம் அற்ற) | - | 80 |
| தற்போது பதவி வகிப்பவர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் நிலவுகின்ற பதவிகள் | - | 11 |
| தோட்ட நிர்வாக சேவையிலுள்ள ஊழியர்கள். | - | 980 |
| மொத்தம் | - | 1534 |

### 4.1.1. பொதுவான நிர்வாக நடவடிக்கைகள்.

பல வருடகால முயற்சியின் பிரதிபலனாக இவ்வருடத்தில் சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் அனுமதித்துக் கொள்ளப்பட்டது. அத்துடன் தோட்டப் பிரிவுக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அனுமதியை பெற முடிந்துள்ளது. அதற்கிணங்க சபையின் அனைத்து ஊழியர்களும் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு ஏற்ப உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் தேசியப் பொருளா-தாரத்திற்கு நேரடியான பங்களிப்பினை பெற்றுக் கொடுக்கும் தெங்கு பயிரின் அபிவிருத்திக்காக குறித்த விரிவாக்கல் நடவடிக்கைகள் கிராமிய மட்டத்தில் நிறைவேற்றப்படுவது தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாலேயாகும். எனவே வினைதிறன் மற்றும் செயற்றின் மிக்க விரிவாகக்கல் சேவையினை நடாத்திச் செல்வதற்காக தெங்கு அபிவிருத்தி அலுவலர் பதவிக்கான வெற்றிடங்களை

பூரணப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கிணங்க ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு ஏற்ப முறைமையானதும் சரியானதுமான முறையில் 104 தெங்கு அபிவிருத்தி அலுவலர்கள் 2012 ம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.



2012ம் ஆண்டில் தெ.அ.ம.தோ.அ.அமைச்சிரன் கைகளால் நியமனம் பெறுதல்

இடமாற்றத்தினை பெற்றுக் கொள்வதற்கு விரும்புகின்ற மற்றும் ஒரே சேவை நிலையத்தில் மிக நீண்ட காலம் சேவையாற்றுகின்ற அலுவலர்கள் / ஊழியர்களுக்கு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவப் பிரிவினால் பின்பற்றப்படும் செயற்றிட்டத்துக்கு ஏற்ப 2012ம் ஆண்டிலே இடமாற்ற சபைக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய சேவையின் தேவைப்பாடு மற்றும் ஊழியர்களின் முறையீட்டின் அடிப்டையில் 06 பிரதேச முகாமையாளர்களுக்கும், 08 தெங்கு அபிவிருத்தி அலுவலர்களுக்கும், ஒரு சாரதிக்கும் மற்றும் ஒரு எழுது வினைஞருக்கும் 2012 ம் ஆண்டில் தாம் விரும்பிய இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுக்கப்ட்டுள்ளன.

### 4.1.3 ஓய்வினைப் பெற்றுக் கொள்ளுதல்.

சபையின் அபிவிருத்திக்காக தமது ஆளுமையையும் திறமையையும் அர்ப்பணித்து வினைத்திறனுடன் பாரிய சேவைகளை நிறைவேற்றி 60 வயதை பூர்த்தி செய்தமையினால் 37 அலுவலர்கள்/ ஊழியர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளனர்.

இவ் அலுவலர் / ஊழியர்களுக்கு உரித்தான மிகையூதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை குறித்த கால எல்லையினுள் விரைவில் அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நிறுவனம் மற்றும் மனித வலுப்பிரிவு பொருத்தமான படிமுறைகளை மேற்கொண்டது.

## 4.1.2 சேவையாளர் பயிற்சி

2012ம் ஆண்டில் சபையின் பல்வேறு பிரிவுகளில் கடமையாற்றும் அலுவலர்களின் அபிப்பிராயம், எண்ணம் மற்றும் திறமையினை வளர்க்கும் நோக்கில் பல்வேறு வகையான நிறுவனங்களுக்கு 43 அலுவலர்கள் பயிற்சிப் பாடநெறி / செயலமர்வு /கருத்தரங்கு என்பவற்றிற்காக இணைக்கப்பட்டுள்ளதோடு அவர்களால் அப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமான முறையில் நடாத்தப்பட்டுள்ளன. அத்துடன் அனைத்து முகாமைத்துவ சேவையிலுள்ள அலுவலர்களுக்கும் லுணுவிலை பயிற்சி நிலையத்தில் வதிவிடப் பயிற்சி பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெளிநாட்டு வள முகாமைத்துவ திணைக்களத்தின் ஊடாக எந்தவித பயிற்சி சந்தர்ப்பங்களும் அலுவலர்களுக்கு கிடைக்கவில்லை. எனவே அதற்காக விண்ணப்பித்து விசேட வெற்றியை

## 4.1.6 போக்குவரத்து திரட்டு

2012ம் ஆண்டில் இடம்பெற்ற போக்குவரத்து திரட்டு பின்வருமாறு

| | | |
|---|---|---|
| மோட்டார் வண்டி | - | 03 |
| டபல் கெப் | - | 34 |
| ஜீப் வண்டி | - | 05 |
| வேன் வண்டி | - | 01 |
| லொறி வண்டி | - | 17 |
| முச்சக்கர வண்டி | - | 01 |
| ட்ரக்டர் (டயர் 04) | - | 47 |
| ட்ரக்டர் (டயர் 02) | - | 25 |
| ட்ரக்டர் டேலர் | - | 78 |
| மோட்டார் சைக்கிள் | - | 92 |
| பஸ் வண்டி | - | 04 |
| பெகோ இயந்திரம் | - | 02 |
| மொத்தம் | - | 309 |

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைய தொன்னூறு இலட்ச தென்னங் கன்றுகளை பயிரிடும் விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கப்றுக புறவற ஆகிய தெங்கு பயிர்ச்செய்கையுடன் தொடர்புடைய பாரிய துரிதமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வருடத்தினுள் ஆரம்பிக்கப்பட்டதோடு போக்குவரத்து திரட்டில் காணப்படுகின்ற வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சினால் 02 கெப் வண்டிகளும், தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் லொறியொன்றும் தற்காலிக அடிப்படையில் சபைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் மாத்தறை வெலிகமை தென்னோலை வாடல் மற்றும் அழுகும் நோயினை ஒழிப்பதற்காக விரிவாக்கல் வேலைகளை துரிதமாக நிறைவுறுத்துவதற்காக மாத்தறை, மாவட்ட செயலகத்தினூடாக தற்காலிகமாக கெப் வண்டியொன்று சபைக்கு தற்காலிகமாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

தெங்கு பயிர்ச்செய்கை சபையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேற்படி போக்குவரத்து திரட்டுக்குரிய வளங்களை குறைந்த செலவில் நடாத்திச் செல்வதற்கு நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் குறைபாடுகள் நிலவிய வடமத்திய பிரதேசத்தின் அலுவலர்களின் அலுவலக இல்லம் அநுராதபுர கட்டுகெளியாவிலே நிர்மானிக்கப்பட்டு 2012ம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க நிர்வாகம் மற்ம் மனிதவள முகாமைத்துவப் பிரிவு 2012ம் ஆண்டில் கிடைக்கின்ற வளங்களை உச்சளவில் முகாமைப்படுத்தி சபையின் முக்கிய பொறுப்பான தெங்கு பயிர்ச்செய்கை விரிவாக்கும் நடவடிக்கைக்காக சிறந்த ஒத்துழைப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்ட்டுள்ளது.

# 05. கணக்குவைத்தல்

தெங்கு பயிர்ச்செய்கை சபையின் ஒட்டுமொத்த செயற்பாடுகளும் உரிய சுற்றுநிருபங்கள், நிதி பிரமாணங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்குவைத்தல் தராதரத்துக்கமைய திட்டமிடுதல், நெறிப்படுத்தல் மற்றும் ஆவணப்படுத்தல், உரிய பிரிவுகளுக்கு அறிக்கை செய்தல் நிதி முகாமைத்துவ செயற்பாடாகும்.

பிரதி பொது முகாமையாளரின் (நிதி முகாமைத்துவம்) நெறிப்படுத்தலில் நிதிப் பிரிவின் உதவி பொது முகாமையாளர் (நிதி) மற்றும் கணக்கு அலுவலர்களாக உதவி ஆளணியினருடன் தலைமை அலுவலகத்தினதும், பிரதேச அலுவலகங்களினதும் நடவடிக்கைகளை செயற்படுத்துதல் மற்றும் அறிக்கையிடல், மேற்கொள்ளப்படுகிறது.

2012 ஆண்டில் சபையின் மீண்டெழும் செலவு மற்றும் திறைசேரி ஒதுக்கீடுகளின்கீழ் 270.198 மில்லியன் ரூபாவும், தெங்கு அபிவிருத்தி செயற்பாடுகள் அடங்கலாக ஏனைய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு 259,000 மில்லியன் ரூபாவும் சபைக்கு கிடைத்துள்ளதுடன், வெலிகமவில் இலைச்சுருள் நோயை இல்லாதொழிக்கும் பணிக்காக தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியொதுக்கீடுகளிலிருந்து 6,308 மில்லியன் ரூபா இந்தாண்டில் சபைக்கு கிடைதுள்ளது. இதற்க்கு மேலதிகமாக சபையின் மாதிரி தென்னந்தோட்டங்களின் நிர்வாகத்தின் மூலம் 124,352 மில்லியன் ரூபா தேறிய இலாபம் ஈட்டப்பட்டுள்ளதுடன், நாற்றுமேடை நிர்வகிப்பின் மூலம் கிடைத்த தேறிய இலாபம் 67,863 மில்லியன் ரூபாவும், நானாவித வருமானமாக 26,361 மில்லியன் ரூபாவும் சபையின் முழு பெறுகையினுள் அடங்குகின்றது.

சபை 2012 ஆண்டில் மேற்கொண்ட மீண்டெழும் செலவு 358,272 மில்லியன் ரூபா என்பதுடன், தெங்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் மானியத்தின் பெறுமதி 570,576 மில்லியன் ரூபாவாகும். இந்த ஆண்டின் விரிவாக்கல் செயற்திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்ட முழுத்தொகை 32,672 மில்லியன் ரூபா. என்பதுடன், கப்றுக்க முதலீட்டு கடன் திட்டத்தின்கீழ் செய்கையாளர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி மானியப்பணம் 6.847 மில்லியன் ரூபாவாகும். ஆண்டின் இறுதியில் சபையின் முழு சொத்துக்களின் பெறுமதி 1,752.486 மில்லியன் ரூபாவாகும்.

## தென்னை பயிர்ச்செய்கை சபை

### 2012.12.31 நிதி நிலைக் கூற்று

| | குறிப்பு | 2012 | 2012 | 2011 | 2011 |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **அசையா சொத்துக்கள்** | | | | | |
| **சொத்துக்கள், செலவு மற்றும் உபகரணங்கள்** | 2 | 318,600,359.12 | | 255,266,486.07 | |
| **முடிவுறா வேலைகள்** | 3 | 9,603,346.06 | | 1,549,690.32 | |
| **முதலீடு ( குறுங்கால )** | 4 | 10,560,867.16 | | 9,776,596.36 | |
| **கப்றுக்க மீள்நிதி முதலீடு (குறுங்கால)** | 4 | 501,225,132.44 | | 467,291,582.35 | |
| **எதிர்பாராத செலவு** | 5 | 208,832,536.77 | | 157,820,419.08 | |
| | | | 1,048,822,241.55 | | 891,704,774.18 |
| **வாடகை காணி** | 6 | 5,580,257.68 | 5,580,257.68 | 5,727,106.57 | 5,727,106.57 |
| அசையும் சொத்து | | | | | |
| கையிருப்பு | 7 | 401,759,494.94 | | 264,926,559.77 | |
| வர்த்தக மற்றும் வேறு கிடைக்க வேண்டியவை | 8 | 204,518,007.69 | | 75,239,315.32 | |
| முற்கொடுப்பனவு | 9 | 1,609,134.68 | | 92,266,404.08 | |
| வைப்பு ( குறுங்கால ) | 10 | 1,940,902.98 | | 1,940,902.98 | |
| முதலீடு ( குறுங்கால ) | 11 | 403,733.36 | | 384,028.24 | |
| நிதி மற்றும் நிதிக்கு சமனானவை | 12 | 91,890,712.23 | | 360,620,803.35 | |
| நடைமுறைக் கணக்கு | 13 | (4,038,177.53) | | 1,906,888.45 | |
| | | | 698,083,808.35 | | 797,284,902.19 |
| | | | 1,752,486,307.58 | | 1,694,716,782.94 |
| **மொத்த சொத்துக்கள்** | | | | | |
| குறைக்கப்பட்டது : பொறுப்புக்கள் | | | | | |
| நடைமுறை பொறுப்புகள் | | | | | |
| செலுத்த வேண்டியவை | 14 | 29,152,496.17 | | 16,224,300.31 | |
| எதிர்பார்க்கும் செலவு | 15 | 27,066,414.80 | | 7,634,321.46 | |
| குறுங்கால ஒதுக்கீடு | 16 | 3,264,237.20 | | 3,512,182.00 | |
| | | 59,483,148.17 | | 27,370,803.77 | |
| நடைமுறையற்ற பொறுப்புகள் | | | | | |
| நீண்டகால ஒதுக்கல்கள் | 16 | 184,921,384.51 | | 184,157,605.28 | |
| | | 184,921,384.51 | | 184,157,605.28 | |
| மொத்த பொறுப்புகள் | | | 244,404,532.68 | | 211,528,409.05 |
| மொத்த தேறிய சொத்துக்கள் | | | 1,508,081,774.90 | | 1,483,188,373.89 |
| மொத்த சொத்துக்கள் ∴ திரவத்தன்மை | | | | | |
| ஒருங்கிணைந்த நிதியம் | | | | | |
| மூலதன நிதியம் | 17 | 320,935,189.75 | | 293,207,160.45 | |
| பொது நிதியம் | 18 | 439,484,464.20 | | 489,134,128.16 | |
| மூலதன நிதியம் ( கப்றுக்க ) | 19 | 439,302,677.32 | | 393,144,586.00 | |
| கப்றுக்க முதலீடு | 20 | 67,572,395.25 | 1,267,294,726.52 | 66,915,450.90 | 1,242,401,325.51 |
| **இருப்புகள்** | | | | | |
| மூலதன இருப்புகள் | 21 | 67,545,410.98 | | 67,545,410.98 | |
| வரவேண்டிய ( இருப்புகள் ) | 22 | 173,241,637.40 | | 173,241,637.40 | |
| | | | 240,787,048.38 | | 240,787,048.38 |
| மொத்த தேறிய சொத்துக்கள் ∴ திரவத்தன்மை | | | 1,508,081,774.90 | | 1,483,188,373.89 |

..................................................
**சரத் கீர்த்திரத்ன**
**தவிசாளர்**
**தென்னை பயிர்ச்செய்கை சபை**

.........................................
**கே.டி.எல். தர்மசிறி**
**பிரதி பொது முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்)**
**தென்னை பயிர்ச்செய்கை சபை**

## தென்னை பயிர்ச்செய்கை சபை
### 2012.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான
### நிதி செயலாற்றுகை கூற்று

| | குறிப்பு | | 2012 ரூ.ச | | 2011 ரூ.ச |
|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | | | | | |
| மீண்டெழும் கொடை | | | 270,198,000.00 | | 261,741,000.00 |
| செஸ் கொடை | | | 214,620,000.00 | | 311,150,000.00 |
| பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | | | 6,308,476.10 | | 66,876,699.58 |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | | | 215,461,620.00 | | - |
| ருனேீ கருத்திட்டம் | | | 239,640.00 | | - |
| | | | 706,827,736.10 | | 639,767,699.58 |
| வேறு வருமானங்கள் | | | | | |
| உர கருத்திட்ட வருமானம் | 23 | 1,236,868.36 | | (2,172,796.61) | |
| நாற்றுப்பண்ணை துறை வருமானம் | 24 | 67,863,491.12 | | 45,090,963.73 | |
| நானாவித வருமானம் | 25 | 26,361,334.38 | | 16,889,410.86 | |
| நிலையான சொத்து விற்பனை இலாபம் | 26 | - | | 545,706.99 | |
| மாதிரி தென்னந்தோட்ட வருமானம் | 27 | 124,352,387.23 | 219,814,081.09 | 95,888,041.03 | 156,241,326.00 |
| | | | 926,641,817.19 | | 796,009,025.58 |
| குறைக்கப்பட்டது :- மானிய கொடுப்பனவு | 28 | | 570,576,760.14 | | 293,136,364.54 |
| | | | 356,065,057.05 | | 502,872,661.04 |
| குறைக்கப்பட்டது :- செயற்பாட்டு கொடுக்கபனவு | | | | | |
| சம்பளங்கள், படிகள் | 29 | 217,876,094.73 | | 202,251,942.16 | |
| பயண செலவு | 29 | 1,948,625.07 | | 1,484,925.95 | |
| வழங்கல், பணிக்கொடை செலவு | 29 | 20,222,476.70 | | 13,374,887.26 | |
| பராமரிப்பு செலவு | 29 | 15,162,359.77 | | 14,475,195.76 | |
| வழங்கல் செலவு | 29 | 11,140,548.06 | | 9,749,259.77 | |
| பெறுமான தேய்வு ஒதுக்கம் | 29 | 41,663,343.57 | | 19,028,032.54 | |
| வேறு செயற்பாட்டு செலவு | 29 | 50,258,977.19 | 358,272,425.09 | 55,997,168.15 | 316,361,411.59 |
| மொத்த செயற்பாட்டு செலவு | | | | | |
| செயற்பாடுகளில் | | | | | |
| மிகை ∴ (பற்றாக்குறை) | | | (2,207,368.04) | | 186,511,249.45 |

# தென்னை பயிர்ச்செய்கை சைப

## 2012.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான

## ஒருங்கிணைந்த நிதியோட்ட கூற்று

| | | 2012 | | 2011 |
|---|---|---|---|---|
| | | ரூ. சு | | ரூ.ச |
| நடவடிக்கை செயற்பாடுகளில் நிதியோட்டம் | | | | |
| ஆண்டின் மிகை | | (2,207,368) | | 186,511,249 |
| நிதியல்லாத கொடுக்கல் வாங்கல் ஏற்பாடுகள் | | | | |
| ஆண்டின் பெறுமான தேய்வு ஒதுக்கீடு | 27,563,548 | | 25,758,210 | |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 35,253,280 | | 45,124,332 | |
| கணக்காய்வு கட்டண ஒதுக்கீடு | 500,000 | | 350,000 | |
| நிலையான சொத்து விற்பனை இலாபம் | 500,000 | | 500,000 | |
| எதிர்பாரா செலவு | - | | (545,707) | |
| குத்தகை கொள்வனவு | 2,045,658 | | 1,667,423 | |
| காணி சீர்திருத்த ஆணைக்குழு குத்தகை ஒதுக்கீடு | 146,849 | | 146,849 | |
| Privision for L.R.C. Tax Bonus | 278,500 | | 279,781 | |
| | | 66,287,835 | | 73,280,888 |
| | | 64,080,467 | | 259,792,137 |
| பிற்கால தேவைக்கான ஒதுக்கீடு - பொது பேரேடு | (47,542,296) | | (3,602,570) | |
| கப்ருக்க பேரேடு | 14,083 | (47,528,213) | 364,567 | (3,238,003) |
| ஏற்பாடு | | | | |
| நடவடிக்கை கணக்கு கப்றுக்க (பற்றாக்குறை) | 38,744,009 | | 10,209,457 | |
| பிணை காப்பு நிதியம் (கப்றுக்க) | 656,944 | 39,400,953 | 41,410,184 | 51,619,641 |
| செயற்பாட்டு மூலதன ஒதுக்கீடுகளுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | | 55,953,207 | | 308,173,775 |
| செயற்பாட்டு மூலதன மாற்றம் | | | | |
| கையிருப்பு (அதிகரித்தல்) / (குறைதல்) | (136,832,935) | | (122,962,691) | |
| கடன்பட்டோர் (அதிகரித்தல்) / (குறைதல்) | (38,621,423) | | (38,370,758) | |
| வைப்பு (அதிகரித்தல்) / (குறைதல்) | - | | 187,197,746 | |
| நடைமுறை கணக்கு (அதிகரித்தல்) / (குறைதல்) | 5,945,066 | | 10,333,513 | |
| முதலீடு (அதிகரித்தல்) / (குறைதல்) | (19,705) | | (18,640) | |
| அறவிடமுடியா கடன் ஒதுக்கீடு (குறைதல்) | - | | - | |
| கடன்கொடுத்தோர் (அதிகரித்தல்) / (குறைதல்) | 32,360,289 | (137,168,708) | (44,588,056) | (8,408,886) |
| நடவடிக்கை செயற்பாடுகளில் தேறிய நிதியோட்டம் | | (81,215,501) | | 299,764,889 |
| முதலீட்டு செயற்பாடுகளில் நிதியோட்டம் | | | | |
| நிலையான சொத்து கொள்வனவு (அதிகரிப்பு) | (81,777,629) | | (33,709,870) | |
| முதலீடு - நீண்டகால குறைதல் / அதிகரித்தல் | (34,717,821) | | (130,300,477) | |
| நிலையான சொத்து விற்பனை | - | | 597,166 | |
| எதிர்பாரா செலவு | (69,924,210) | | (55,244,927) | |
| முடிவடையா வேலைகள் | (9,603,346) | (196,023,006) | 1,549,690 | (217,108,418) |
| முதலீட்டு செயற்பாடுகளில் தேறிய நிதியோட்டம் | | (277,238,507) | | 82,656,471 |
| காணி சீர்திருத்த குத்தகை செலுத்தல் | - | | (1,287) | |
| கணக்காய்வு செலுத்தல் | (1,036,836) | | (335,866) | |
| பணிக்கொடை செலுத்தல் | (34,234,748) | (35,271,584) | (22,276,731) | (22,613,884) |
| | | (312,510,091) | | 60,042,587 |
| நிதி செயற்பாடுகளில் நிதியோட்டம் | | | | |
| நிதிக்கொடை - திறைசேரி (கப்றுக்க) | 7,400,000 | | 75,236,825 | |
| மூலதன கொடை - திறைசேரி | 36,380,000 | | 144,924,000 | |
| வேறு நிதியங்கள் | - | 43,780,000 | 2,641,745 | 222,802,570 |
| நிதி செயற்பாடுகளில் தேறிய நிதியோட்டம் | | | | |
| தேறிய குறைவு / அதிகரிப்பு நிதி மற்றும் நிதிக்கு சமமானவை | | (268,730,091) | | 282,845,157 |
| ஆண்டு ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவை | | 360,620,803 | | 77,775,646 |
| ஆண்டு இறுதியில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவை | | 91,890,712 | | 360,620,803 |

# தென்னை பயிர்ச்செய்கை சபை

2012.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான

<u>சொத்துக்கள் வேறுபாடு தொடர்பான அறிக்கை</u>

| | ஒருங்கிணைந்த நிதியம் | மூலதன இருப்பு | மாற்றிய இருப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2010 டிசம்பர் 31 இல் மீதி | 782,472,811 | 240,787,048 | - | 1,023,259,859 |
| | 782,472,811 | 240,787,048 | | 1,023,259,859 |
| கணக்கு கொள்கை மாற்றம் திருத்திய மீதி | | | | |
| சொத்து மீள்மதிப்பீட்டினால் மிகை முதலீட்டு மீள்மதிப்பீட்டால் பற்றாக்குறை | | | | |
| மாற்ற வேறுபாடு | | | | |
| | 782,472,811 | 240,787,048 | - | 1,023,259,859 |
| | | | | - |
| | | | | - |
| நிதி செயலாற்றுகை அடையாளம் காணப்படாத தேறிய இலாப, நட்டம் | 273,417,266 | - | - | 273,417,266 |
| காலப்பகுதிக்கான மிகை ∴ பற்றாக்குறை | 186,511,249 | - | - | 186,511,249 |
| 2010 டிசம்பர் 31 திகதியில் மீதி | 1,242,401,326 | 240,787,048 | - | 1,483,188,374 |
| சொத்து மீள்மதிப்பீட்டு பற்றாக்குறை | - | | | |
| முதலீட்டு மீள்மதிப்பீட்டு மிகை | - | | | |
| நிதி மாற்றத்தின் வேறுபாடுகள் | - | | | |
| | 1,242,401,326 | 240,787,048 | - | 1,483,188,374 |
| நிதி செயலாற்றுகை கூற்றில் அடையாளம் காணப்படாத தேறிய இலாபம் மற்றும் நட்டம் | 24,164,450 | - | - | 24,164,450 |
| கால பகுதிக்கான மிகை ∴ பற்றாக்குறை | (2,207,368) | - | - | (2,207,368) |
| 2012 டிசம்பர் 31 இல் மீதி | 1,264,358,408 | 240,787,048 | - | 1,505,145,456 |

# 06. உள்ளகக் கணக்காய்வு

## 6.1 உள்ளகக் கணக்காய்வின் நோக்கம்

தெங்கு பயிர்ச்செய்கை சபை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த தொலைலநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோளை அடைந்து கொள்வதற்கான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் இருக்கின்றனவா எனவும், உள்ளக நிர்வாகச் செயற்பாடுகள் வருடம் முழுவதும் வினைதிறன் மற்றும் செயற்திறனுடன் காணப்படுகின்றனவா எனவும், சொத்துக்களை பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பயன்படுத்தி பிரதேச அலகுகளுக்கிடையில் சிறந்த இணைப்புக்கள் நிலவுகினறனவா என்பது தொடர்பாகவும் மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீடாகும்.

## 6.2 இவவருடத்தில் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு பரிசீலனைகள்

உள்ளகக் கணக்காய்வு விடயப்பரப்பிற்கு உரிய பொறுப்புக்கள மற்றும் கடமைகளை மிகவும் சிறந்த முறையில் தொடர்ச்சியான அடிப்படையில் 2012ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### 6.2.1 காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசீலனை

- முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 43(1) ற்கு ஏற்ப சம்பள உயர்வு தொடர்பான கணக்காய்வு பரிசீலனை.
- நிதி பரிசீலனை—நாற்றுமேடைக் கணக்கு (988) தொடர்பான கணக்காய்வு பரிசீலனை
- நிதி பரிசீலனை—தோட்டக் கணக்கு (995) தொடர்பான கணக்காய்வு பரிசீலனை
- 2012ம் ஆண்டின் முதலாம் காலாண்டு முன்னேற்றம் தொடர்பான கணக்காய்வு பரிசீலனை
- விசேட சம்பள திருத்த அறிக்கை தொடர்பான கணக்காய்வு பரிசீலனை
- உதவி பிரதேச முகாமையாளருக்கான சம்பளம் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு பரிசீலனை
- விசேட வாகன சரிபார்ப்பு அறிக்கை
- சேமலாப நிதியத்தினை விடுவித்தல் தொடர்பான கணக்காய்வு பரிசீலனை (பரிசீலனை – 100)

## 6.3 சாதாரண கணக்காய்வு பரிசீலனை

### 6.3.1 பிராந்திய அலுவலகங்கள்

கேகாலை, களுத்துறை, கம்பஹா மற்றும் அநுராதபுர பிராந்திய அலுவலகங்கள்

### 6.3.2 மாதிரி தென்னஞ் சோலைகள்

போபிட்டிய, நாகன்சோலை, ரந்தெனிய மற்றும் மஹயாய மாதிரி தென்னஞ் சோலைகள்.

## 6.3.3 தென்னங்கன்று நாற்றுமேடை

எரமினிகொல்லை நாற்றுமேடை, கொரோஸ்துவை நாற்றுமேடை, கிரிந்திவல நாற்றுமேடை, வல்பிட நாற்றுமேடை மற்றும் கலாவெவை நாற்றுமேடை.

## 6.3.4. தெங்கு அபிவிருத்தி அலுவலர் அலுவலகம் மற்றும் களப் பரிசீலனை

களுத்துறை, பானந்துறை, பண்டாரகமை, ஹோமாகமை, கொஸ்கமை, வல்பிட, மீரிகமை மற்றும் பதவியா அபிவிருத்தி அலுவலர் அலுவலகம் மற்றும் களப் பரிசீலனை

மேற் குறிப்பிடப்பட்டுள்ள அலகுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடவடிக்கைகளில் நிதி மோசடி அல்லது பாரிய பெறுமதி தவறுகள் இருக்கவில்லை. அத்துடன் அடையாளம் காணப்பட்ட சாதாரணப் பிழைகள் மற்றும் குறைபாடுகளை தலைவர் அவர்களுக்கு அறிவித்து அவற்றை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

## 6.4 அடையாளம் காணப்பட்ட பொதுவான பிழைகளும் குறைபாடுகளும்

- போதுமான வேலைப்பகிர்வு இன்மை
- அலுவலர் குழாத்தின் வாகனங்களில் போக்குவரத்துக் குறிப்பு நடாத்துவதில் குறை
- சில, மாதிரி தென்னஞ் சோலைகள் மற்றும் நாற்றுமேடைகளில் பெறுமதியுடன் மரங்கள் அடையாளம் இடப்பட்டு தொகை மதிப்பு அட்டவணை மேற்கொள்ளப்படாமை.
- சில பிராந்திய அலுவலகம் மற்றும் மாதிரி தென்னஞ் சோலைகளில் உள்ளக நிர்வாகத்திற்குரிய அட்டவணை நடாத்தப்படாமை
- மாதிரி தென்னஞ் சோலைகளில் மேற்கொள்ளப்படும் சில வெளிக் கொள்வனவிறகு தலமைக் காரியாலயத்தின் எழுத்து ரீதியிலான அனுமதியைப் பெறாது கொள்வனவிற்கு பின்னர் அனுமதியைப் பெற்றிருத்தல்
- பிராந்திய அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் வாகன திருத்த வேலைகள் மற்றும் ஏனைய செலவுகளை மீள்நிரப்பும் போது அப்பற்றுச் சீட்டு தலமைக் காரியாலயத்திற்கு சமர்பிக்கப்படாமை
- நாற்றுமேடைகளில் தென்னங்கன்றுகளை விநியோகிக்கும்போது அனுமதிப்பத்திரம் இன்றி தொலைபேசி அழைப்பின் அடிப்படையில் மாத்திரம் சில சந்தர்ப்பங்கில் தென்னங்கன்றுகளை விநியோகித்திருத்தல்.

## 6.5 விசேட கணக்காய்வுப் பரிசீலனை

| சேவை நிலையம் | காரணம் | பெறுபேறு |
|---|---|---|
| டெஸிவெலி மாதிரி தென்னஞ் சோலையில் கொப்பறா உற்பத்தி தொடர்பான விசேட கணக்காய்வு பரிசீலனை | கொப்பறா உற்பத்தி, களஞ்சியப்படுத்தல் மற்றும் கொப்பறா விற்பனை தொடர்பான செயற்பாடுகள் சபையினால் ஏற்றுக்கொண்ட செயன்முறையிலிருந்து வெளிநகர்தல் | கொப்பறா உற்பத்தி, களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனையை பொருத்தமான முறையில் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் |
| பாசிக்குடா மாதிரி தென்னஞ் சோலையில் 2011ம் வருடத்தின் முன்னேற்றம் தொடர்பாக விசேட கணக்காய்வு பரிசீலனை | பாசிக்குடா மாதிரி தென்னஞ் சோலையின் முன்னேற்றம் | 2005 தொடக்கம் 2010 வரையிலான முன்னேற்றதத்தை ஒப்பிடுதல். |
| கப்றுக புறவற விதைத்தேங்காய் கொடுப்பனவு தொடர்பான விசேட கணக்காய்வு பரிசீலனை- திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று தெங்கு அபிவிருத்தி அலுவலர் பிரிவு | திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று ஆகிய தெங்கு அபிவிருத்தி அலுவலர் பிரிவுகளில் விதைத்தேங்காய்கைள விநியோகிக்கும் தனியார் தோட்ட உரிமையாளர்களிடம் விதைத்தேங்காய்களை பெற்றுக் கொள்ளாது நிதி பெற்றுக் கொள்வதற்குரிய, கப்றுக புறவற விதைத்தேங்காய் கொடுப்பனவு வவுச்சரை தெங்கு அபிவிருத்தி அலுவலர் - வழங்கியிருத்தல் | இது தொடர்பான கொடுப்பனவுகள் ரத்துச் செய்யப்பட்டு குறித்த அலுவலர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| கோகாலை பிராந்திய அலுவலகத்தில் கப்றுக புறவற மக்கள் பங்களிப்புடன் விதைத்தேங்காய் நாற்றுமேடை தொடர்பாக விசேட கணக்காய்வு பரிசீலனை | கேகாலை பிராந்திய அலுவலகத்திற்குரிய ரம்புக்கனை தெங்கு அபிவிருத்தி அலுவலர் பிரிவில் தனியார் விதைத் தேங்காய் நாற்றுமேடையை பரிசீலனை செய்தல் | அவ் விதைத் தேங்காய் நாற்று மேடைகளிலுள்ள குறைபாடுகளை சரி-செய்வதற்கு தேவைாயன நடவடிக்கைகளை எடுத்தல் |

## 6.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம்

### இதன் நோக்கம்

உள்ளக மற்றும் பொது கணக்காய்வின் மூலம் அடையாளம் காணப்படும் பிழைகள் மற்றும் குறைபாடுகளை சரி செய்வதல், முகாமைத்துவதற்கு வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் சபையின் உள்ளகக் கணக்காய்வினை வினைதிறன் மற்றும் சக்தியுடையதாக்குதல் ஆகியவையே கணக்காய்வுக் குழுக் கூட்டத்தை நடாத்துவதன் பிரதான நோக்கமாகும்.

PED 55 சுற்றறிக்கைக்கு ஏற்ப 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். அந்த வகையில், இவ்வருடத்தில் 06 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## 6.6.1. குழு கட்டமைப்பு

| | |
|---|---|
| தலைவர் | திருமதி.முதிதா அந்ராஹென்னதி, உதவிச் செயலாளர், வங்கிப் பிரிவு, நிதி அமைச்சு |
| செயலாளர் | திருமதி.டீ.வீ.டி.டி.எஸ். கருணாரத்ன, பொது முகாமையாளர், தெங்கு பயிர்ச்செய்கை சபை |
| அங்கத்தவர் | திரு.டி.எம்.எல்.பண்டாரநாயக்க, மேலதிக செயலாளர், தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு |
| அங்கத்தவர் | திரு. சீ.ஏ. குருகே, தலமைக் கணக்காளர், தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு |
| அங்கத்தவர் | திரு. மொண்டேகு சரத்சந்திர, பணிப்பாளர், தெங்கு பயிர்ச்செய்கை சபை |
| பரிசோதகர் | திருமதி. லலனி குனதிலக்க, கணக்காய்வாளர், அரச கணக்காய்வுத் திணைகக்ளம். |
| கொள்வனவாளர் | திரு. பி.ஏ.டபிள்யு. பமுணுஆராய்ச்சி, உள்ளகக் கணக்காய்வாளர், தெங்கு பயிர்ச்செய்கை சபை |

உள்ளகக் கணக்காய்வு பரிசீலனையில் அடையாளம் காணப்பட்ட தவறுகள், குறைபாடுகள் மற்றும் அரச கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வு விசாரைனகள், ஆகியவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிலே கலந்துரையாடப்பட்டு தேவையான சரிசெய்தலுக்காக பணிப்பாளர் சபைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதோடு, அதன் அனுமதியின் பின்னர் அவ்வறிக்கை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படும்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No } வைஎஸ்/எப்/சீசீபீ/எப்ஏ/2012
ඔබේ අංකය / உமது இல / Your No. }
දිනය / திகதி / Date } 2013 செப்தெம்பர் 30

தலைவர்,
தென்னை பயிர்செய்கைச் சபை

**தென்னை பயிர்செய்கைச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தென்னை பயிர்செய்கைச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 43 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2013 யூன் 05 ஆம் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. } 2887028-34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / மின்-அஞ்சல் / E-mail. } oaggov@sltnet.lk

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தென்னை பயிர்செய்கைச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கொடுக்கல்வாங்கல்களின் தெரிவுச் செவ்வையின் போது கண்டறியப்பட்ட ரூபா 109,810,459 தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அக் குறைபாடுகள் தொடர்பாக கணக்குகளில் சீராக்கப்பட்டு திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 05 ஆம் திகதி மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டன. இதன் பிரகாரம் தெரிவிற்கு மேலதிகமாக மேலும் கணக்கீட்டுக் குறைபாடுகள் இல்லை என்பதனை கணக்காய்வின் போது தவிர்க்கப்பட முடியாததாகும்.

4

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் ரூபா 484,818,000 கூட்டுத்தொகையான அரசாங்க மீண்டெழும் மற்றும் செஸ் மானியங்கள் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் நிதிவிளைவுகள் ரூபா 2,207,368 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான ரூபா 572,891,000 கூட்டுத்தொகையான அரசாங்க மீண்டெழும் மற்றும் செஸ் மானியங்கள் உள்ளடங்கலாக ஏனைய மானியங்களைக் கணக்கிற்கு எடுத்துகொண்டதன் பின்னர் மிகை ரூபா 186,511,249 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 188,718,617 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் செஸ் மானியம் ரூபா 96.5 மில்லியனால் குறைவடைந்து நிவாரணக் கொடுப்பனவுகள் ரூபா 277 மில்லியன் தொகையால் அதிகரித்தமை நிதிவிளைவுகளின் வீழ்ச்சிக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மாதிரி தென்னந்தோட்டங்களின் செயற்பாட்டு விளைவு ரூபா 124,352,387 தொகையான தேறிய இலாபமாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 95,888,041 உடன் ஒப்பிடுகையில் இலாபத்தின் அதிகரிப்பு ரூபா 28,464,346 ஆகக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது உரப் பிரிவு ரூபா 1,236,868 மிகையை அடைந்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,172,797 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கப்ருக செயற்திட்டத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 38,744,009 மிகையாகக் காணப்பட்டதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 10,209,457 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 28,534,552 அதிகரித்துக்

காட்டப்பட்டது. முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 26.7 மில்லியன் தொகையால் அதிகரித்தமையும் வட்டி ஏற்பாடு ரூபா 3.6 மில்லியன் தொகையால் குறைவடைந்தமையும், நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடைமுறைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 வெளித்தரப்பினரால் ரூபா 12,328,805 கூட்டுத்தொகையான இழப்பீடு கோரப்பட்டு சபைக்கு எதிராக நீதிமன்றங்களில் 07 வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டிருந்தன.

(ஆ) சபையால் 04 வெளி நிறுவனங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் எதிராக ரூபா 3,144,651 தொகையான இழப்பீடு கோரி நீதிமன்றங்களில் 04 வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டிருந்தன.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 நிவாரணக் கொடுப்பனவுகள்

சபையால் மீளாய்வாண்டின் போது பல நிவாரண முறைகள் செயற்படுத்தப்பட்டு வந்ததுடன் ஆண்டின் இறுதியில் நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்குகளும் செயல்முன்னேற்றமும் பின்வருமாறு இருந்தன.

| நிவாரண நிகழ்ச்சித்திட்டம் | அலகு | இலக்கு | செயல் முன்னேற்றம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | 2009 | 2009 | 2009 |
| தென்னை/புதிய/மீள/கீழ்ப் பயிர்ச் செய்கை நிவாரண முறைமை | தென்னங்கன்று | 1,152,000 | 1,284,886 | 112 |
| தென்னங் காணிகளை புனரமைத்தல் | தென்னங்கன்று | 400,000 | 236,631 | 59 |

6

| | | | | |
|---|---|---|---|---|
| திவிநெகும நிகழ்ச்சித்திட்டம் | தென்னங்கன்று | 3,939,618 | 2,764,777 | 70 |
| "கப்ருகை சிப்னெனய்" | தென்னங்கன்று | 300,000 | 343,881 | 115 |
| சம்புத்தத்வ ஜயந்தி நிகழ்ச்சித்திட்டம் | தென்னங்கன்று | 25,000 | 25,887 | 104 |
| மாட்டுப் பண்ணை நிவாரண நிகழ்ச்சித்திட்டம் | பண்ணைகள் | 240 | 141 | 59 |
| நீர்ப்பாசன நிவாரண நிகழ்ச்சித்திட்டம் | ஏக்கர் | 750 | 507.5 | 68 |
| "கப்ருக புரவர" நிகழ்ச்சித்திட்டம் (வீட்டுத்தோட்ட நிவாரண) | தென்னங்கன்று | 3,000,000 | 1,599,679 | 53 |
| கப்ருக முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் | ஏக்கர் | 3,100 | 2,169 | 70 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புனரமைப்பு நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தென்னங்காணிகளை புனரமைப்புச் செய்வதற்காக தென்னங்காணிகளில் வெற்றிடங்களில் நடுவதற்காக 400,000 தென்னங்கன்றுகளை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வெற்றிடங்களில் நடுவதற்காக 236,631 தென்னங்கன்றுகளே வழங்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம், அதன் பௌதீக செயலாற்றல் 59 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஆ) தற்போதுள்ள தென்னங்காணிகளிலிருந்து கூடுதலான உற்பத்தியைப் பெற்றுக்கொள்ளல் தென்னங்காணிகளைப் புனரமைத்தலின் நோக்கானதுடன் அதற்காக மண்ணரிப்பைக் குறைத்தல், ஈரலிப்பைப் பேணல், வெற்றிடங்களில் நடுகை பண்ணுல் போன்ற விவசாய விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் போது தென்னங்காணிகளை புனரமைப்பதற்காக வெற்றிடங்களில் நடுவதற்காக தென்னங்கன்றுகளின் வழங்கல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு தென்னங்கன்றுகளை விநியோகித்தலின் மூலம் மாத்திரம் தென்னங்காணிகளைப் புனரமைப்பது போதுமானதாக இருக்கவில்லை.

(இ) கப்ருக புரவர வீட்டுத்தேட்ட நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 3,000,000 தென்னங்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் சபையின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வருட இறுதியில் 1,599,679

தென்னங்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. இதன் பௌதீகச் செயற்பாடு 53 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும், பிராந்திய அலுவலக மட்டத்தில் ஆய்வு செய்யப்படுகையில் 10 பிராந்திய அலுவலகங்களில் 25 சதவீதத்திற்கும் 49 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் குறைந்த செயலாற்றல் சுட்டிக்காட்டப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் போது 750 ஏக்கர் தென்னங்காணிகளுக்காக நீர்ப்பாசன நிவாரணங்களைச் செயற்படுத்தப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் சபையின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வருட இறுதியில் 507.5 ஏக்கர்களுக்காகவே இந்த நிவாரணம் வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அதன் பௌதீக செயலாற்றல் 68 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும், பிராந்திய அலுவலக மட்டத்தில் ஆய்வு செய்யப்படுகையில் மாத்தளைப் பிராந்திய அலுவலகங்களில் எவ்வித செயலாற்றலும் காணப்படாததுடன் வேறு 4 பிராந்திய அலுவலகங்களில் 35 சதவீதத்தைப் பார்க்கிலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(உ) தென்னங் காணிகளில் சேதனப் பசளை பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்குடன் மீளாய்வாண்டின் போது 240 மாட்டுப் பண்ணைகள் நிர்மாணிக்கப்படுவதற்காக உதவுதொகை வழங்கப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் சபையின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், வருட இறுதியில் 141 மாட்டுப் பண்ணைகள் நிர்மாணிக்கப்படுவதற்காக நிவாரணம் வழங்கப்பட்டிருந்தன. இதன் பௌதீகச் செயலாற்றல் 59 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும், பிராந்திய அலுவலக மட்டத்தில் ஆய்வு செய்கையில் மாத்தறை மற்றும் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகங்களில் எவ்வித செயலாற்றலும் காணப்படாததுடன் மேலும் 6 பிராந்திய அலுவலகங்களில் செயலாற்றல் 35 சதவீதத்தைப் பார்க்கிலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 4.1.2 மாதிரித் தென்னந் தோட்டம்

2012 ஆம் ஆண்டின் போது மாதிரி தென்னந்தோட்டங்களாக 12 தோட்டங்கள் சபையால் முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்தன. மேற்குறித்த தென்னந் தோட்டங்கள் தொடர்பான சில தரவுகள் கீழே தரப்படுகின்றன.

8

| மாதிரி தென்னந் தோட்டங்கள் | பயிரிடப்பட்டுள்ள காணியின் அளவு | விளைச்சல் தரும் மரங்களின் எண்ணிக்கை | பறிக்கப்பட்ட தேங்காய்கள் | விழுந்த தேங்காய்கள் | வருடாந்த விளைச்சல் காய்கள் | விழுந்த தேங்காய்கள் | ஒரு மரத்தின் வருடாந்த சராசரி விளைச்சல் | ஏக்கருக்கான விளைச்சல் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏக்கர் | | தேங்காய்கள் | தேங்காய்கள | தேங்காய்கள | சதவீதம் | தேங்காய்கள | தேங்காய்கள |
| நாகன்சோல | 347 | 15,274 | 528,319 | 293,232 | 821,551 | 36 | 54 | 2,368 |
| ரன்தெனிய | 311 | 13,519 | 470,932 | 309,168 | 780,100 | 40 | 58 | 2,508 |
| லேனாவ | 481 | 20,975 | 829,064 | 131,586 | 960,650 | 14 | 46 | 1,997 |
| போபிடிய | 104 | 4,717 | 234,957 | 140,004 | 374,961 | 37 | 79 | 3,605 |
| கேர்ட்லண்ட் | 388 | 14,385 | 606,716 | 396,873 | 1,003,589 | 40 | 70 | 2,587 |
| கொரேய் | 173 | 5,423 | 262,235 | 40,448 | 302,683 | 13 | 56 | 1,750 |
| பாசிகுடா | 47 | 3,123 | 281,583 | 27,745 | 309,328 | 9 | 99 | 6,595 |
| மஹயாய | 290 | 11,448 | 679,393 | 385,011 | 1,064,404 | 36 | 93 | 3,670 |
| டேசிவெலி | 299 | 14,219 | 667,617 | 488,166 | 1,155,783 | 42 | 81 | 3,868 |
| முந்தல் | 14 | 710 | 60,917 | 9,646 | 70,563 | 14 | 99 | 4,952 |
| கொஹொபான | 82 | 3,776 | 297,309 | 105,205 | 402,514 | 26 | 107 | 4,909 |
| பளை | 86 | 5,522 | 132,160 | 18,484 | 150,644 | 12 | 27 | 1,752 |
| மொத்தம் | 2,622 | 113,091 | 5,051,202 | 2,345,568 | 7,396,770 | 32 | 65 | 2,821 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் மொத்த தேங்காய் விளைச்சல் 7.39 மில்லியன் தேங்காய்களாகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17 சதவீதமான அதிகரிப்பாகும்.

(ஆ) தெங்கு ஆராய்ச்சிச் சபையால் வெளியிடப்பட்ட "தென்னம் பயிர்ச்செய்கைக்கான பசளைப் பயன்பாடு மற்றும் காணியின் பொருத்தத் தன்மை" அறிவுறுத்தல் சஞ்சிகை இல. 1 இன் பிரகாரம் தென்னப் பயிர்ச்செய்கைக்காக காணியின் பொருத்தத்தன்மை எஸ் 1 முதல் என் 2 வரையான 7 பொருத்தத்தன்மை வகுப்புகளுக்கு வகைப்படுத்தப்பட்டிருந்தன. இதன் 3 ஆம் வகுப்பான "எஸ் 3 – பொருத்தத்தன்மை" எனும் பெயர்கொண்ட பொருத்தத்தன்மை வகுப்பிற்கு அமைய ஒரு வருடத்திற்கு ஒரு ஏக்கர் தென்னம் பயிர்ச்செய்கையிலிருந்து 4,048 - 5,060 வரையான தேங்காய்களின் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக்

9

கூடியதாக இருந்த போதிலும் சபையின் மூலம் பராமரிக்கப்படும் 12 மாதிரித் தென்னந் தோட்டங்களில் பாசிகுடா, முந்தல், கொஹொபான தோட்டங்கள் தவிர்ந்த ஏனைய தோட்டங்கள் இம் மட்டத்தை எய்த முடியாதிருந்தன.

(இ) லேனாவ மாதிரித் தென்னந் தோட்டத்தின் ஒரு மரத்தின் வருடாந்த சராசரி விளைச்சல் 50 காய்களைப் பார்க்கிலும் குறைவாகக் காணப்பட்டது.

(ஈ) மஹயாய, நாகன்சோல போபிடிய ரன்தெனிய கேர்ட்லன்ட் மற்றும் டேசிவெலி எனும் 6 மாதிரித் தென்னந்தோட்டங்களில் விழுந்த தேங்காய்களின் சதவீதம் 36 முதல் 42 சதவீதமான வீச்சில் மிக உயர்ந்த எண்ணிக்கையைக் கொண்டிருந்தமையால் தேங்காய்களைப் பறித்தல் உரிய காலத்தில் இடம்பெற்றிருக்கவில்லை.

### 4.1.3 நோய்க் கட்டுப்பாடு

-------------------------------

வெலிகம ஓலை கருகுதல் மற்றும் ஓலை வாடுதல் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக இனங்காணப்பட்ட ஒரே முறையான நோயுள்ள மரங்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எய்தப்படுவதற்கு 1999 இன் 35 ஆம் இலக்க பயிர்ப் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் 4(2) ஆம் உப பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளைப் பத்திரத்தின் பிரகாரம் நோயை இனங்கண்ட நாள் முதல் 14 நாட்களுக்குள் நோயுற்ற மரங்களைப் பிடுங்கி அழிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வாறு பிடுங்கி அழிப்பதற்கு முடியாது தாமதமான நோய்வாய்ப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 26,449 ஆகக் காணப்பட்டது.

நோய்வாய்ப்பட்ட மரங்கள் நோய்வாய்ப்பட்ட காலப்பகுதியில் இவ்வாறு பிடுங்கி அழிக்கப்பட்டிராமையால் நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக எடுக்கப்பட்ட இந் நடைமுறை தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளை அடைந்து கொள்ளமுடியாமை ஆபத்துக் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

10

### 4.1.4 கப்ருக புரவர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மக்கள் நாற்று மேடைகளை ஸ்தாபித்தல்

---

மீளாய்வாண்டின் இறுதி வரை காலி முதல் தங்காலை வரையான நோய் வலயத்தில் வெலிகம ஓலை கருகுதல் மற்றும் ஓலை வாடுதல் நோய்த் தன்மை காணப்பட்டது. உரிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தற்போது அந்நோய் காணப்படவில்லை என 1623/11 ஆம் இலக்க 2009 ஒக்டோபர் 14 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இந் நிலையில் சபையின் மூலம் அப் பிரதேசத்தில் தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களைத் தேர்ந்தெடுத்து 14 மக்கள் நாற்றுமேடைகள் 4 பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் மேற்குறித்த வர்த்தமானியின் 11 ஆம் 12 ஆம் அறிவித்தல்களுக்கு முரணாக நோய் பரவிய வலயங்களில் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்வதன் மூலம் இந்நோய்க் கட்டுப்பாட்டுச் செயற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவை எய்த முடியாதிருந்தது. இவ்வாறே மக்கள் நாற்றுமெடைகளுக்கு வழங்கப்படும் விதைத்தேங்காய்களிலிருந்து 70 சதவீதமான நாற்றுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் மக்கள் நாற்றுமேடைகளில் எஞ்சியுள்ள தென்னங்கன்றுகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிராமையால் நோய் பரவியுள்ள வலயத்தில் உள்ள இந்த மக்கள் நாற்றுமேடைகளில் எஞ்சும் தென்னங்கன்றுகள் நோய் பரவியுள்ள வலயங்களுக்கும் பாதுகாப்பு வலயங்களுக்கும் வெளியே செல்லும் ஆபத்து காணப்படுகின்றது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 4.1.5 தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

---

தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் மூலம் இந் நிலையத்திலும் நிலையத்தின் தலையீட்டுடனும் கண்காணிப்பின் கீழ் பிராந்திய அலுவலகங்களினூடாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட 15 நிகழ்ச்சித்திட்டங்களில் 3 நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றல் 60 சதவீதமாகக் காணப்பட்டதுடன் நிலையத்தின் கண்காணிப்பின் கீழ் பிராந்திய அலுவலகங்களின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த 3 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களில் பாடசாலை மற்றும் கிராமிய அமைப்புகளுக்கான 2

11

விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் செயல் முன்னேற்றம் முறையே 55 சதவீதமாகவும் 62 சதவீதமாகவும் காணப்பட்டது.

## 4.2 பதவியணி நிர்வாகம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 05 | 03 | 02 |
| மூன்றாம் மட்டம் | 44 | 16 | 28 |
| இரண்டாம் மட்டம் | 725 | 417 | 308 |
| ஆரம்ப மட்டம் | 151 | 107 | 44 |
| | 925 | 543 | 382 |

செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குரிய 382 பதவிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2012 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடுகளில் மாதிரித் தென்னந்தோட்டங்களின் எண்ணிக்கை, நாற்று மேடைக அலகுகள், உற்பத்தி அலகுகள் என சுய நிதி அலகுகளாக இனங்காணப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 995,603,000 தொகையான வருமானத்தை உழைப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. அவ்வாறு ஒவ்வொரு அலகுகளால் உழைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த வருமானம் வெவ்வேறாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும்

12

அவ்வருமானத்தை உழைக்கும் விதம் குறித்து விபரமான தகவல்கள் பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) மனிதவள முகாமைத்துவம்
(இ) தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
(ஈ) களஞ்சிய நடைமுறைக் கோவை
(உ) நாற்று மேடை முகாமைத்துவம்
(ஊ) தோட்ட முகாமைத்துவம்

எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*

**தெங்கு பயிர்ச்செய்கை சபையின் 2012 டிசம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கை தொடர்பாக 1971 இன் 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (C) பிரிவிற்க்கமைய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான சபையின் விளக்கமளித்தல்.**

**3.1 நிதி பெறுபேறு**

2012 ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீட்டுக்கமைய சபையால் திட்டமிடப்பட்ட தெங்கு பயிர் அபிவிருத்தி, மூலதன பொருட்கொள்வனவு மற்றும் மூலதன நிர்மாணங்களுக்கான செயற்பாடுகளின் பெறுமதி 700.00 மில்லியன் ரூபாவாகும். இந்த முழு ஒதுக்கீடும் திறைசேரியிலிருந்து இந்த ஆண்டினுள் சபைக்கு கிடைக்கும் எனும் எதிர்பார்ப்புடன், அமைச்சினால் தயாரிக்கப்பட்ட தந்திரோபாய திட்டத்துக்கமைய 2012 ஆண்டுக்கென தயாரிக்கப்பட்ட சபையின் செயற்பாட்டு திட்டத்துக்கமைய அனைத்து அபிவிருத்திப் பணிகளும் அமுல்படுத்த ஆரம்பிக்கப்பட்டது. அதற்க்கமைய விதை தென்னம்பிள்ளைகள் 90 இலட்சம் பயிரிடுதல், “கப்றுக்க புறவற” ஆரம்பித்தல் மற்றும் ஏனைய மூலதன அபிவிருத்தி செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன. அதன்படி ஆண்டின் இறுதியில் சபையால் அமுல்படுத்தப்பட்ட தெங்கு பயிர் அபிவிருத்தி செயற்பாட்டுக்காக 570.57 மில்லியன் ரூபாவும், ‘கப்ருக்க’ முதலீட்டு கடன் திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கையாளர்களின் வட்டி நிவாரணமாக 6.84 மில்லியன் ரூபாவும், மூலதன செலவாக 41.4. மில்லியன் ரூபாவும், 618.81 மில்லியன் ரூபாவும் அபிவிருத்தி செலவு மேற்கொள்ளப்பட்டது.

இதற்கென ஆண்டின் ஒருங்கிணைந்த நிதியத்திடமிருந்து ஒதுக்கப்பட்டிருந்த 700 மில்லியன் ரூபா நிதி சபையால் வழங்கப்பட்ட நிதிப்பிரவாக கூற்றுக்கமைய வழங்குமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தும், சபைக்கு ஆண்டில் கிடைத்துள்ள அபிவிருதி நிதி 259.00மில்லியன் ரூபா மட்டுமேயாகும்.

அதற்க்கமைய 359.81 மில்லியன் ரூபா நிலுவையாகும். இந்த நிதி 2011 ஆண்டின் இறுதியில் கிடைத்திருந்த மூலதன ஒதுக்கீடுகளிலிருந்தும், முன்னைய ஆண்டில் சபையால் உழைக்கப்பட்டிருந்த 156.24 மில்லியன் ரூபா தேறிய இலாபம் 2012 ஆண்டில் 219.81 மில்லியன் ரூபா வரை 63.57 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்கப்பட்ட நிதி மற்றும் நாற்று தென்னம்பிள்ளைகளுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட 215.46 மில்லியன் ரூபா நிதியினால் நிரப்பப்பட்டிருந்தும், 2.20 மில்லியன் ரூபா நிதி நிலுவையாக கணக்கு அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த நிதி உரியவாறு கிடைக்குமாயின் இந்த பெறுமானம் பற்றாக்குறையாக கணக்கு அறிக்கைகளில் காட்டப்பட்டிருக்காது.

**3.3 நிறுவனத்துக்கெதிராக, மற்றும் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ சம்பவங்கள்**

**சபைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகள்**

**வழக்கு இலக்கம் 3010M – பலப்பிற்றிய**

சபைக்குரிய GH- 2885 இலக்க பேரூந்து பயிற்சி கருத்தரங்குக்காக சென்று திரும்பும்போது இன்னொரு பேரூந்துடன் மோதியதில் விபத்துக்குள்ளான மூன்றாம் தரப்பினரான நிஹால் ரஞ்சித் என்பவரால் சபையிடமிருந்து இழப்பீடு கோரி தொடரப்பட்ட வழக்கு. இந்த விபத்து தொடர்பில் சபையினால் ஒழுக்காற்று விசாரணை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது பலப்பிட்டிய மாவட்ட நீதிமன்றில் வழக்கு விசாரணை நடைபெறுகிறது.

**வழக்கு இலக்கம் 128/2011 – மாத்தளை 8080/17**

கடமைக்காக செல்லும்போது G 0803 இலக்க பாரஊர்தி தொழிநுட்ப கோளாறு

காரணமாக கலோவல ஓமாரகொல்ல பிரதேசத்தில் விபத்துக்குள்ளானது. அதன்போது இரு வெளித் தரப்பினர் சாவடைந்தனர். அதற்க்கென மாத்தளை தாக்கல் செய்யப்பட்டிருந்த 8040/17 இலக்க இழப்பீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இருப்பினும் மீண்டும் கண்டி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 128/2011 இலக்கத்தின் கீழ் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன், அது தற்போது விசாரிக்கப்பட்டு வருகிறது. இதற்குரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பதுளை மேல்நீதிமன்றம்**

தெங்கு செய்கையாளர்களிடமிருந்து மோசடியாக பணம் பெற்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் ஆரம்ப விசாரணை மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அத் தீர்மானத்துக்கமைய பணிப்பாளர் சபையின் தீர்மானப்படி தெங்கு அபிவிருத்தி அலுவலராக பணியாற்றிய எல். கப்புகின்ன என்பவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அதற்க்கெதிராக திரு. எல். கப்புகின்ன அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

**மாரவில மாவட்ட நீதிமன்றம்**

தெங்கு பயிர்ச்செய்கை சபையில் அப்போதிருந்த தவிசாளரால் அனுப்பப்பட்ட கடிதத்தினால் அவதூறுபடுத்தப்பட்டதாக கூறி ஜே.ஏ.ஆர்.சீ. பெர்னாந்துபிள்ளை எனும் பெயருடைய பதவிநிலைப் பணியாளரால் இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காகும். தற்பொது இந்த வழக்கு மாரவில மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறுகிறது.

**குருணாகல் மேல்நீதிமன்றம் - HCALT/9/2012**

நன்னடத்தை காலத்தினுள் சேவை திருப்தியீனம் காரணமாக தெங்கு பயிர்ச்செய்கை சபையின் சேவையிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட ஐ.கே.ஏ. ஜயவர்த்தன எனும் பெயருடைய தெங்கு அபிவிருத்தி அலுவலரால் மீண்டும் தொழிலை பெறுவதற்காகவும், வேறு நிவாரணங்கள் பெறுவதற்க்காகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அது தொழில் நியாய சபையில் தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் அவரால் குருணாகல் மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்து வழக்குதாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வழக்கு தற்போது விசாரிக்கப்பட்டு வருகிறது.

**I. தொழிலாளர் இழப்பீட்டு வழக்கு – சிலாபம்**

தொ.இல/C30/180/2010(COL)

கடமையில் ஈடுபட்டிருந்தபோது வேறொரு பணியாளரால் தாக்கப்பட்டு உடல் பாதிப்பு ஏற்படுத்தியதாக குறிப்பிட்ட வழக்காகும். இந்த தாக்குதல் தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு தாக்குதல் நடத்திய பணியாளருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள எஸ்.எம்.என்.பீ. வர்ணகீர்த்தி என்பவர் சபையிடமிருந்து இழப்பீட்டு பணம் கோரியுள்ளார். இந்த வழக்கு விசாரணை நடைபெறுகிறது.

**II. குருணாகல் தொழில் நியாய சபை – 23KU/9799/2009**

இடமாற்றம் காரணமாக பணிக்கு சமூகமளிக்காமையின் பொருட்டு ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டு பணிப்பாளர் சபையின் தீர்மானத்துக்கமைய பணிநீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக மீண்டும் தொழில் பெறுவதற்க்காக தொழில் நியாய சபையில் இந்த வழக்கு எஸ்.எம்.என்.பீ. வர்ணகீர்த்தி என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ் வழக்கு விசாரணை தற்போது நடைபெறுகிறது.

**உயர்நீதிமன்ற வழக்கு இல – SC/HC/2A/81/2012**

வேலையிலிருந்து தானாக விலகிச்சென்ற ஏ.எஸ்.எம். குணசேகர எனும் சபை பணியாளரால் அவருக்கு ஏற்பட்டதாக குறிப்பிடும் நியாயமின்மைக்காக சபையிட மிருந்து இழப்பீடு கோரி தாக்கல் செய்த வழக்காகும். இந்த வழக்குக்காக தொழில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்காக சபை மூலமாக தற்போது உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மேன்முறையீடு தற்போது விசாரிக்கப்படுகிறது.

## சபையால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள்

**கடுவெல மாவட்ட நீதிமன்றம் 82/M**

வெளிநாட்டு தொழிலுக்கு செல்வதற்க்கென வெளிநாடு சென்று உடன் படிக்கைக்கமைய மீண்டும் சேவைக்கு அறிக்கை செய்யாமை காரணமாக உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட இழப்பீட்டு பணத்தை பெறுவதற்க்காக சபையால் என்.எஸ்.கே. விஜயநாயக்க என்பவருக்கெதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு தற்போது கடுவெல மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகிறது.

**கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வழக்கு இல – 26624 MR**
**டபிள்யு.ஜே. வாஸ் அன்ட் கம்பனி**

சபையின் மாதிரி விதை தென்னந் தோட்டத்திலிருந்து பெற்றுக்கொண்ட தேங்காய்களுக்காக வழங்கப்பட்ட காசோலை பெறுமதியற்றுப்போனமை காரணமாக அறவிடவேண்டிய ரூபா. 1,335,600.ஃஸ்ரீ தொகையை அறவிடுவதற்க்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தெங்கு பயிர்ச்செய்கை சபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். இப்பணத்தை செலுத்துமாறு நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளதுடன், எதிராளிகளால் அந்த தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டு தற்போது விசாரணை நடைபெறுகிறது.

**கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் - 25030 – வெஸ்டர்ன் புரோக்கர்ஸ் கம்பனி**

சபையின் மாதிரி விதை தென்னை தோட்டங்களிலிருந்து காசோலை பெற்றுக்கொண்டு வழங்கப்பட்ட தேங்காய்களுக்காக வழங்கப்பட்ட காசோலை பெறுமதியற்றுப்போனமை காரணமாக வெஸ்டர்ன் புரோக்கர்ஸ் கம்பனியிடமிருந்து அறவிடவேண்டிய பணமாகும். இப்பணத்தை பெற்றுக் கொள்வதற்க்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள போதும், குறித்த கம்பனி உரிமையாளர்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் நாட்டைவிட்டு சென்றுள்ளமையினால் அழைப்புக்கட்டளையை ஒப்படைக்க இலக்கத்தை கண்டுபிடிக்க முடியாதுள்ளது என அறிக்கை செய்யப்பட்டுள்ள வழக்காகும். அதனால் தொடர் நடவடிக்கை எடுப்பதற்க்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

**4.1.1 மானியம் செலுத்துதல்**

வழிமுறைகளை பின்பற்றுதல், சிறந்த முகாமைத்துவம், காரணமாக இம்முறையிலான தேங்காய் அறுவடையை அதிகரித்துக் கொள்ளலாம்.

ஆ) தென்னை ஆராச்சி நிறுவனத்தில் வெளியீடுகள் மற்றும் ஆராச்சிகளுக்கமைய தென்னங்காணிகளின் மண் தன்மைக்கேற்ப ளு1 – ே2 வரை 7 வலயங்களாக வகைப் படுத்தப்பட்டுள்ளது. தெங்கு பயிர்ச்செய்கை சபையின் தென்னங்காணிகளில் 75மூத்திற்கு அதிகமான அளவு ளு4 வலயத்தில்

அமைந்துள்ளது.

ளு4 வலயத்தில் தேங்காய் அறுவடை ஏக்கரொன்றுக்கு 2024 இலிருந்து 4048 வரை இருப்பதாக தெங்கு ஆராச்சி நிறுவனத்தின் வெளியீடுகளுக்கமைய தெளிவுபடுத் தப்பட்டுள்ளது. இதற்க்கமைய சபையின் மாதிரி தென்னம் தோட்டங்களில் பெரு மளவானவற்றில் இந்த அறுவடை எட்டப்பட்டுள்ளது. ளு4 வலயத்தில் வருடாந்தம் ஏக்கரொன்றில் 4000 தேங்காய்கள் அறுவடையை தென்னை பயிருக்கு பொருத்தமான மண், சிறந்த வானிலை மூலமாக அடையலாம். அதன்படி சபையின் தோட்டங்களில் வடபகுதி தோட்டங்கள் சிலவற்றைத் தவிர எஞ்சிய தோடடங்களில் ளு4 வலயத்தினுள் கிடைக்கக்கூடிய பொதுவான தேங்காய் அறுவடை கிடைத்துள்ளது. அதற்க்கு மேலதிகமாக சபையால் நிர்வகிக்கப்படும் பனை மாதிரி தென்னந்தோட்டம், கொரெய் மாதிரி தென்னந்தோட்டம் ஆகிய மாதிரி தென்னந் தோட்டங்களிரண்டும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் இரண்டாகும். கடந்த காலத்தில் நாட்டில் நிலவிய போர் சூழ்நிலையில் இக்காணிகள் உரியவாறு முகாமைத்துவம் செய்யப்படாமை காரணமாக உரிய அபிவிருத்தி செயற்பாடுகள் நிறைவேற்றப்படவில்லை. மீண்டும் சமாதானம் ஏற்பட்டவுடன் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. அதன் காரணமாக இந்த மாதிரி தென்னந்தோட்டங்களின் தேங்காய் அறுவடை எதிர்காலத்தில் எதிர்பார்த்த இலக்கை நோக்கி உயர்வடையும்.

சேவை மாதிரி தென்னந்தோட்டத்தின் உற்பத்தி குறைந்தமைக்கான காரணம் 4.1.2 (இ) யில் காட்டப்பட்டுள்ளது.

இ) சேவை மாதிரி தென்னந்தோட்டத்தில் 2012 ஆண்டில் வருடாந்த தேங்காய் அறுவடை 960, 650 தேங்காய்களாகும். இந்த மாதிரி தென்னந்தோட்டத்தின் மொத்த தென்னை மரங்களின் எண்ணிக்கை 22,510 ஆகும். அம் மரங்கள் கீழ்வரும் வயதுப்பிரிவு களுக்குரியதாகும்.

| **வயது பிரிவு – ஆண்டுகள்** | **தென்னை மரங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 0-4 பயன்தராத | 2477 |
| 5-9 பயன்தர தொடங்குதல் | 3000 |
| 10-19 சிறந்த பயன் கிட்டும் | 4881 |
| 20-49 சிறந்த பயன் கிட்டும் | 8253 |
| 50 மேல் பயன் குறைவடையும் | 3899 |
| **மொத்தம்** | **22,510** |

அதற்கமைய மா.தெ.தோட்டத்திலிருந்து சிறந்த விளைச்சல் கிடைக்கும் தென்னைகள் 13,134 ஆகும். (4881 ¸ 8253 ஸ்ரீ 13இ134). இதன்படி விளைச்சல் குறைவடைந்துள்ள 50 வயதை கடந்த 3,899 மரங்கள் அடங்கலாக மொத்த மரங்களின் எண்ணிக்கை 17,033 அதன்படி தோட்டத்தின் பொதுவான வருடாந்த தேங்காய் விளைச்சல் மரமொன்றுக்கு 56.4 தேங்காய்களாகும். (960,650 ∴ 17,033 ஸ்ரீ 56.4). இருந்தபோதிலும் பயன்தரும் ஏனைய மரங்கள் 2162 உள்ள இரண்டாம் பிரிவின் தேங்காய் விளைச்சல் 171,774 பெறப்பட்டுள்ளதுடன், அங்கே மரமொன்றின் விளைச்சல் 79.5 ஆகும். பயன்தரும் 4,849 மரங்களுள்ள மூன்றாம் பிரிவின் வருடாந்த விளைச்சல் 338,562 ஆகும். அது மரமொன்றின் பொதுவான விளைச்சலில் 69.8 தேங்காய்களாக உள்ளது. அதற்க்கமைய தோட்டத்தின் கூடுதலான பகுதியில் புதிதாக பயிரிடப்பட்டுள்ளதனால் பயன்தரும் மரங்கள்

பல்வேறு வயது பிரிவுகளில் அடங்குவதனால் மரமொன்றின் பொதுவான விளைச்சல் குறைந்த மட்டத்தில் தற்போது காணப்பட்டாலும் எதிர்காலத்தில் தற்போது பயிரிடப்பட்டுள்ள மரங்கள் பயன்தரும் மட்டத்தை அடைந்தவுடன் மரமொன்றின் சராசரி விளைச்சல் உயர்மட்டத்தை அடையும்.

இ) தெங்கு பயிர்ச்செய்கை சபையின் மாதிரி சபையின் மாதிரி தென்னந்தோட்டங்களின் சில பிரிவுகளில் பழைய பயிர்களிடையே புதிய பயிர் நடுகை செய்யப்பட்டுள்ளது. அந்த புதிய பயிர்களுள்ள பிரிவுகளில் உயரம் கூடிய மரங்களிலிருந்து தேங்காய் பறிப்பதற்காக உயரமான கத்திகளை பயன்படுத்துவது சிரமமானது. அதனை விடவும் இந்த உயரமான மரங்களின் விளைச்சல் குறைவாக இருப்பதனால், மரமேறுபவர்களை ஈடுபடுத்தி பறிப்பதற்க்கு கூடுதலாக செலவு செய்ய வேண்டியுள்ளது. எனவே அந்த மரங்களின் விளைச்சல் அறுவடை செய்யப்படுவதில்லை. அதன் காரணமாக விழும் தேங்காய்களின் விகிதம் கூடுதலாக உள்ளது. இதுபோன்ற தோட்டங்களில் தேங்காய்கள் விழுவதற்கு இடமளித்து நாளாந்தம் குறித்த விதிமுறைப்படி நெருக்கமான மேற்பார்வையுடன் தேங்காய் அறுவடை சேகரிக்கப்படுவதனால் விழுந்த தேங்காய்களின் தொகை உயர்வாக உள்ளது.

4.1.3 வெலிகமவில் தேங்காய் அழுகுதல் மற்றும் ஒல்லியாதல் நோயுடைய மரங்களை அகற்றுவதனை மக்கள் எதிப்பதே இதற்க்கு காரணமாக உள்ளது. மக்கள் குழப்பமடையாத வகையில் இது மேற்கொள்ளப்பட வேண்டும். 1999 ஆண்டின் தாவர பாதுகாப்பு சட்டத்துக்கமைய மரங்களை அகற்றாத பயிர்ச்செய்கையாளர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றபோதிலும், இதுவரையும் இச்சட்டத்தின் மூலம் விவசாய திணைக்களம் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதனால், சட்டமா அதிபர் திணைக்களத்தினாலும் இந்த சட்டத்தின் குறைகளை காட்டி சட்ட நடவடிக்கை எடுப்பது தவிர்க்கப்பட்டது.

எப்படியிருப்பினும் சட்டத்துக்கமைய தென்னை மரங்களை அழிக்கும் அதிகாரம் எமக்குரியது என்பதனால் தெங்கு ஆராச்சி நிறுவனத்தின் விதந்துரைக்கமைய மரங்களுக்கு ஊசி ஏற்றி அழிக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த ஆண்டில் 2008 இலிருந்து இற்றைவரை மரங்களை அகற்றும் உயர் முன்னேற்றத்தை எட்டி 79,156 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன.

4.1.4 சமூக தென்னை நாற்று பண்ணைகள் சில தென்னை ஆராச்சி நிறுவனத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட நோய் வலயத்துக்கு வெளியே உள்ள பாதுகாப்பு வலயத்திலும், வெளியே நோயற்ற மரங்களுள்ள கிராம அலுவலர் சேவகர் பிரிவுளில் அமைந்துள்ளன. இது பாதுகாப்பு காவலரண்களுக்கும் வெளியிலுள்ள பிரதேசமாகும். அதன் காரணமாக ஆபத்து இல்லை என்பதே எமது கருத்து. இருப்பினும் அப்பிரதேசங்களில் மீண்டும் சமூக நாற்றுப்பண்ணைகளை அமைக்க வேண்டாமென ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. (உதாரணமாக அத்துரலிய பிரதேச செயலக பிரிவு நோயுள்ள பிரதேச செயலக பிரிவு என வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தும், ஒரு கிராம அலுவலர் பிரிவு மாத்திரமே நோய் வலயத்துக்குரியதாகும்.) பாதுகாப்பு வலயத்துக்குரியதான கிராம அலுவலர் பிரிவுகள் 16 ஆகும். நோய் எங்குமே இல்லாத பாதுகாப்பு வலயத்துக்கும் வெளியேயுள்ள கிராம அலுவலர் பிரிவுகள் எண்ணிக்கை 11 ஆகும்.

4.1.5 – 60மூ இலக்கு அடையப்பட்ட ஒரு செயற்திட்டமானது விரிவாக்கல் சேவை

ஆளணியினருக்கான கணனி பயன்பாடு தொடர்பான பயிற்சியாகும். இதற்க்கென தெங்கு பயிர்ச்செய்கை சபையின் வளங்கள் வரையறுக்கப்பட்டது என்பதனால் குளியாப்பிட்டி பல்தொழில்நுட்ப நிறுவனத்தின் சேவையை பெறுவதற்க்கு நடவடிக்கை எடுத்த போதிலும் அந்த நிறுவனத்தால் அந்த வசதிகள் 2012 டிசம்பர் மாதத்திலேயே வழங்கப்பட்டது. அதன்படி முன்னேற்றம் 60மூ ஆகும்.

தற்போது 2012 பெரும்போகத்தில் தென்னம் பிள்ளைகள் உச்ச எல்லையை அடைந்தமையால், தென்னை அலுவலர்களை அதற்க்காக இணைத்து கொள்ள முடியாமையும் இதில் தாக்கம் செலுத்தியது.

60மூ ஆன இரண்டாவது செயற்திட்டமானது செய்கையாளர்களுக்கு தொழிநுட்ப விடயங்களை தெளிவுபடுத்தும் இருநாள் செயற்திட்டமாகும். இந்த செய்கையாளர்களின் கோரிக்கைக்கமைய இருநாள் செயற்திட்டம் மட்டுப்படுத்தப்பட்டதனால் அதன் முன்னேற்றம் 60மூ ஆக இருந்தது. இருப்பினும் அவர்களது கோரிக்கைக்கமைய ஒரு நாள் பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அதன் முன்னேற்றம் 190மூ வரை உயர்ந்தது.

60மூ ஆன அடுத்த முன்னேற்ற அறிக்கையானது கப்ருக்க புரவர செயற்திட்டத்தின் நோய் மற்றும் கிருமிகள் ஒழிப்பு முகாமைத்துவ கருத்தரங்காகும். இதற்க்காக ஒரு நிபுணத்து அலுவலரே இருப்பதனால் இந்த செயற்திட்டத்தின் 60மூ க்கு மட்டுப்படவேண்டி ஏற்பட்டது. அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் மேற்பார்வையின்கீழ் பிரதேச முகாமையாளர்களால் நடத்தப்படும் பாடசாலை பிள்ளைகளை அறிவூட்டும் செயற்திட்டம் 55மூ க்கு மட்டுப்படுத்தப் பட்டதற்குக் காரணமாக இருப்பது தெங்கு அபிவிருத்தி அலுவலர்கள் 09 மில்லியன் தென்னங்கன்றுகளை பகிர்ந்தளிக்கும் இலக்குக்காக சென்றமையால் வெளிக்கள கடமைகள் கூடுதலாக இருந்தமையாகும்.

62மூ ஆன அடுத்த முன்னேற்ற அறிக்கையானது கிராமிய அமைப்புகளின் உறுப்பினர்களைப் பயிற்றுவித்தலாகும். இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் தெங்கு அபிவிருத்தி அலுவலர்களின் வேலப்படுவே இந்த முன்னேற்ற குறைவுக்கு காரணமாகும்.

5.1 மாதிரி தென்னந்தோட்டங்கள் உட்பட்ட சுய அலகுக்கான விபரமான பாதீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், அதிலுள்ள தெளிவற்ற தன்மை காரணமாக அந்த பாதீட்டு அறிக்கை மற்றும் சாராம்ச அறிக்கை மட்டும் சபையின் பாதீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் குறித்த விபரமான அறிக்கை சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.



**(சரத் கீர்த்திரத்ன)**
**தவிசாளர்**
**தெங்கு பயிர்ச்செய்கை சபை.**